விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + 16
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 08 ஞாயிற்றுக்கிழமை (21.03.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 092

## பசறையில் விபத்து; 15 பேர் பலி

**200 அடி பள்ளத்தில் பாய்ந்த பேருந்து**



03

## 13ஆவது திருத்தம் தொடர்பில் இந்தியாவுடன் பேச்சு நடத்துவோம்

### அழுத்தங்களுக்கு அடிபணிய மாட்டோம்
### அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல

(கொழும்பு)
13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இந்தியாவுடன் பேச்சு வார்த்தை நடத்த முடியும் என ஊடகத்துறை 15

## கிளிநொச்சியில் கன மழையுடன் மினி சூறாவளி

**5 வீடுகள் சேதம்**

(கிளிநொச்சி)
கிளிநொச்சியில் நேற்று மதியம் வீசிய கன மழையுடன் ஏற்பட்ட மினி 15

## வவுனியாவில் கைக்குண்டு மீட்பு



(வவுனியா)
வவுனியா கொந் 15

## வடக்கில் நேற்று 3 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாணத்தில் மேலும் 15

## ஐ.நாவில் இலங்கை குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்

3ஆம் பக்கம் பார்க்க

## இணையவழி சர்வதேச மாநாட்டில்
# தமிழர்களின் நில ஆக்கிரமிப்பு தொடர்பில் ஆராய்வு

### நவநீதம்பிள்ளை – ரொனி பிளேயரின் பாரியாரும் பங்கேற்பு

(ஜெனிவா)

**தமிழர்களின் நில ஆக்கிரமிப்பு தொடர்பில் சர்வதேச இணையவழி மாநாட்டில் ஆராயப்பட்டுள்ளது. ஜெனிவாவில் இலங்கைக்கு இது மிகப்பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.**

தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களான வடக்கு - கிழக்கில் தீவிரம் அடைந்துள்ள நில அபகரிப்பு தொடர்பிலும் இதற்கெதிராக மேற்கொள்ள வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "தமிழர் தாயகத்தை இழத்தல்; தமிழர் நிலத்தை பாதுகாப்பதற்கான உபாயங்களை வகுத்தலும் பிரச்சினைகளை இனம் காணுதலும்" என்ற தலைப்பிலான சர்வதேச மாநாடு நேற்று நடைபெற்றது.

இந்த மாநாட்டில் 15

## சுயநிர்ணய உரிமையை அனுபவிக்க தமிழினம் போராடி வருகின்றது

### இணைய வழியிலான ஐ.நா உரையில்
### கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(யாழ்ப்பாணம்)
தமிழ்த் தேசமானது தமது சுயநிர்ணய உரிமையை அனுபவிப்பதற்காக தொடர்ந்து போராடி வருவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

ஐ.நா மனித 15

## ஐ.நாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு

### இந்தியா ஆதரவளிக்க வேண்டும்
### பழ.நெடுமாறன் தெரிவிப்பு

(சென்னை)
ஐ.நா. மனித உரிமைக் குழுக் கூட்டத்தில் இலங்கை அரசுக்கு எதிராக பிரிட்டன் உட்பட பல நாடுகள் இணைந்துகொண்டு வரவிருக்கும் தீர்மான 15

## யாழில் ஹெரோயின் போதை விற்பனை

### சிறைச்சாலை உத்தியோகத்தர் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவர் மதுவரித் 15

## கொரோனா மேலும் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)
கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாய 15

### ஊடகங்கள் விரும்பியபடி
## நாட்டைக் கொண்டு செல்ல முடியாது

### அனைவருக்கும் பாடம் புகட்டுவேன் – கோட்டா

(கொழும்பு)
ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்கள் தாங்கள் விரும்பியபடி 15

## விசேட விலைக்கழிவு...

கர்ப்பிணிப் பெண்களுக்கான அனைத்துப் பொருட்களுக்கும் 15% விலைக் கழிவுகளுடன் 21,22,23 ஆகிய தினங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**சிறுவர்களுக்கான அனைத்துப் பொருட்களுக்கும் விசேட விலைக்கழிவு.**

(6260)

**SUN SHOPPING MALL**

இல. 268, கெற்றப்போல் சந்தி, யாழ்ப்பாணம்.
( நொதேண் வைத்தியசாலை அருகாமை )

☎-077 225 9030

## கடை வாடகைக்கு

மானிப்பாய் வீதி, பெரிய பள்ளிவாசல் அருகாமையில் கடை வாடகைக்கு உண்டு.

**(நீளம் 37' அகலம் 20')**

(6255)

**077 617 6413**

## ஓலைச்சுவடி சோதிட நிலையம்

உலகப் புகழ்பெற்ற தமிழ்நாடு வைத்தீஸ்வரன் கோவில் இந்தியாவில் இருந்து ஓலைச்சுவடி மூலம் காண்டம் பார்க்கப்படும். உங்களுடைய எதிர்காலப் பலன்கள், ஆரோக்கியம், கல்வி, திருமண வாழ்க்கை, ஆயுள் தீர்க்கம், உத்தியோகம், வெளிநாட்டுப் பலன்கள், முற்பிறப்பு, இப்பிறப்பில் தடைகள் ஏற்பட்டால் அவைகள் விலக நிவர்த்தி பரிகாரங்கள் மற்றும் எதிர்கால பலன்களைத் தெரிந்து கொள்ளலாம்.

புதன், வியாழன் விசேடமாக வாசிக்கப்படும்.

**மட்டக்களப்பு, திருகோணமலையில் உள்ளவர்களுக்கு வவுனியாவில் வாசிக்கப்படும்.** *சுபம்*

தொடர்புகளுக்கு:- **ஓலைச்சுவடி சோதிட நிலையம்**

**கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில், யாழ்ப்பாணம்.** (6254)

**தொடர்புகளுக்கு. 076 328 7119**

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு**

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?


கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

**பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்**

(6251)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

உ
*சிவமயம்*
" நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்கும் "



**புளியம்பொக்கணை**

## நாகதம்பிரான் ஆலய பொங்கல் தொடர்பான அறிவித்தல்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்தப் பங்குனி உத்தரப்பொங்கல் 21.03.2021 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விளக்கு வைக்கும் வைபவத்துடன் ஆரம்பமாகி 21.03.2021 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பங்குனி உத்தரப் பொங்கல் உற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

**இவ்வாண்டு Covid -19 நிலைமைகளைக் கருத்தில் கொண்டு பின்வரும் நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு நாகதம்பிரான் அடியார்களை கேட்டுக் கொள்கின்றோம்.**

பண்டைய மரபுகளுக்கமைவாக பண்டம் மீசாலை, புத்தூர் சந்தி வரை சென்று வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

**மட்டுப்படுத்தப்பட்ட அடியார்களே ஒரே தடவையில் நேர்த்திகளை நிறைவேற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள், நேர்த்திகளை நிறைவேற்றுகின்றவர்கள் விரைவாக ஆலயத்திலிருந்து வெளியேறுவதன் மூலம் ஏனைய அடியார்களும் தமது நேர்த்திகளை நிறைவேற்ற முடியும்.**

**கட்டாயமானது - முகக் கவசம் இன்றி வருகின்ற அடியார்கள் ஆலயத்தினுள் செல்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.**

இவ் நடைமுறைகளைப் பின்பற்றி ஆலயத்திற்கு வருகைதந்து விரைவாக நேர்த்திகளை நிறைவேற்றி ஆலயச் சூழலில் இருந்து வெளியேறி ஏனையவர்களும் நேர்த்திகளை நிறைவேற்றி கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அடியார்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை,
**கரைச்சி புளியம்பொக்கணை,**
**நாகதம்பிரான் ஆலயம்.**

(C-1775)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**

## காணி விற்பனைக்கு

**நல்லூர், செம்மணி வீதியில் நாயன்மார் கட்டில் 4 பரப்புக் காணி விற்பனைக் குண்டு. ( மெயின் றோட்டுடன் )**

**( இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். )**

(6261)

☎ **077 623 4204**

## தேவை

பாவிக்கக்கூடிய அல்லது பழுதடைந்த நிலையில் உள்ள வீணை விலைக்குத் தேவை.

(6261)

**077 556 3030**

## விற்பனைக்கு

நல்லினப் பசுமாடும் கன்றுகளும் விற்பனைக்கு உண்டு.

(6250)

**077 663 1742**

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

TVS wego மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

**(BFR,39000km,சிவப்பு நிறம்)**

(6253)

**077 898 9691**

**யாழ்ப்பாணம்**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாண ஆனைக்கோட்டை, நவாலி வீதி, மூத்த விநாயக கோவில் வீதி மெயின் றோட்டில் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 1 1/2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.

தரகர் தேவையில்லை

**காணி பார்வையிடும் நேரம் : காலை 9 மாலை 6 மணி வரை**

(6236)

**குரு 077 468 3354**
**077 288 0152**

## வேலையாள் தேவை

போட்டோ கொப்பி & Phone Reload கடைக்கு பெண் காசாளர் தேவை. தமிழ் ரைப்பிங் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. (**சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியின் முன் )**

(C-1776)

**077 875 7860**

## அறிமுகமாகின்றது

Uniliver Pureit இன்
தசாப்தத்தை நோக்கிய பயணத்தில்
அடுத்த இரண்டு தலைமுறைகள்

Unilever pureit

உலகின் முன்னணி நிறுவனத்தின் நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்

அதிரடி விலைக் கழிவில் 2000 rs Vouchers

**UNIQUE FEATURES**



UNITED STATES ENVIRONMENTAL PROTECTION AGENCY

online மூலம் பெற்றுக் கொள்ள

Free Installation Service & Maintenance Warranty

**City Electronics**
No 47/49 Kasthuriyar roda,
JAffna.
021 222 2917
077 040 3444
077 639 3444

**DIAHRA ELECTRO**
Mobile: 077 3131 393
Email: diahraelectro@gmail.com
Facebook: facebook.com/diahraelectro
Insta: instagram.com/diahra_electro/

(6249)

## வேலை வாய்ப்பு

வீட்டில் ஓய்வாக தொலைக்காட்சி நாடகங்களைப் பார்த்தவாறு சிறு கைத்தொழில் ஒன்றை செய்து கொள்ள விரும்புகிறீர்களா?

**Medical Envelopes, Postal Envelopes** ஒட்டும் வேலை.

யாழ். மாவட்டத்தை சேர்ந்த இல்லத் தரசிகள், இரவு நேர காவல் கடமைகளில் ஈடுபடும் பாதுகாப்பு ஊழியர்கள், சிறு வேலை ஒன்றைத் தேடுபவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

**ஒரு வார பயிற்சியின் பின்னர் நாள் ஒன்றிற்கு 500 /= ரூபாய் முதல் 1500 /= ரூபாய் வரை வருமானமீட்ட முடியும்.**

(6257)

மேலதிக விபரங்களுக்கு

**076 108 6777**

**ABOORPA H.C.CENTER**
**Nallur, Jaffna.**

# ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்

## ஆர்ஜென்டீனா உள்ளிட்ட சிவில் அமைப்புகள் அழைப்பு

(ஜெனிவா)

உண்மை மற்றும் நீதிக்காக போராடிய நீண்ட வரலாற்றைக் கொண்ட ஆர்ஜென்டீனா மற்றும் பிராந்தியத்தில் உள்ள சிவில் சமூக அமைப்புகள், ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கை குறித்த தீர்மானத்தை நிறைவேற்ற அழைப்பு விடுத்துள்ளன.

கூட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள குறித்த சிவில் அமைப்புகள் இதனைத் தெரிவித்துள்ளன. அந்த அறிக்கையில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"1983 மற்றும் 2009 இற்கு இடையிலான காலப்பகுதியில் இலங்கையில் ஒரு நீண்ட உள்நாட்டு யுத்தம் இடம்பெற்றிருந்த நிலையில், இதில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் காணாமல் போயிருந்தனர்.

2015 ஆம் ஆண்டில் கடுமையான மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கான ஒரு பொறிமுறையை நிறுவுவதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை உறுதியளித்திருந்தது. எவ்வாறாயினும் புதிய அரசாங்கம் இந்த உறுதிப்பாட்டை மாற்றியமைத்துள்ளது.

மேலும் தற்போது இலங்கையில் மனித உரிமை நிலைமை தொடர்ந்து மோசமடைந்து வருகிறது" என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆயுத மோதல் முடிவடைந்து 12 ஆண்டுகளுக்குப் பிறகும், பாதிக்கப்பட்டவர்கள் நீதியற்றவர்களாகவே இருக்கிறார்கள். அமைப்புகள், மனித உரிமைகள் ஆர்வலர்கள் மற்றும் ஊடகங்கள் மீதான தாக்குதல்கள் உட்பட நாட்டின் மனித உரிமை நிலைமை தொடர்ந்து மோசமடைந்து வருவது ஆபத்தானது.

மேலும் சிவில் நடவடிக்கைகளில் இராணுவத்தினரின் பிரசன்னம் அதிகரித்துள்ளது."

இந்நிலையில், இலங்கையில் இந்த மனித உரிமை நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான வலுவான அணுகுமுறையைச் செயற்படுத்த வேண்டும் என குறித்த சிவில் அமைப்புகள் கோரியுள்ளன. (நி-4)

# தமிழர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த பிரியங்க விடுவிக்கப்பட்டார்



(லண்டன்)

பிரித்தானியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் மேஜர் ஜெனரல் பிரியங்க பெர்னாண்டோ குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

பிரித்தானிய மேல் நீதிமன்றம் அவரை குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவித்துள்ளதாக பிரித்தானியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் ஊடாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தன்று லண்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகரத்துக்கு முன்னால் புலம்பெயர் தமிழர்களினால் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அச்சுறுத்தல் விடுத்ததாக அவர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இத்தகைய நிலையிலேயே தற்போது பிரித்தானிய மேல் நீதிமன்றம் அவர் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவிப்பதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)



# 200 அடி பள்ளத்தில் பாய்ந்த பேருந்து! 15 பேர் பலி, 46 இற்கும் மேற்பட்டோர் படுகாயம்

(பதுளை)

பதுளை - பசறை வீதியூடாக பயணித்த பேருந்தொன்று நேற்று சனிக்கிழமை அதிகாலை விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் பயணம் மேற்கொண்ட 14 பேர் உயிரிழந்துள்ளதுடன் 46 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பதுளை - லுனுகலைப் பகுதியில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பேருந்து பசறை 13 ஆம் கட்டையில் வைத்து சுமார் 200 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-4)

## குடியியல் நடவடிக்கைச் சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழாக அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

இரத்தினசிங்கம் யெனன்,
இல.12/07, சந்தனமாதா கோவில் வீதி,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

-வழக்காளி-

வழக்கு இல.விஷேடம் / 21 / 2021

எதிராக

1)R.E.ஆனந்தராஜா
தலைவர்
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்,
காங்கிரஸ் இல்லம்,
இல.120 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

2)கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,
பொதுச் செயலாளர்,
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்,
காங்கிரஸ் இல்லம்,
இல.120 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

3)இ.கி.அமல்ராஜ்
தெரிவத்தாட்சி அலுவலர்,
யாழ்ப்பாணம் மாநகர சபை,
தேர்தல்கள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

-எதிராளிகள்-

மேற்படி இலக்க வழக்கின் வழக்காளியினால் மேலே குறிப்பிடப்பட்ட 1-3 வரையான எதிராளிகளுக்கு எதிராக 1 ஆம் எதிராளி தலைவராகவும் 2 ஆம் எதிராளி பொதுச்செயலாளராகவும் பதவி வகிக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் அடிப்படை உறுப்புரிமையில் இருந்து வழக்காளியை நீக்கியுள்ளதாக குறிப்பிடப்படும் செயற்பாடு அல்லது தீர்மானம் சட்டவலுவற்ற, செல்லுபடியற்ற என பிரகடனப்படுத்தும் கோரிக்கையை பிரதான நிவாரணமாக கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே கூட்டிணைக்கப்படாத அரசியல் கட்சியினால் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் அக்கட்சியின் அங்கத்தவர்கள் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல் தரப்படுகின்றது. மேலும் இவ்வழக்கானது 31.03.2021 ஆம் திகதி காலை 9.00க்கு இம்மன்றின் திறந்த மன்றில் அழைக்கப்படவிருக்கின்றது என்றும் அறிவித்தல் தரப்படுகின்றது.

மன்றின் கட்டளைப்படி

2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி

பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(6240)

## குடியியல் நடவடிக்கைச் சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழாக அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

சிவா பெண் கௌசலா,
காரைக்கால் சிவன் கோவிலடி,
கோண்டாவில் மத்தி மேற்கு,
இணுவில்,
யாழ்ப்பாணம்.

-வழக்காளி-

வழக்கு இல.விஷேடம் / 19 / 2021

எதிராக

1)R.E.ஆனந்தராஜா
தலைவர்,
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்,
காங்கிரஸ் இல்லம்,
இல.120 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

2)கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,
பொதுச் செயலாளர்,
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்,
காங்கிரஸ் இல்லம்,
இல.120 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

3)இ.கி.அமல்ராஜ்
தெரிவத்தாட்சி அலுவலர்,
நல்லூர் பிரதேச சபை,
தேர்தல்கள் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

-எதிராளிகள்-

மேற்படி இலக்க வழக்கின் வழக்காளியினால் மேலே குறிப்பிடப்பட்ட 1-3 வரையான எதிராளிகளுக்கு எதிராக 1 ஆம் எதிராளி தலைவராகவும் 2 ஆம் எதிராளி பொதுச்செயலாளராகவும் பதவி வகிக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் அடிப்படை உறுப்புரிமையில் இருந்து வழக்காளியை நீக்கியுள்ளதாக குறிப்பிடப்படும் செயற்பாடு அல்லது தீர்மானம் சட்டவலுவற்ற, செல்லுபடியற்ற என பிரகடனப்படுத்தும் கோரிக்கையை பிரதான நிவாரணமாக கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே கூட்டிணைக்கப்படாத அரசியல் கட்சியினால் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் அக்கட்சியின் அங்கத்தவர்கள் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல் தரப்படுகின்றது. மேலும் இவ்வழக்கானது 30.03.2021 ஆம் திகதி காலை 9.00க்கு இம்மன்றின் திறந்த மன்றில் அழைக்கப்படவிருக்கின்றது என்றும் அறிவித்தல் தரப்படுகின்றது.

மன்றின் கட்டளைப்படி

2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி

பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(6241)

# வீதி பாதுகாப்பு உலக கிரிக்கெட் தொடர் இலங்கை இந்திய இறுதிப்போட்டி இன்று



வீதி பாதுகாப்பு உலக கிரிக்கெட் தொடரின், இரண்டாவது அரையிறுதிப் போட்டியில், இலங்கை ஜாம்பவான்கள் அணி 8 விக்கெட்டுகளால் சிறப்பான வெற்றியை பதிவு செய்தது.

இந்த வெற்றியின் மூலம் இறுதிப் போட்டிக்குள் நுழைந்துள்ள இலங்கை அணி, இன்று நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில், இந்தியா அணியை எதிர்கொள்ளவுள்ளது.

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் ராய்பூர் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், இலங்கை ஜாம்பவான்கள் அணியும் தென்னாபிரிக்கா ஜாம்பவான்கள் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை ஜாம்பவான்கள் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா ஜாம்பவானகள் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 125 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, வென்வைக் 53 ஓட்டங்களையும் அல்விரோ பீட்டர்சன் 27 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இலங்கை அணியின் பந்துவீச்சில், குலசேகர 5 விக்கெட்டுகளையும் ஜெய சூரிய, மஹரூப், வீரரத்ன ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 126 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இலங்கை அணி, 17.2 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் இலங்கை அணி 8 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, சிந்தக ஜெயசிங்க ஆட்டமிழக்காது 47 ஓட்டங்களையும் உபுல் தரங்க ஆட்டமிழக்காது 39 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

தென்னாபிரிக்க ஜாம்பவான்கள் அணியின் பந்துவீச்சில், மகாயா நிட்னி மற்றும் அல்விரோ பீட்டர்சன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக பந்து வீச்சில், 5 விக்கெட்டுகளை சாய்த்த நுவான் குலசேகர தெரிவுசெய்யப்பட்டார். (4)

## ஜப்னா வொலிபோல் லீக் போட்டிகள்

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கமானது 40 அங்கத்துவ கழகங்களுக்கிடையிலான ஏல முறையிலான ஜப்னா வொலி போல் லீக் சுற்றுப் போட்டி நடத்தவுள்ளது. அந்த வகையில் போட்டிகள் நேற்று 20 ம் திகதி சனிக்கிழமை முதல் ஆரம்பமாகி எதிர்வரும் ஏப்ரல் 24 ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

போட்டிகள் யாழ். மாவட்டத்தின் அரியாலை, ஆவரங்கால், காரைநகர், சங்கானை, சண்டிலிப்பாய், நீர்வேலி ஆகிய பிரதேசங்களில் பிரமாண்டமான முறையில் நடைபெறவுள்ளது என யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்க உப தலைவர் ந. சுதேஸ்குமார் தெரிவித்துள்ளார். (4)

## இருபது- 20 உலக கிண்ண தகுதி சுற்று ஒத்திவைப்பு

7 ஆவது 20 ஓவர் உலக கிண்ண கிரிக்கெட் போட்டி ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் இந்தியாவில் நடைபெறவுள்ளது. அதைத் தொடர்ந்து 8 ஆவது 20 ஓவர் உலக கிண்ண போட்டி அடுத்த ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடத்தப்படுகிறது. 2022 ஆம் ஆண்டு உலக கோப்பை போட்டிக்கான ஆசியா A மண்டலத்திற்கான தகுதி சுற்று அடுத்த மாதம் 3 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை குவைத்தில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

இதில் பக்ரேய்ன், குவைத், மாலைதீவு, கட்டார், சவுதி அரேபியா ஆகிய அணிகள் பங்கேற்க இருந்தன. கொரோனா பரவல் அதிகரிப்பு மற்றும் சில நாடுகளில் விதிக்கப்பட்டுள்ள புதிய கட்டுப்பாடுகள் காரணமாக இந்த தகுதி சுற்று ஒக்டோபர் மாதத்திற்கு தள்ளி வைக்கப்படுவதாக ஐ.சி.சி. நேற்று முன்தினம் அறிவித்தது.

இதேபோல் ஆபிரிக்க மண்டலத்திற்கான தகுதி சுற்று A,B என்று இரு வகையாக பிரிக்கப்பட்டு தென்னாபிரிக்காவில் அடுத்த மாதம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த போட்டியும் ஒக்டோபர் மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (4)

## சரஸ்வதி பிறீமியர் லீக்

ஏழாலை மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தினருடன் இணைந்து சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தினர் நடத்தும் சரஸ்வதி பிறீமியர் லீக் மென் பந்து கிரிக்கெட் போட்டி இன்று 21 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சரஸ்வதி விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகி மாலை 4 மணியளவில் இறுதிப் போட்டியும் இடம்பெற்று தொடர்ந்து வெற்றி பெற்ற வீரர்கள் கௌரவிக்கப்படும் நிகழ்வும் இடம் பெறும். (4-26)

## அறிமுக போட்டியில் அசத்திய யாதவ்



இந்தியா-இங்கிலாந்து மோதும் 4 ஆவது 20 ஓவர் போட்டி அகமதாபாத்தில் உள்ள உலகின் மிகப்பெரிய ஸ்டேடியமான நரேந்திர மோடி ஸ்டேடியத்தில் கடந்த 18 ம் திகதி நடைபெற்றது.

குறித்த போட்டியில் இந்திய அணியில் 2 மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. காயமடைந்த இஷான் கிஷனுக்கு பதில் சூர்யகுமார் யாதவ் அறிமுகம் செய்யப்பட்டார். இதேபோல் யுஸ்வேந்திர சாகலுக்கு பதில் ராகுல் சாகருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

ஆரம்ப வீரர் ரோகித் சர்மா 12 ஓட்டங்களிலும், கே எல் ராகுல் 14 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். விராட் கோலி ஒரு ஓட்டத்தில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார்.

ஆனால், அறிமுக போட்டியிலேயே அசத்திய சூர்யகுமார் யாதவ், பந்துகளை பவுண்டரி மற்றும் சிக்சர்களாக மாற்றினார். 28 பந்துகளில் அரை சதம் கடந்தார். இதன் மூலம் அறிமுக இருபது-20 போட்டியில் அரை சதம் அடித்த ஐந்தாவது இந்திய வீரர் என்ற பெருமையை யாதவ் பெற்றார். அரை சதம் அடித்தபின்னர் சற்று நிதானமாக ஆடிய யாதவ், 57 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். (4)

## இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டி; இந்திய அணி அறிவிப்பு

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டி தொடருக்கு 18 பேர் அடங்கிய இந்திய கிரிக்கெட் அணியை பி.சி.சி.ஐ அறிவித்துள்ளது. நாளை மறுதினம் 23ம் முதல் இரு அணிகளுக்கு இடையேயான 3 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடர் தொடங்கவுள்ளது.

இந்நிலையில், ஒருநாள் போட்டி தொடருக்கு 18 பேர் அடங்கிய இந்திய கிரிக்கெட் அணியை பி.சி.சி.ஐ அறிவித்துள்ளது. ஒரு நாள் போட்டி தொடருக்கான இந்திய அணி: கோலி (கப்டன்), ரோகித் சர்மா (துணை கேப்டன்), ஷிகர் தவான், சுப்மன் கில், ஸ்ரேயாஸ் ஐயர், சூர்யகுமார் யாதவ், ஹர்திக் பாண்டியா, ரிஷப் பண்ட், கே.எல். ராகுல், யுஸ்வேந்திர சாஹல், குல்தீப் யாதவ், குர்ணல் பாண்டியா, வோஷிங்டன் சுந்தர், டி நடராஜன், புவனேஷ்வர் குமார், முகமது சிராஜ், பிரசீத் கிருஷ்ணா, ஷார்துல் தாக்கூர். அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்திற்கான இந்திய ஒருநாள் அணியில் இருந்த மணீஷ் பாண்டே, மாயங்க் அகர்வால், சஞ்சு சாம்சன், ரவீந்திர ஜடேஜா, ஜஸ்பிரீத் பும்ரா மற் றும் முகமது ஷமி ஆகியோர் இங்கிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் அணியில் இடம்பெறவில்லை.

பிரசீத் கிருஷ்ணா, சூர்யகுமார் யாதவ் மற்றும் குர்ணல் பாண்ட்யா ஆகியோர் இந்தியா ஒருநாள் அணியில் முதன் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# 8ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
14.11.1952

ஆண்டவன் அடியில்
19.03.2013

திருமதி.

## அமுதரத்தினம் (அமுதா) கணேசமூர்த்தி

### திதி–21.03.2021 பூர்வபக்க அட்டமி

ஆண்டுகள் எட்டு ஆனாலும் ஓயுமோ உம் நினைவு
எம் ஊனோடும் உணர்வோடும்
ஒன்றாய்க் கலந்த உத்தமியே!
வேரூடே நீர் சுரந்து விழுதுகளைத் தாங்கி நின்றீர்!
வேண்டுவன வெல்லாம் வேண்டாமலே விரும்பி ஈந்தீர்!
சீரான வாழ்வு தந்து சிறப்போங்கச் செய்த அம்மாவே!

சேயர் நாம் செய்வதறியாது சிந்தை கலங்கி நொந்தோம்
தீராத நினைவலைகள் தினந்தினமும் வந்தெம்மைத்
தெருட்டுவதும் தெய்வமே அறியாயோ?
நீராடுங் கண்களுடன் நிதமுமைப் போற்றி நின்றோம்
நேயமுடன் வாராயோ! நிம்மதியைத் தாராயோ!
என்றும் உங்கள் நினைவுகளுடன்...

(6218)

இல.14, கோவிலாக்கண்டி,
நாவற்குழி கிழக்கு, கைதடி.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைக்கு ஒரு மாதத்திற்குள் தீர்வு வழங்கப்படும்

(நல்லூர்)

**காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைக்கு ஒரு மாதத்திற்குள் தீர்வு வழங்கப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி வழங்கியுள்ளார்.**



நேற்று யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலில் வடக்கு மாகாணத்தினைச் சேர்ந்த காணாமல் போனோரின் உறவினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது காணாமல் போனோரின் உறவினர்களுடைய ஒத்துழைப்புக் கிடைக்குமாயின் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் குழு ஒன்றை அமைத்து ஒரு மாதத்தில் தீர்வினைப் பெற்றுத் தரமுடியும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

அத்தோடு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களில் 10 பேர் கொண்ட குழு ஒன்று உருவாக்கப்பட்டு அவர்கள் மூலம் காணாமல் ஆக்கப்பட்டோரின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு குறித்த விபரங்களைக் கொண்டு தீர்வு வழங்கக் கூடிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளன.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இரு அணிகளாகச் செயற்படுவதாகவும் ஒரு தரப்பு பிரச்சினைக்கு ஒரு தீர்வும் கிடைக்கக் கூடாது எனவும் இன்னொரு தரப்பு தீர்வு வழங்கப்பட வேண்டும் எனவும் எதிர்பார்த்து இருக்கின்றனர் எனத் தெரிவித்தார்.

அத்தோடு எதிர்வரும் ஒன்றரை மாதகாலத்திற்குள் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்குரிய தீர்வினைத் தற்போதைய நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்துரையாடி பெற்றுத் தருவதாகத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் பிரச்சினையைத் தீராத பிரச்சினையாக வைத்திருக்க விரும்பவில்லை எனவும் சில அரசியல் தலைமையீடுகள் இந்த விடயத்தைத் தீராத பிரச்சினையாக வைத்து அரசியல் செய்ய முனைகின்றார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

எனினும் தான் இதற்கு ஒரு தீர்வினைப் பெற்றுக்கொடுக்கும் முகமாகவே முதற்கட்டமாக உங்களைச் சந்தித்துள்ளேன் எனத் தெரிவித்துள்ள அமைச்சர் எதிர்வரும் காலங்களில் உங்களை ஜனாதிபதியிடம் அழைத்துச் சென்று தீர்வினைப் பெற்றுத்தர முடியும் என எதிர்பார்க்கின்றேன் எனவும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (5-4-33)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை 22 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25 தினங்கள் உற்சவம் இடம்பெறவுள்ளது.

இம்மஹோற்சவத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை மாலை 7 மணிக்கு மஞ்சத் திருவிழாவும் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 7 மணிக்க கைலாச வாகனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து 14 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் தேர்த்திருவிழாவும் மறுநாள் 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (5-4)

## கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தரம் 6 இற்கான கால்கோள் விழா எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியளவில் கல்லூரியில் நடைபெறும்.

இதன்போது அனைத்து தரம் 6 மாணவர்களையும் பெற்றோர்களையும் வருகை தருமாறு அதிபர் அறிவித்துள்ளார். (5-4)




## விபத்தில் பெண் காயம்

(சாவகச்சேரி)

மீசாலை புத்தூர்ச்சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளும் அம்புலன்ஸ் வண்டியும் மோதி விபத்து ஏற்பட்டது. இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் காயமடைந்தார். காயமடைந்த பெண் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (5-4-30)

## மனிதநேய விருது பெறும் மருத்துவர்




(யாழ்ப்பாணம்)

அண்மையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டப "ஒக்கிட்" அரங்கில் இடம்பெற்ற சாதனையாளர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வில் எழுத்தாளர் டாக்டர் சு.முருகானந்தன் நெல்சன் மண்டேலா விருது பெற்றார். மனிதநேய சமூகப் பணிகளுக்காகவும் எழுத்துப் பணிகள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தியமைக்காகவும் இந்த விருது டாக்டர் டெஸ்ரர்பெர்ணாண்டோவினால் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (5-4)



வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சக்திவேலின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையுடன் இணைந்து இடம்பெற்றது. இதில் மறைந்த சட்டத்தரணி செ.கோடீஸ்வரன் ஞாபகார்த்தமாக குருதிக் கொடையாளர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (படம்:-மகாலிங்கம்)

## மயானத்தில் பாதீனியச் செடி நடவடிக்கை எடுக்க கோரிக்கை



(கரணவாய்)

கரணவாய் தெற்கு கிராய் இந்து மயானத்தில் பாதீனியச் செடிகள் வளர்ந்து பூத்த வண்ணம் காணப்படுகிறது நாலாபுறமும் காணப்படுகின்ற இப் பாதீனியச் செடிகளை அகற்றுவதற்கு மயானத்துக்கு பொறுப்பானவர்கள் நடவடிக்கையும் எடுக்க வேண்டும் என பொது மக்களும் பொது அமைப்புக்களும் கோரிக்கை விடுக்கின்றனர். 5 கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்களும் பயன்படுத்துகின்றமை என்பது குறிப்பிடத்தக்கது. (5-4-60)

## வீதியோரங்களில் குப்பை போடுவதை தவிர்க்கவும்

### பிரதேச சபை உறுப்பினர்

(நல்லூர்)

பிரதேச சபை எல்லைக்குள் முறையற்ற விதத்தில் குப்பை போட தடை செய்யப்பட்ட இடங்களிலும் வீதி ஓரங்களிலும் குப்பைகளை போடுகின்றனர்.

இது சட்டவிரோத செயலாகும் இவற்றை பொறுப்புணர்வுடன் உணர்ந்து எமது பிரதேசத்தின் சுகாதாரம் கருதி எமக்கு ஒத்துழைப்பு வழங்கி இனி மேலும் மேற்கொள்ளாமல் தவிர்க்குமாறும் மீறி அவ்வாறு முறையற்ற விதத்தில் குப்பைகளைப் போடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் கு.மதுசுதன் அறிவித்துள்ளார். (5-4)

## வாள் வெட்டில் இருவர் காயம்

(கரணவாய்)

கரணவாய் பகுதியில் வாள் வெட்டுத் தாக்குதல் மேற்கொண்ட நபர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.

கடந்த புதன்கிழமை இரவு 8.30 மணியளவில் கரணவாய் சோழங்கன் பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டுத் தாக்குதலுக்கு இலக்கான அதே பகுதியைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் வாள் வெட்டை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படும் நபர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர்களை பொலிஸார் தேடி வருகின்றனர். (5-4-60)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

# மாகாண சபைத் தேர்தலை நடத்த தயார் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

**(கொழும்பு)**

**மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டம் என்பனவற்றை அரசாங்கம் ஏற்படுத்தித் தருமாயின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேர்தலை நடத்தத் தயார் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளரான சிரேஷ்ட சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.**

தென்னிலங்கை ஊடகமொன்றிற்கு கருத்து தெரிவிக்கும் போதே இத்தகவலை தெரிவித்துள்ளார். குறித்த சட்டத்திருத்தம் மேற்



கொள்ளப்பட்டு, சுமார் இரண்டரை மாதம் என்ற குறுகிய காலப்பகுதிக்குள் தேர்தலை நடத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு ஆளும் கட்சி உறுப்பினர்களும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## வீடு வாடகை

யாழ்ப்பாணம் மாம்பழச் சந்திக்கு அருகில் 3ROOM,HALL,KITCHEN வாகன தரிப்பிடம் கூடிய புதிய வீடு வாடகைக்கு உண்டு. (1772)

தொடர்பு:- 076 352 4463
077 749 0307

## பணியாளர் தேவை

ஆதரவற்ற அரச ஊழியர் ஒருவரை பராமரிக்க ஆதரவற்ற பணியாளர்கள் தேவை ஆண் /பெண்
(முற்பணம் வைப்பில் இடப்படும்) (6212)

தொடர்பு:- 077 880 4503

## மணமகள் தேவை

யாழிந்து கௌரவ குடும்பம் 1964 ஆம் ஆண்டு (சிம்மம், உத்தரம்) கனடா, இலங்கை இரட்டை பிரஜா உரிமை உள்ள விவாகரத்துப் பெற்ற, பிள்ளைகள் அற்ற யாழில் அரச சேவையில் MBBS Doctor ஆக பணிபுரிபவர்களுக்கு வயது 30-40 இற்கு இடைப்பட்ட மணமகள் தேவை. (6238)

தொடர்பு:- 078 886 0596

## மணமகள் தேவை

யாழ்.ஆதி சைவக்குருமார் 1985 இல் அனுச நட்சத்திரத்தில் பிறந்த செவ்வாய்க்குற்றமற்ற மாநிறமான 5 அடி 8 அங் உயரமான உயர்தரம் படித்த இலங்கைப் பிரஜையான பிரான்ஸில் வசித்து வேலை செய்யும் மணமகனுக்கு சைவபோசன அல்லது சைவபோசனமாக வாழக் கூடிய அல்லது போசன விவகாரத்தில் விட்டுக் கொடுத்து இணைந்து வாழக்கூடிய பிரான்சில் அல்லது ஐரோப்பிய நாடுகளில் வதியும் அல்லது பிரான்சில் உயர்கல்வி கற்பதற்கான தகுதியுள்ள இலங்கையில் வதியும் 1993-1986 இற்கிடையில் பிறந்த பிரான்சில் சென்று வாழக்கூடிய அழகிய மணப் பெண்ணை எதிர்பார்க்கின்றோம். (6223)

தொடர்பு:- 077 959 3393

## மணமகள் தேவை

கௌரவ இந்து குடும்பம் 1990 அத்தம் 1 இல் பிறந்த ஐரோப்பிய நாட்டுப் பிரஜை மணமகனுக்கு சைவ போசனமுடைய 2-5 வயது குறைந்த படித்த மணமகள் தேவை. (6220)

நேரடி விபரத் தொடர்பு:- 077 371 3845

### இனி திடீர் சுற்றி வளைப்புக்கள்

(கொழும்பு)

நாட்டில் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த பொலிஸாரின் தலைமையில் இராணுவத்தினரால் விசேட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாட்டின் பல பகுதிகளில் குற்றவாளிகள் தலைமறைவாக இருப்பதாக நம்பப்படும் நிலையில் எவ்வித முன்னறிவிப்புமின்றி திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (நி-4)

## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 14' செவ் 11 சூரி 10 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: **Doctor**
எதிர்பார்ப்பு: விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர் அல்லாத உயர்ந்த பதவி. உள்நாடு மட்டும்
தொ.இ: B/11632

பிறப்பு: 1985 இந்து நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 24' செவ் 2 சூரி 3 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L . பலசரக்குக்கடை லண்டன்
எதிர்பார்ப்பு: வெளி நாடு செல்லக்கூடிய உள் நாட்டுப்பெண், வெளி நாடு.
தொ.இ: B/11633

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 52' செவ் 8 சூரி 12 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: கனடா சாரதி
எதிர்பார்ப்பு: வெளி நாடு செல்லக்கூடிய உள் நாட்டுப்பெண், வெளி நாடு.
தொ.இ: B/11634

பிறப்பு: 1987 இந்து நட்சத்திரம்: பூனர்பூசம்
கி.பா: - செவ் 9 சூரி 6 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L,Pharmacy Technician, Work- Pharmacy Manger
எதிர்பார்ப்பு: ஏதாவது உத்தியோகம். Pharmacy External Pharmaeist, பட்டதாரி

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1987 இந்து நட்சத்திரம்: மூலம்
கி.பா: 91' செவ்.சூரி 8 இல் உயரம்: 5'
தகைமை/தொழில்:. B.A. தற்போது பட்டதாரி ஆசிரியை
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம். வீடு உண்டு. உள் நாடு மட்டும்.
தொ.இ: G/2547

பிறப்பு: 1985 இந்து நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 33 செவ் 11.சூரி 10 இல் உயரம்: 5'5"
தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம் முக்கியம். பொறியிலாளர்.வைத்தியர்.வங்கி உத்தியோகத்தர். உள் நாடு மட்டும்
தொ.இ: G/2549

பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்: பூரம்
கி.பா: செவ் 4 சூரி 3 இல்
தகைமை/தொழில்: A/L, CIMA
எதிர்பார்ப்பு: உயர்பதவி வகிப்பர். சொந்த வியாபாரம். வெளி நாடும் விரும்பத்தக்கது. வீடு உண்டு
தொ.இ: G/2552

பிறப்பு: 1981 இந்து நட்சத்திரம்: திருகோணம்
கி.பா: 52 செவ் 6 சூரி 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: M.S.C Software Engineer, Work- Programmer (Londan)
எதிர்பார்ப்பு: மணமகனள் U.K இல் Engineer,Doctor அல்லது Accountant ஆக தொழில் புரிய வேண்டும். வேளி நாடு மட்டும்.

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## அசைவ உணவகம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள அசைவ உணவகம் ஒன்றிற்கு நல்ல அனுபவம் வாய்ந்த மற்றும் நின்று வேலை செய்யக் கூடிய கீழ் குறிப்பிட்ட வேலைகளிற்கு வேலையாட்கள் தேவை

- நன்றாக அசைவ கறிவகைகள் சமைக்கக் கூடியவர்கள்
- நல்ல அனுபவம் உள்ள கொத்து போடத் தெரிந்தவர்கள்
- நன்றாக பிரியாணி சமைக்கத் தெரிந்தவர்கள்
- BBQ போடத் தெரிந்தவர்கள்
- கணக்காளர்கள் (ஆண்/பெண்)
- உணவு பரிமாறுபவர்கள்
- துப்பரவுப் பணியாளர்கள்

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும் (6229)

உடனடி தொடர்பு:- 076 408 4333
078 112 3630

## 24 ஆம் ஆண்டு குருபூசை

தவத்திரு வே. முருகேசு சுவாமி அவர்களின்
24 ஆம் ஆண்டு குருபூசை
காலம்:-22.03.2021 திங்கட்கிழமை
மேற்படி குருபூசை நிகழ்வானது
ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில்
நடைபெறும்.
விசேட பூசை வழிபாடுகளோடு
ஆரம்பமாகி சந்நிதியான்
ஆச்சிரமத்தில் நடைபெறும்.
அறுபத்து மூவர்
குருபூசையுடன்
நடைபெறும்.
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.



(6217)
செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

சுவாமி அவர்களின்
அடியவர்கள் சார்பில்
ஆ.அருணாசலம்.

# ஜெனிவாவில் எமக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அரசியல் மயமானவை- தினேஷ் குணவர்த்தன

(ஜெனிவா)

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐக்கிய இராச்சியம், கனடா, ஜேர்மனி உள்ளிட்ட பல நாடுகள் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் மறைக்கப்பட்ட வகையில், அரசியல் நோக்கத்திற்காக முன்னெடுக்கப்பட்டுள்ளன என வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிராக பல நாடுகள் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது அமர்வில் ஜெனிவாவில் 2021 மார்ச் 22'ஆம் திகதி வாக்களிப்பொன்றை நடத்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் நேற்று வெளிநாட்டு அமைச்சில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர், எமது நாட்டின் உள்ளக விடயங்கள் தொடர்பில் குற்றம் சாட்டுவது



அல்லது வாக்களிப்பது சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் பேரவையின் பொறுப்பான செயற்பாடு அல்ல என சுட்டிக்காட்டினார்.

"மனித உரிமை மீறல்கள் தொடர்பில் எமது நாட்டுக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் பல ஆண்டுகளாக சுமத்தப்பட்டுள்ளன. இது குறித்து நாங்கள் கவனமாக இருந்தோம். எமது அரசாங்கத்தின் தேர்தலுக்குப் பின்னர் மனித உரிமைகள் சார்ந்த குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போனோர் அலுவலகத்தை செயற்படுத்துவதற்காக வரவு செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போதைய அரசாங்கம் இதுபோன்ற பல சாதகமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகையில், எமக்கு எதிராக பல்வேறு வழிகளில் குற்றங்களை சுமத்தி, ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகள் பேரவையில் அதனை மீண்டும் மீண்டும் புறக்கணிப்பது நியாயமில்லை" என அமைச்சர் குறிப்பிட்டார்.

"எங்கள் மீது சுமத்தப்பட்ட தவறான குற்றச்சாட்டுக்களை தோற்கடிப்பதற்கு நாங்கள் முயற்சிக்கின்றோம். பல நட்பு நாடுகள் இதற்காக எங்களுடன் கைகோர்த்து வருகின்றன. இந்தத் தடவை இந்தியாவும் எங்களுக்கு ஆதரவளிக்கும் என நம்புகின்றோம்" என அமைச்சர் குணவர்தன குறிப்பிட்டார். (நி-4)

# முஸ்லிம் சமூகத்தை இலக்கு வைக்கும் மனித உரிமை மீறல்கள் அதிகரிக்கலாம்

## சர்வதேச மன்னிப்புச்சபை

(கொழும்பு)

இலங்கையில் முன்கூட்டிய தடுப்பு நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படாவிட்டால், முஸ்லிம் சமூகத்தை இலக்கு வைக்கும், மனித உரிமை மீறல் சம்பவங்கள் அதிகரிக்கலாம் என்றும் அதன் விளைவாக நிலைபேறான சமாதானத்தை உறுதி செய்வதற்கான முயற்சிகள் பாதிக்கப்படக்கூடும் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

இலக்கு வைக்கப்படும் இலங்கையின் முஸ்லிம் சமூகமும் அதிகரித்து வரும் ஓரங் கட்டப்படலும் என்ற தலைப்பில் சர்வதேச மன்னிப்புச்சபையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

அண்மைக் காலத்தில் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள சில தீர்மானங்கள் முஸ்லிம் சமூகத்தை இலக்கு வைத்திருப்பது டன் அந்தச் சமூகத்தை ஓரங்கட்டும் வகையிலும் அமைந்துள்ளன.

அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட யோசனைகள், தீர்மானங்கள் மற்றும் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்கள் என்பன இலங்கையின் மொத்த சனத்தொகையில் 9 சதவீதமாக உள்ள முஸ்லிம் சமூகத்தின் மீது பாகுபாடு காண்பிக்கும் வகையில் அமைந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)

# 1 லட்சம் குடும்பங்களுக்கு மின்சாரம் இல்லை- மின்சாரசபை

(கொழும்பு)

நாட்டில் சுமார் 1 இலட்சம் குடும்பங்கள் இதுவரையில் மின்சாரம் பெற்றுக் கொள்ளவில்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வு ஒன்றின் போதே இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் பொறியியலாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இந்த நிலையில் குறித்த குடும்பங்களுக்கு மின்சாரத்தினை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4-8)

# ஆயுர்வேத சிகரெட்டுக்கு அனுமதி வழங்கவில்லை

(கொழும்பு)

ஆயுர்வேத சிகரெட் என கூறப்படும் சிகரெட்டிற்கு ஆயுர்வேத சூத்திர குழுவிடமிருந்து எந்தவொரு அனுமதியையும் பெறவில்லை என அகில இலங்கை அரச ஆயுர்வேத வைத்திய அதிகாரிகளின் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (நி-4-8)

# ஐ.நா தீர்மானத்திற்கு ஆதரவாக இந்தியா வாக்களிக்கும்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக் கூறலை நிலைநாட்டும் வகையில் அடுத்த வாரம் கொண்டு வரப்படும் ஐ.நா. தீர்மானத்திற்கு ஆதர வாக இந்தியா வாக்களிக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

தி ஹிந்துவிற்கு வழங்கிய செவ்வியில் கருத்து தெரிவித்த சுமந்திரன், வாக்களிப்பதா? அல்லது விலகுவதா? என தீர்மானிப்பது இந்தியாவின் விடயம் ஆனால் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்பது தமது நிலைப்பாடு எனத் தெரிவித்தார்.

இந்த தீர்மானத்தை தோற்கடிக்க இலங்கை அரசாங்கம் இந்தியாவின் ஆதரவை உயர் மட்டத்தில் கோரியுள்ளது.

இம்முறை இந்தியா தீர்மானத்திற்கு எதிராக வாக்களிக்கும் என தாங்கள் எதிர்பார்க்கவில்லை என்றும் எம்.ஏ. சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு இலங்கைக்கு தனது ஆதரவை இந்தியா உறுதி அளித்துள்ளது என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே கூறியுள்ளார்.

இருப்பினும் குறித்த கருத்து தொடர்பாக புதுடில்லி உத்தியோகபூர்வமாக எந்த அறிக்கையையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)



பங்களாதேஷிற்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கும், பங்களாதேஷ் பிரதமர் திருமதி. ஷெயிக் ஹசீனாவிற்கும் இடையிலான பேச்சுவார்த்தையொன்று நேற்று காலை தலைநகர் டாக்காவில் இடம் பெற்றது.

# தற்போதைய அரசாங்கத்தை ஆட்சியில் ஏற்றியதற்காய் வெட்கப்படுகின்றனர்

## கரு தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிபீடம் ஏற்றிய மக்கள் தற்போது அதனை எண்ணி வெட்கப்படுகின்றனரென முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஆட்சிபீடம் ஏறுவதற்கு காரணமாக இருந்த 69 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாட்டை பார்த்து வெட்கப்படுகின்றார்கள்.

அதாவது எந்த அச்சமும் இல்லாமல் பட்ட பகலில் நடந்த பல பெரிய மோசடிகளைப் பற்றி முழுநாடும் பேசுகிறது.

மேலும் சீனி இறக்குமதியின் போது இடம்பெற்றுள்ள பாரிய கொள்ளைக்கு அரசாங்கம் பதிலளிக்க மறுக்க முடியாது.

நாட்டில் பதிவான மிக மோசமான மோசடி என்று கருதப்படும் சீனி வரி மோசடி உட்பட அனைத்து பெரிய அளவிலான மோசடிகளில் ஈடுபட்ட அனைவரையும் ஜனாதிபதி, சட்டத்திற்கு முன் கொண்டுவர வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். (நி-4)

# இராசிபலன்

21.03.2021
பங்குனி 08,ஞாயிற்றுக்கிழமை,
அட்டமி பின்னிரவு 5.47 மணிவரை
மிருகசீரிடம் பிற்பகல் 4.37 மணிவரை
சுபநேரம் 9.17-10.47 மணிவரை
இராகுகாலம் 4.47-6.17 மணிவரை
சந்திராஷ்டமம்: விசாகம், அனுசம்

வளவன்

**மேஷம்** — சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.

**ரிஷபம்** — தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்,வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்,பொது வாழ்வில் மதிப்பும், மரியாதையும் உயரும் நாள்.

**மிதுனம்** — உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் கிடைக்கும், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள்.

**கடகம்** — தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்** — வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்,இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.

**கன்னி** — புதிய திட்டங்கள் தீட்டி ஆதாயம் காண முற்படுவீர்கள், ஆடம்பரப்பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்** — புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்,தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்,தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம்.

**விருச்சிகம்** — அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது,வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், எடுத்த காரியங்களில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம்.

**தனுசு** — நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறை வேறும் வாய்ப்புண்டு,பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**மகரம்** — பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம்,மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்** — சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்,புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்,தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகள் நலனில் ஆர்வம் கூடும்.

**மீனம்** — புதிய நபர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம்

கவனமும் முயற்சியும் அதிஷ்டத்தைக் கொண்டுவரும்.

# மாகாண சபைத் தேர்தலுக்கு இந்தியாவின் ஆலோசனை தேவையில்லை- விதுர

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் குறித்து இந்தியா ஆலோசனை வழங்க வேண்டிய தேவை எமக்கு கிடையாதென இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.



மருதானையில் ஊடகவியலாளர்களை சந்தித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் “மாகாண சபைத் தேர்தல் நாட்டுக்கு அவசியமற்ற ஒன்றாகவே பெரும்பாலான மக்கள் கருதுகின்றனர்.

மேலும் மாகாண சபைத் தேர்தல் குறித்து எமது நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும். மாறாக இந்தியாவிடம் ஆலோசனை பெறுவது அவசியமற்றது.

இதேவேளை இந்த மாகாண சபைத் தேர்தலில் பல குறைப்பாடுகள் காணப்படு கின்றன" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4-8)

# பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும்- பொன்சேகா

(கொழும்பு)

வெளிநாட்டில் பணிபுரிந்து வரும் இலங்கை மக்களுக்கான நியாயத்தை அரசாங்கம் பெற்றுக் கொடுக்கும் வரையில் தாம் ஓயப்போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்சல் சரத்பொன்சேகா தெரிவித்தார்.

அதற்காக பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஐக்கிய மக்கள் சக்தியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வெளிநாடுகளில் தொழில் புரிந்து வரும் இந்நாட்டு உழைக்கும் மக்களே , நாட்டுக்கு அந்நிய செலாவணியை பெற்றுக் கொடுத்தவர்கள். அரசாங்கம் தற்போது அதனை மறந்து செயற்பட்டு வருகின்றது.

தேர்தலின் போது வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காக அரச மரியாதையுடன் இந்த வெளிநாட்டு பணியாளர்களை அழைத்து வந்தனர்.

ஆனால் தற்போது அவர்கள் தொடர்பில் எந்தவித நடவடிக்கையையும் எடுக்காது உள்ளனர்.

பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நியாயத்தை பெற்றுக் கொடுக்கும் நோக்கத்திலேயே நாம் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடவுள்ளோம். தேர்தலை நோக்காக கொண்டு அல்ல என மேலும் தெரிவித்தார். (நி-4-8)

# வெளிநாட்டு கடன்களை மீள செலுத்துவதற்கான நீதி அரசிடம் இல்லை

(கொழும்பு)

அரசாங்கத்திடம் எதிர்வரும் மாதங்களில் செலுத்தப்பட வேண்டிய வெளிநாட்டு கடன்களை மீள செலுத்துவதற்கான நிதி இல்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் வைத்து செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது தொடர்ந்தும் பேசிய அவர்,

தற்போது அமெரிக்க டொலரின் பெறுமதி 203.15 ரூபாவாகும். இந்நிலையில் எதிர்வரும் மாதங்களில் மீள செலுத்த வேண்டிய கடனுக்கான டொலர்கள் அரசாங்கத்திடமில்லை.

சீனாவிடமிருந்து கிடைக்கப் பெறவுள்ளதாகக் கூறிய ஒன்றரை பில்லியனும் கிடைக்கப் பெறாமல் போயுள்ளது. அவ்வாறு கிடைத்தால் அதனை இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் உத்தியோக பூர்வமாக அறிவிக்க வேண்டும்.

அரச கடன் தவிர தனியார் துறையினரும் , வங்கிகளும் செலுத்த வேண்டிய கடன்களும் உள்ளன. இவை இலங்கை அரசாங்கத்தால் செலுத்தப்பட வேண்டியுள்ள கடன்களை விட அதிகமானதாகும்.

இது இவ்வாறிருக்க சீனாவிடமிருந்து யுவான்களில் நிதியுதவி கிடைக்கவுள்ளதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். அவ்வாறு கிடைத்தாலும் அது டொலர்களில் நாம் மீள செலுத்த வேண்டியுள்ள கடன் தொகைக்கு போதுமான தொகையாகக் காணப்படாது எனத் தெரிவித்தார். (நி-4)

**வீடு வாடகைக்கு**

வெள்ளவத்தை Station அருகில் சகல தளபாடங்களுடன் தனி வீடுகள் Separate Sanitizer Rooms With Attached Bathroom வாடகைக்குண்டு.

விஷேட வைபவங்களுக்கும் வீடுகள் 2.3.6 அறைகள் Fully Furnished நாள் வாடகைக்கு. (சி-1268)

தொடர்பு- 071 066 7511 /077 766 7511

**தேவை**

நல்லூரில் அமைந்துள்ள பூங்கன்று விற்பனை நிலையம் ஒன்றுக்கு பராமரிக்கக் கூடிய அனுபவம் உள்ள ஆண் வேலையாள் தேவை.

077 836 2408
076 381 0939 (6244)

**மணமகள் தேவை**

39 வயதுடைய இந்தியக் கிறிஸ்தவ ஆங்கில ஆசிரியருக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு (6242)

076 684 1113

**Canada VISA**
நம்பிக்கையோடு விரைவாக செய்து தருபவர்கள்
**STUDENT VISA**
O/L உடன் விண்ணப்பிக்கலாம்
சகல வசதிகளும் செய்து தரப்படும்
**VISIT VISA** பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா செல்வதற்கு சகல ஏற்பாடுகளை செய்து தரப்படும்
**REFUSED VISA** உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.
Hotline: 0777-761 346
**Sponsor Letters** Canada வில் இருந்து பெற்றுத்தரப்படும்
(சி-1267)
flex Institute
6A, Parakumba Place, Colombo 06.
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk
Flex Institute
10 வருட கால நம்பிக்கையான சேவை

# பொருளாதாரத்தை மேம்படுத்த கிராமங்கள் வங்கிகளிடம் ஒப்படைப்பு

(குருமன்காடு)

**ஒரு கிராமம் ஒரு வங்கி என்ற நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் வவுனியாவில் பின்தங்கிய 10 கிராமங்கள் வங்கிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரச அதிபர் சமன்பந்துல சேன தெரிவித்தார்.**

வவுனியா மாவட்டத்தில் மிகவும் வறுமைக் கோட்டிற் குட்பட்ட 10 கிராமங்கள் அடையாளம் காணப்பட்டு அக் கிராமத்தில் வாழும் மக்களின் உற்பத்திகளை அதிகரிக்கும் நோக்கில் ஒரு கிராமம் ஒரு வங்கி என்ற செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் கால்நடை வளர்ப்பு, தோட்டச் செய்கை, கைத்தொழில்கள், பால் உற்பத்தி, விவசாயம் என 224 திட்டங்கள் வகுக்கப்பட்டு அத்திட்டங்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் விபரங்கள் ஒரு கிராமத்திற்கு ஒரு வங்கி என்ற அடிப்படையில் 10 வங்கிகளிடம் வழங்கப்பட்டுள்ளன.

வங்கிகள் குறித்த பயனாளிகளுக்கு இலகு அடிப்படையில் கடன்களை வழங்கி அவர்களை உற்பத்தியாளர்களாக மாற்று வதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளன. அந்த அடிப்படையில் வவுனியாவின் ஈஸ்வரிபுரம், மறவன்குளம், ஆச்சிபுரம், கள்ளிக்குளம் ஆகிய நான்கு கிராமங்களின் பயனாளிகளுக்கான கடன்கள் தெரிவு செய்யப்பட்ட வங்கிகளால் முதல் கட்டமாக வழங்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவித்தார். (5-4-250)

# சபையில் எடுக்கப்படும் பிரேரணைகள் நிறைவேற்றப்பட வேண்டும்

(பனிக்கன்குளம்)

சபையில் எடுக்கப்படும் பிரேரணைகள் உரிய முறையில் நிறைவேற்றப்பட வேண்டும்- புதிதாக பதவியேற்ற கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் மோ.விக்னா கோரிக்கை விடுத்துள்ளார்.

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் வெற்றிடமாக காணப்பட்ட உறுப்பினர் பதவிக்கு தமிழர் விடுதலை கூட்டணி கட்சியின் சார்பில் போட்டியிட்ட மோ.விக்னா தெரிவு செய்யப்பட்டார்.

இதன் போது கருத்து தெரிவித்த அவர் வீதிகள் புனரமைக்க வேண்டும் கிராமங்களில் குப்பைகள் எடுக்கப்படுவதில்லை கள்ளப்பாடு, சிலாவத்தை எனது வட்டார கிராமத்தில் நான் குப்பை எடுப்பதைக்கூட காணவில்லை இந்த தேவையினை உடனடியாக செய்யவேண்டும்.வீதி விளக்கு தொடர்பில் கதைத்தார்கள் பிரதேச சபையினால் பொருத்தப்பட்டுள்ளன அவை ஒளிரவில்லை விளக்குகளின் உத்தரவாதத்தில்தான் பிரச்சனை உள்ளதா? அல்லது பொருத்தியவர் களில்தான் பிரச்சினை இருக்கா ? என்பது தெரியவில்லை முல்லைத்தீவு நகரத்தில் கூட ஒழுங்கான மின்விளக்குகள் எரியவில்லை இது உண்மையில் அடிப்படை தேவை இதனை விட்டு வேறு பிரச்சினையினை கதைக்கின்றீர்கள். சபையில் பிரேரணைகள் கொண்டு வருவது தவறு கிடையாது அது நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் அவர் தனது உரையில் தெரிவித்தார். (5-4-281)




உடுப்பிட்டி அ.மி கல்லூரியின் பழைய மாணவர் ஒருவரால் விளையாட்டு அணிகளுக்கான ஒரு தொகுதி சீருடைகள் அதிபரிடம் வழங்கப்பட்டன.பெற்றோரின் ஞாபகார்த்தமாக இவ் அன்பளிப்பை வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (படம்-மகாலிங்கம்)



புத்தூர் நவக்கிரி ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய சார்வரி வருட மஹோற்சவப் பெருந் திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக இடம் பெற்றது. (படம்:-ரவிசாந்)



முல்லைத்தீவு பாரதிபுரம் செந்தாமரை விளையாட்டு கழகத்தினருக்கு விளையாட்டு உபகரணங்களை ஜனநாயக இளைஞர் அமைப்பின் தலைவரும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினருமான ஆறுமுகம் ஜோன்சனால் கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டது. (படம்:-கிருஷ்ணகுமார்)

# குள வாய்க்கால்களை புனரமைத்து மிளகாய்ச் செய்கையை ஊக்குவிக்க அமைச்சர் அளுத்கமகே உறுதி

(பனிக்கன்குளம்)

உலக உணவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முத்தையன்கட்டு பிரதேசத்திலே முத்து விநாயகபுரம் பகுதியில் நிலக்கடலை செய்கையாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கென புதிதாக அமைக்கப்பட்ட கட்டிடத் தொகுதியை விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அழுத்கமகே கடந்த புதன் கிழமை திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் விவசாய அமைச்சின்செயலாளர், விவசாய அமைச்சின் அதிகாரிகள் , முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ,முல்லைத்தீவு மாவட்ட விவசாய திணைக்கள அதிகாரிகள், நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் ,பொது மக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

கட்டடத்தை திறந்து வைத்த அமைச்சர் விவசாயிகளின் குறைபாடுகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது விவசாயிகள் முத்தையன்கட்டுக்குளம் உப உணவுபயிர்ச் செய்கைக்கானது எனவும் தற்போது அதனுடைய நோக்கங்கள் மாறி நெற் செய்கைக்குப் பயன்படுத்துவதாகவும் தெரிவித்திருந்தனர்.

அத்துடன் குளத்தின் பிரதான வாய்க்கால் மற்றும் கிளை வாய்க்கால்கள் புனரமைக்கப்படாமை, ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்கள் அனைத்தும் செயலிழந்து காணப்படுகின்றமை உள்ளிட்ட பல விடயங்களை அமைச்சரிடம் முன்வைத்தனர்

இதன்போது கருத்து தெரிவித்தஅமைச்சர்நீர்ப்பாசனத் திணைக்களஅதிகாரிகளுடன் கலந்துரையாடி அதற்கு தேவையான நிதியை உடனடியாக பெற்றுத் தருவதாகவும் இந்த திட்டங்களை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் குறித்த பிரதேசத்தில் உப உணவு செய்கையை ஊக்குவிக்கவும் மிளகாய் செய்கையிலும் ஊக்குவிக்கும் வகையிலும் ஏற்பாடுகளை செய்வதற்கான முழு முயற்சிகளை மேற்கொள்வதாக விவசாயிகள் மத்தியில் உறுதியளித்திருந்தார்

அத்தோடு விவசாயிகளால் கூறப்பட்ட பல்வேறு குறைபாடுகள் தொடர்பிலும் எதிர்வரும் காலங்களில் அதனை சீர் செய்து தருவதாகவும் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முத்தையன்கட்டு பிரதேசமானது இந்த நாட்டினுடைய அனைத்து பாகங்களுக்கும் மிளகாயை உற்பத்தி செய்து அனுப்பிய ஒரு இடமாக காணப்பட்டது அரசாங்கத்தினுடைய சலுகைகள்,நன்மைகள் கிடைக்காத காரணத்தினால் விவசாயிகள் இன்று நெற் செய்கைக்கு மாற்றியுள்ளனர்.

குளத்தின் வாய்க்கால்கள் சீரமைக்கப்பட்டு தரப்படுகின்ற பட்சத்தில்தாங்கள் மீண்டும் மிளகாய் செய்கையை முன்னெடுப்பதற்கு சம்மதம் தெரிவித்திருக்கும் நிலையில் அவர்களுக்கு தேவையான அந்த உதவிகளைச் செய்து ஆயிரம் ஏக்கரில் மிளகாய் செய்கையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாக அவர் தெரிவித்தார். (5-4-281)

# மாற்றுத்திறனாளி பெண்கள் கௌரவிப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு கரை துறைபற்றில் உள்ள தலைமைத்துவம் தாங்குகின்ற மாற்றுதிறனாளியாகிய பெண்கள் கௌரவிக்கப்படும் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளதாக கரைதுறைபற்று பிரதேச சபை உறுப்பினர் திருமதி. இமக்குலேற்றா புஸ்பானந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற கரைதுறைப்பற்று பிரதேச சபை அமர்வில் இப்பிரேரணை நிறைவேற்றப் பட்டுள்ளது. கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் மாற்றுத் திறனாளியாக பெண் தலைமை தாங்குகின்ற பத்தொன்பது பெண் குடும்பங்கள் காணப்படுகின்றன.

இவர்கள் கௌரவிக்கப்பட உள்ளனர். இதேவேளை முல்லைத்தீவு நகரில் பெண்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களை விற்பனை செய்வதற்கான விற்பனை நிலையம் ஒன்று பிரதேச சபையின் அனுசரணையில் திறந்து வைக்கப்பட உள்ளது. (5-4-350)

# நாட்டில் திடீரென அதிகரிக்கும் தொற்றாளர்கள் சுகாதார வழிமுறைகளை சரியாக பின்பற்றுங்கள்

## கோரிக்கை விடுக்கும் பொலிஸார்

**(கொழும்பு)**

**கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளன. சுகாதார வழிகாட்டிகளைச் சரியாகப் பின்பற்றுங்கள் என பொதுமக்களிடம் பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண கோரிக்கை விடுத்துள்ளார்.**

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை நேற்று முன்தினம் மீண்டும் அதிகரித்துள்ள நிலையில் சித்திரை வருடப் பிறப்பை முன்னிட்டு பொதுமக்கள் முகக்கவசம் அணிதல் உட்பட சகல சுகாதார வழிகாட்டி முறைகளைச் சரியாகப் பின்பற்றுங்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டுக்கு இன்னும் மூன்று வாரங்கள் தான் உள்ளன.

இந்நிலையில் பொதுமக்கள் கடைகளுக்குச் செல்லும் போது தனிமைப்படுத்தல் சட்டங்களைச் சரியாக கடைப் பிடிக்கவும்,

சித்திரை வருடப் பிறப்பை முன்னிட்டு விசேட சுகாதார வழிகாட்டிகள் வெளியிடவுள்ளது.

அத்தோடு பொலிஸ் விசேட பாதுகாப்பு முன்னெடுக்கப் படவுள்ளமை குறித்து எதிர்காலத்தில் அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)

# பரசூட் பயிற்சியின் போது ஒருவர் உயிரிழப்பு



(கொழும்பு)

பரசூட் பயிற்சியில் இடம்பெற்ற விபத்தின்போது ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் ஒருவர் காயமடைந்துள்ளதாகவும் இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது.

அம்பாறை - உகண பகுதியில் உள்ள விமானப் படை முகாமில் முன்னெடுக்கப்பட்ட பரசூட் பயிற்சியின் போதே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது. (நி-4)

# பெற்றுக்கொள்ளும் இரு தடுப்பூசிகளும் ஒரே வகையாக இருக்க வேண்டும்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஒருவர் முதலாவதாகப் பெற்றுக்கொண்ட தடுப்பூசி வகையினையே இரண்டாவது முறையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஏனெனில் வெவ்வேறு தடுப்பூசிகளின் செயற்பாடுகள் வெவ்வேறு வழிகளில் செயற்படுவதாக கொரோனா கட்டுப்பட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

அதன் பிரகாரம் ஒருவர் முதலாவதாக பெற்றுக் கொண்ட தடுப்பூசியையே அவர்களுக்கு இரண்டாவது முறையாகவும் வழங்குவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தடுப்பூசியின் முதல் டோஸ் வைரஸின் பரவலை 64% கட்டுப்படுத்துகின்ற நிலையில் இரண்டாவது டோஸ் 10 முதல் 12 வாரங்களுக்குப் பிறகு வழங்கப்படுகிறது.

எவ்வாறாயினும் ஜனவரி 29 ஆம் திகதி கொரோனா தடுப்பூசியின் முதல் டோஸை பெற்றுக்கொண்டவர்களுக்கு ஏப்ரல் 29 ஆம் திகதி இரண்டாவது டோஸை வழங்குவதற்குரிய தடுப்பூசிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில், தடுப்பூசியின் முதல் அளவைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு இரண்டாவது தடுப்பூசியை பெற்றுக்கொள்வதற்கான உரிய திகதியை அதிகாரிகள் அறிவிக்கும்போது அதனைத் தவறவிடக்கூடாது என்றும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே கேட்டுக்கொண்டார். (நி-4)

# மகிழ்ச்சியாக வாழும் நாடுகள் பட்டியலில் இலங்கைக்கு 129 ஆவது இடம்

(கொழும்பு)

உலகில் மகிழ்ச்சியாக வாழும் நாடுகள் பட்டியல் 2021 இல் மதிப்பீடு செய்யப்பட்ட 149 நாடுகளில் இலங்கை 129 ஆவது இடத்தில் உள்ளது.

தரவரிசையில் அதிக மதிப்பெண் பெற்ற ஏனைய நாடுகளில் டென்மார்க், சுவிட்சர்லாந்து, ஐஸ்லாந்து மற்றும் நெதர்லாந்து ஆகியவை அடங்கும். அமெரிக்கா 19 ஆவது இடத்தில் உள்ளது.

பாகிஸ்தான் 105 ஆவது இடத்திலும், சீனா 84 ஆவது இடத்திலும், இந்தியா 139 வது இடத்திலும், பங்களாதேஷ் 101 ஆவது இடத்திலும் உள்ளன.

ஐ.நா.நிலையான அபிவிருத்தி தீர்வுகள் குழுவால் வெளியிடப்பட்ட இந்த அறிக்கை வாழ்க்கை மதிப்பீடுகள், நேர்மறை உணர்ச்சிகள் மற்றும் எதிர்மறை உணர்ச்சிகள் ஆகிய மூன்று முக்கிய குறியீடுகளை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்டு உள்ளது. (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | | 140 | 140 |
| உருளைக்கிழங்கு | 120 | | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 180 | | 160 | 200 |
| தக்காளி | 80 | | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | | 70 | 50 |
| கோவா | 100 | | 100 | 120 |
| கரட் | 160 | | 200 | 200 |
| பூசணி | 70 | | 60 | 80 |
| புடோல் | 120 | | 80 | 120 |
| வாழைக்காய் | 50 | | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | | 180 | 200 |
| பெரிய வெங்காயம் | 160 | | 120 | 100 |
| பாகற்காய் | 200 | | 250 | 240 |
| வெண்டிக்காய் | 140 | | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | | 100 | 200 |
| பயற்றங்காய் | 160 | | 160 | 200 |
| லீக்ஸ் | 100 | | 120 | 120 |
| பீற்றூட் | 100 | | 120 | 100 |
| கறிமிளகாய் | 200 | | 200 | 200 |
| முருங்கைக்காய் | 800 | | 800 | 800 |
| போஞ்சி | 140 | | ·160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | | 100 | 130 |
| கீரை - 1 பிடி | 40 | | 30 | 40 |
| தேசிக்காய் | 80 | | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | | 65 | 40-70 |
| இராசவள்ளி | 250 | | 200 | 200 |
| வெங்காயப்பூ | 140 | | 140 | 120 |
| முள்ளங்கி | 50 | | 80 | 80 |
| பொன்னாங்காணி | 50 | | 40 | 40 |
| வல்லாரை | 200 | | 20 | 30 |
| ஈரப்பலா | 120 | | 80 | 100 |

# மாகாணசபைத் தேர்தல் தொடர்பான புதிய சட்டமூலம் பாராளுமன்றத்திற்கு அறிவிப்பது அவசியம்-கிரியெல்ல

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் தொடர்பான புதிய சட்டமூலத்தை உருவாக்குவதற்கான அதிகாரம் குறித்தவொரு குடும்ப அங்கத்தவர்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்திற்கு அறிவிக்காமல் இவ்வாறு அரசாங்கத்தின் தேவைக்கேற்ப சட்டமூலத்தை உருவாக்குவது தவறாகும் என்று பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாணசபைத் தேர்தல் தொடர்பான புதிய சட்டமூலத்தை உருவாக்குவதற்கான அதிகாரம் குடும்ப அங்கத்தவர்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது. புதிய சட்டமூலமொன்று உருவாக்கப்பட வேண்டுமாயின் முதலாவதாக பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும்.

இவ்வாறான சட்டமூலமொன்றை அரசாங்கத்திற்கு தேவையான வகையில் உருவாக்குவது தவறானதாகும். சகல கட்சிகளினதும் ஆலோசனைகள், கருத்துக்கள் கோரப்பட வேண்டும்.

19 ஆவது திருத்தத்தை நாம் அவ்வாறு தான் உருவாக்கினோம்.

எனவே மாகாணசபை தொடர்பான புதிய சட்ட மூலமொன்றை உருவாக்குவதாயின் பாராளுமன்றத்தில் அது தொடர்பில் அறிவிக்குமாறு கோருகின்றோம்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு கோரப்பட்டது.

எனினும் பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை அமைத்து இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு நாம் அறிவித்திருந்தோம்.

ஆனால் அதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவில்லை.

இவ்வாறு புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்க முடியாது.

மறுபுறம் 13 ஆவது திருத்தத்திற்கு இணக்கம் தெரிவிக்க முடியாது எனக் கூறுபவர்களே தற்போது தேர்தலை நடத்த ஆயத்தமாகின்றனர்.

தற்போதைய அரசாங்கத்திற்கு ஸ்திரமான கொள்கையோ வேலைத்திட்டமோ கிடையாது என கிரியெல்ல தெரிவித்தார். (நி-4)

# உரிமையாளர்கள் குடியேறாத காணிகள் வேறு குடும்பங்களுக்கு வழங்கப்படும்

(அக்கராயன்)

**கிளிநொச்சி அக்கராயன் கிராம உத்தியோகத்தர் பிரிவில் காணிகளில் குடியேறாமலும் பயிர்ச் செய்கைகளுக்கு உட்படுத்தப்படாமலும் உள்ள காணிகளை வேறு குடும்பங்களுக்கு வழங்க உள்ளதாக கரைச்சி பிரதேச செயலாளர் பா.ஜெயகரன் தெரிவித்தார்.**

அக்கராயன் கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கான காணிக் கச்சேரி நேற்று முன்தினம் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

இதில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது, காணிகள் வழங்கப்பட்ட போதிலும் அக்கராயன் கிராம உத்தியோகத்தர் பிரிவில் குடியேறவோ பயிர்ச் செய்கை மேற்கொள்ளவோ பயன்படுத்தப்படாத பல காணிகள் காணப்படுகின்றன.

கடந்த பத்தாண்டுகளில் காணிகளில் மீள் குடியமருங்கள், பயிர்ச் செய்கையில் ஈடுபடுங்கள் என தொடர்ச்சியாக பிரதேச செயலகத்தால் அறிவிக்கப்பட்டு வருகிறது.

எனினும் இவ் அறிவித்தல்களை காணிகள் வழங்கப்பட்ட குடும்பங்கள் தொடர்ச்சியாக உதாசீனம் செய்து வருகின்றன. குடியேறவோ பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்படவோ இல்லாத காணிகளை வேறு குடும்பங்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (5-4-350)

# நிலங்களை விடுவிக்கக் கோரி மனுக்கள் கையளிப்பு



(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்ட வன வளத் திணைக்கள அதிகாரியிடம் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் உ.றனிஸ்லா நேற்று முன்தினம் பூர்வீக நிலமான ஆண்டாங்குளம் விடுவிக்கப்பட வேண்டும் மற்றும் நித்தகைக் குளத்தின் கீழான வயல் நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும் என இரு மனுக்களை கையளித்துள்ளார்.

கையளிக்கப்பட்ட மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கரைதுறைப்பற்றின் பூர்வீக கிராமமான ஆண்டாங்குளத்திற்கு 1984ஆம் ஆண்டிற்குப் பின்னர் பூர்வீகக் குடிகள் செல்ல முடியாத நிலைமை உள்ளது.

நித்தகைக் குளத்தின் கீழ் வயல் செய்ய முடியாது உள்ளது. குறித்த நிலங்களை வன வளத் திணைக்களம் எல்லைகள் இட்டு தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது.

குறித்த நிலங்களை விடுவிப்பதன் மூலம் ஆண்டாங் குளத்தில் மக்கள் குடியேறவும் நித்தகைக் குளத்தின் கீழ் உள்ள வயல் நிலங்களில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளவும் முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிலங்களை விரைவில் விடுவிப்பதற்கான உறுதிமொழிகளை மாவட்ட வனவளத் திணைக்கள அதிகாரி வழங்கியதாக பிரதேச சபை உறுப்பினர் உ.றனிஸ்லா தெரிவித்தார்.

இம்மனுக்கள் கையளிக்கும் நிகழ்வில் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்களான திருமதி.இமக்குலேற்றா புஸ்பானந்தன், த.அமலன், அன்டனி ரங்கதுரை ஆகியோரும் கலந்து கொண்டனர். கடந்த 16ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுற்றாடல் சூழல் அறிக்கை கிடைக்கப் பெற்றால் நித்தகைக் குளத்தின் கீழான வயல் நிலம் விடுவிக்கப்படும் என வனவளத் திணைக்களம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-4-350)

# "ஆறுகளைக் காத்திடுவோம்" திட்டம் கிளிநொச்சியில் நாளை ஆரம்பம்

(கிளிநொச்சி)

இலங்கையில் ஆறுகளைப் பாதுகாக்கும் "ஆறுகளைக் காத்திடுவோம்" தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டம் சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர அழைப்பில் வடமாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம். சாள்ஸ் தலைமையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் கௌரவ விருந்தினர்களது பங்குபற்றுதலும் நாளை 22 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு "ரை ஆறு" கனகராயன் ஆற்றுப்படுக்கை, கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்படவுள்ளது. (5-4)






கிளிநொச்சி இராணுவ தலைமையகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இவ் இரத்ததான முகாமில் கிளிநொச்சி இராணுவ தலைமையக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் கரேந்ர ரணசிங்க கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினார்.

இதேவேளை கிளிநொச்சி இராணுவ தலைமையகத்தின் கீழ் உள்ள இராணுவத்தினர் மற்றும் பொதுமக்கள் என 150 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர்.

# உள்நாட்டு உற்பத்தியை முன்னேற்றுவதற்கான அபிவிருத்திக் குழுக் கூட்டம்

(குருமன்காடு)

வன்னியின் உள்நாட்டு உற்பத்திக் கைத்தொழில்களை முன்னேற்றுவதற்கான அபிவிருத்திக் குழுக் கூட்டம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் பொருட்டு ஸ்தாபிக்கப்பட்ட உள்நாட்டு உற்பத்திக் கைத்தொழில்களை முன்னேற்றுவதற்கான அபிவிருத்திக்கான குறித்த கலந்துரையாடலில் மீன்பிடிக் கைத்தொழில், நீரியல் வள உற்பத்தி, தங்க ஆபரண உற்பத்தி, கிராமிய கைத்தொழில்கள், பெருந்தோட்ட உற்பத்திகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

குறித்த உற்பத்தி மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்தும் பொருட்டு அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படவுள்ள செயற்பாடுகள் குறித்தும் இதன்போது விளக்கமளிக்கப்பட்டது.

குறித்த கூட்டத்தில் வடமாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம்.சாள்ஸ், பெருந்தோட்டத்துறை மற்றும் ஏற்றுமதி விவசாயத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கே.கே.மஸ்தான், கு.திலீபன், வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர்கள், அமைச்சின் செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், உயர் அதிகாரிகள், உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (5-4-250)

# இசைத்தட்டு வெளியீட்டு விழா

(பனிக்கன்குளம்)

'அன்பின் ஒளிவெள்ளம்' இசைத்தட்டு வெளியீட்டு விழா இன்று 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கவிஞன் யோ.புரட்சி தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர் ஜோசெப்தாஸ் ஜெயரட்ணம் ஆண்டகையும் விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரனும் மற்றும் செல்வம் அடைக்கலநாதனும் கலந்து கொள்வர். (8-4-6)

# ஆண்டு நிறைவு விழா

(அக்கராயன்)

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் சுவாமி விவேகானந்தர் அறநெறிப் பாடசாலையின் 8 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் இடம்பெறும்.

கிளிநொச்சி திருநெறிக் கழகத்தின் செயலாளர் அ.சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் கண் வைத்திய நிபுணர் எஸ்.ரி.எஸ்.சந்திரகுமார் முதன்மை விருந்தினராக கலந்து கொள்வார். (5-4-350)




மன்னார் தாழ்வுபாடு புனித சூசையப்பர் ஆலய திருவிழா திருப்பலி நேற்று முன்தினம் காலை சிறப்பாக இடம்பெற்றது. பங்குத்தந்தை அருட்பணி ஜேசுராஜா அடிகளாரின் நெறிப்படுத்தலில் மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் அருட்பணியாளர்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

(படங்கள்:-யோசப்நயன்)

*வாழ்க்கையின் முக்கியமான இரகசியம், நீங்கள் எதை விரும்புகிறீர்கள் என்பதை அறிவதல்ல. கிடைத்துள்ளதை வைத்து வாழ்க்கையை நன்றாக வாழ்கிறீர்களா என்பதுதான்.* **~ க்ரெய்க்**

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கைக்கு வருகைதந்த தேவலோகத் தூதுக்குழு - 3

*நல்லூர் முருகனைத் தரிசித்த தேவலோகத் தூதுக்குழு புஷ்பக விமானத்தில் ஏறி தீவகம் நோக்கி பயணிக்கிறது.*

*நாரதா! அஃதென்ன பசுமையான தீவொன்று தெரிகிறது. அங்கு சிலர் வீடியோ எடுக்கிறார்கள் என்ன சங்கதி. இந்திரன் விசாரித்தார்.*

**நாரதர்:** சுவாமி அதுதான் மண்டைதீவு. கடையிற்சுவாமிகள் வாழ்ந்த மண். இங்குள்ள கடல் தாவரங்கள் பூமிக்குப் பச்சை கம்பளம் விரித்ததுபோல படர்ந்தும் விரிந்தும் காணப்படுகின்றன.

அதோ! குறும்படம் தயாரிப்பவர்கள் – மிக்ஸிங் எடுப்பவர்கள் அங்குமிங்குமாக ஓடித் திரிகின்றனர்.

**இந்திரன்:** அற்புதம்... அற்புதம்...

**பிரம்மா:** அது சரி வரிசையாக சோலர் மூலம் மின்னொளி பொருத்தப்பட்டிருக்கிறதே அதன் நோக்கம் யாது?

**சித்திர:** சுவாமி நோக்கம் இல்லாத நோக்கம் அது.

**இந்திரன்:** சித்திரகுப்தா என்ன சொல்கிறாய்.

**சித்திர:** ஆம் சுவாமி. மண்டைதீவுக் கடற்கரையோரம் பொதுமக்கள் கூடவும் இயற்கையை இரசிக்கவும் கடல் வழியாகக் கப்பலில் பயணம் செய்யவும் ஏற்படுத்தப்பட்ட திட்டம்தான் அது. இப்போது யாரும் கவனிப்பாரின்றிக் கிடக்கிறது.

**விஷ்ணு:** ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடப்பதில்லையா?

**நாரதர்:** என் தொழிலாகிய கலகத்துக்கான கூட்டமேயன்றி அது ஆக்கத்துக்கான கூட்டம் அன்று.

**இந்திரன்:** சித்திரகுப்தா, மண்டைதீவில் அமைக்கப்பட்ட கடற்கரையோரச் சுற்றுலா திடலுக்கு நடந்தது என்ன? அது இயங்காமல் இருப்பதற்கான காரணம் யாது? உடனடியாகத் தகவல் தருக!

**சித்திர:** ஆகட்டும் சுவாமி.

*(தீவகத்தைச் சுற்றிப் பார்த்த தேவலோகத் தூதுக்குழு அங்கு மக்களின் மீள்குடியேற்றத்தை ஊக்கப்படுத்துமாறும், தீவக மக்கள் புகையிலைச் செய்கையில் ஈடுபடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்றும் தனது கருத்தைப் பதிவிட்டது.*

*தொடர்ந்து மன்னார் பக்கமாக புஷ்பக விமானம் திரும்பியது.*

சித்திரகுப்தா! இதென்ன பெரும் விபரீதம். பிரம்மா அதிர்ச்சியோடு கேட்டார்.

**சித்திர:** சுவாமி தலைமன்னாரில் புகையிரத வண்டியுடன் பஸ் மோதிக் கொண்டதில் ஏற்பட்ட விபரீதம்தான் இது.

**நாரதர்:** இதென்ன கொடுமை வடபகுதியில் ஒரே விபத்தாக இருக்கிறது.

*(இவ்வாறு நாரதர் கூறியபடி யமனைப் பார்க்கிறார்)*

**யமன்:** நாரதரே! வடபகுதியில் மரணத்தை ஏற்படுத்துவதற்கு எனக்கு இரண்டு வழிகள்தான் சுகமாக இருக்கின்றன.

**நாரதர்:** யமதர்மா என்ன? சொல்கிறாய்.

**யமன்:** ஆம் நாரதரே! வடபகுதியில் விபத்தும் தற்கொலையும்தான் என் வேலையைச் செய்வதற்கு உதவுகின்றன.

**பிரம்மா:** யமதர்மா! நான் படைத்த மனித உயிர்களை நீ இப்படிச் சடுதியாக எடுப்பது உனக்கே நல்லதாகத் தெரிகிறதா?

**யமன்:** பிரம்மதேவரே! யான் என்ன செய்வது. கையடக்கத் தொலைபேசியில் கதைத்தபடி வாகனம் ஓட்டுபவர்கள், நித்திரை விழித்து வாகனம் செலுத்துபவர்கள், வேகமாக மோட்டார் சைக்கிள் ஓடும் இளைஞர்கள், என்பணிக்கு உதவுகின்றனர்.

இது தவிர, எடுத்த எடுப்பில் தங்கள் உயிரை மாய்ப்பதற்கும் இங்கு தயாராக இருக்கிறார்கள். இதனால் என் பாசக் கயிற்றுக்கு அகப்படுபவர்கள் இங்கு ஏராளம்.

*இவ்வாறு யமன் கூறியதும் கடுப்பேறிய பிரம்மா யமதர்மா! என உரத்து கூறினார்.*

(நாளை தொடரும்)

# கட்டுப்பாட்டை இழந்த வாகனம் பனை மரத்துடன் மோதி விபத்து

## சாரதி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வீதியை விட்டு விலகிய வாகனம் ஒன்று மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புலோலி- கொடிகாமம் வீதி அகலிப்பு வேலைகள் நடைபெற்று வரும் நிலையில் அதன் ஒப்பந்த நிறுவனத்துக்கு சொந்தமான வாகனம் நேற்று சனிக்கிழமை (20) பிற்பகல் வரணிப் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தபோது வீதியை விட்டு விலகி வர்த்தக நிலையம் ஒன்றை சேதமாக்கி பின்னர் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றையும் சேதமாக்கி மரம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில் வாகனத்தை செலுத்தி சென்ற நபர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் அம்புலன்ஸ் வண்டி மூலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் இச்சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ம-3,18, 30,60)

# நாடு பூராக ஒரு மாத காலத்திற்கு சிறப்பு பொலிஸ் நடவடிக்கை

## பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண

(கொழும்பு)

நாடு முழுவதும் வாகனங்களை சோதனைக்குட்படுத்தும் நடவடிக்கை நேற்று தொடக்கம் ஆரம்பிக்கப்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண கூறியுள்ளார்.

இன்று தொடக்கம் ஒரு மாதகாலம் இந்த சிறப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. இதன் போது மதுபோதையில் வாகனம் ஓட்டும் சாரதிகள கைது செய்யப்படுவதுடன்,

சட்டவிரோத நடவடிக்கைகள் கட்டுப்படுத்த இந்த நடவடிக்கை ஆரம்பிக்க ப்பட்டிருக்கின்றது. பொலிஸ் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு கூறினார்.

மது போதையில் வாகனம் செலுத்து வோரைப் பரிசோதிப்பதற்கு தேவையான உபகரணங்களை நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் பெற்றுக்கொடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார். போட்டி போட்டுக் கொண்டு பஸ்களை செலுத்தும் சாரதிகளையும் கைது செய்வ தற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (ம-3)

# மோட்டார்குண்டு வெடித்ததில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

## திருமலையில் சம்பவம்

திருகோணமலை- சேருநுவர சீனன் வெளிப் பகுதியில் 81 மி.மீ மோட்டார்குண்டு வெடித்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம், நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது.

இந்நபர் வைத்திருந்த மோட்டார் குண்டை, கிரைண்டர் இயந்திரம் மூலமாக அறுத்து வெடி மருந்துகளை எடுக்க முற்பட்டபோது, குண்டு வெடித்துள்ளதாகவும் இதன் போதே அவர் உயிரிழந்ததாகவும் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் சீனன்வெளி பகுதியைச் சேர்ந்த அல்லி முத்து ஜெகன் எனும் 45 வயதுடைய குடும்பஸ்தராவார். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணை களை சேருநுவர பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணி யிலிருந்து பிற்பகல்5மணிவரை

**வவுனியா பிரதேசத்தில்** சமயபுரம் கிராமம், சாஸ்திரி கூழாங்குளத்திலிருந்து கல்மடு வரை ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** கல்மடுவிலிருந்து கீரிசுட்டான் வரை, பூவரசங்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)


இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இறை ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெற்று வரு கின்றன.

அந்த வகையில் நாளை 22 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 6.30 மணிக்கு சங்கானை சாந்தா வோலை ஸ்ரீ சம்பு நாதேஸ்சுவரர் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் வழிபாடுகள் இடம் பெறவுள்ளன.

விசேடபூஜை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ சு. ரங்கநாதர் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம் பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின தமிழ்ச் சேவையில இடம் பெறும் ஆலய தரிசனம் நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒளிபரப்புச் செய்யப்படும். (5-4)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



## பொறுமையாய் இருங்கள்

❖ ஒவ்வொருவரும் தங்களை விட மற்றவரை உயர்வாக மதிப்பிடுங்கள். மனிதன் மதிப்பிடப்படுவது செயல்களாலேயன்றி, வெறும் நம்பிக்கையினால் மட்டுமல்ல.

❖ நல்லவரின் நாக்கு அரிய வெள்ளிதீயவனுடைய மனமோ அற்பவிலையும் பெறாது.

❖ மரங்களின் மூலவேர் அருகே கோடாரி வைக்கப் பட்டுள்ளது. ஆகையால், நற்கனி கொடாத ஒவ்வொரு மரமும் அடியோடு வெட்டப்பட்டு அக்கினியிலே போடப்படும்.

❖ நாம் இந்த உலகிற்கு ஒன்றும் கொண்டு வந்ததில்லை. இந்த உலகிலிருந்து ஒன்றையும் கொண்டு போகப் போவதுமில்லை.

❖ பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சல் அடையாதே. நியாயக்கேடு செய்கிறவர் மீது பொறாமை கொள்ளாதே. ஏனெனில், அவர்கள் புல்லைப் போல வெகு சீக்கிரத்தில் அறுப்புண்டு, பசும்பூண்டைப் போல வாடிப் போய் விடுவார்கள்.

❖ அடங்காதவர்களை எச்சரியுங்கள். பலவீன மனம் படைத்தவர்களைத் தேற்றுங்கள். எளியவர்களை ஆதரியுங்கள். எல்லா மனிதர்களிடமும் பொறுமையாய் இருங்கள்

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 14.03.2021 - 13.04.2021

## சிந்தித்து செயற்படுவது நல்லது



கும்ப இராசி வாசகர்களே!

சார்வரி வருடம் பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். ஏழரைச் சனியில் விரயச் சனியின் ஆதிக்கம் நடப்பதால் எதையும் சிந்தித்துச் செயற்படுவது நல்லது. மேலும் தனாதிபதியான குருவும் விரய ஸ்தானத்தில் இருக்கின்றார். எனவே வரவைக் காட்டிலும் செலவு கூடுதலாக இருக்கும்.

### உச்ச சுக்கிரன் சஞ்சாரம்

மார்ச் 18 ஆம் திகதி, உங்கள் இராசிக்கு 2 ஆம் இடமான மீனத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகின்றார். அங்கு அவர் உச்சம் பெறுகின்றார். 4, 9 இற்கு அதிபதியான சுக்கிரன் உச்சம் பெறும் பொழுது, நன்மைகள் அதிகம் நடைபெறும். உடல் நலம் சீராகும். தந்தை வழியில் ஆதரவு கிடைக்கும். பங்காளிப் பகை மாறும். பாகப்பிரிவினையில் ஏற்பட்ட தாமதங்கள் அகலும். புதிய வாய்ப்புகள் பலவற்றையும் வரவழைத்துக் கொள்வீர்கள்.

### மீன புதன் சஞ்சாரம்

மார்ச் 25 ஆம் திகதி, மீன இராசிக்கு புதன் செல்கின்றார். அது அவருக்கு நீச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு 5, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். பஞ்சமாதிபதி நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பிள்ளைகளால் விரயங்கள் ஏற்படலாம். சொந்தங்களின் மூலம் சில பிரச்சினைகள் வரலாம். முக்கியப் பணி ஒன்றை செய்ய மறந்ததன் விளைவாக முன்னேற்றத் தடை உருவாகும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரிடும்.

### கும்ப குருவின் சஞ்சாரம்

ஏப்ரல் 5 ஆம் திகதி, குரு பகவான் கும்ப இராசிக்கு அதிசாரமாகச் செல்கின்றார். அவரது பார்வை 5, 7, 9 ஆகிய மூன்று இடங்களிலும் பதிகின்றது. மேலும் தன இலாபாதிபதியான குரு உங்கள் இராசிக்கே வரும் பொழுது வியாபார விருத்தி ஏற்படும். கடந்த சில நாட்களாக தொழிலில் இருந்த குறுக்கீடுகள் அகலும். அதிசார குருவின் ஆதிக்க காலத்தில் வெளிநாட்டு முயற்சியிலும் வெற்றி கிடைக்கும். பொருளாதார பற்றாக்குறை அகலும்.

### மேடத்தில் புதன், சுக்கிரன் சஞ்சாரம்




ஏப்ரல் 10 ஆம் திகதி, மேட இராசிக்கு புதன் செல்கின்றார். அதேபோல் ஏப்ரல் 11 ஆம் திகதி சுக்கிரனும் அங்கு வருகிறார். இரண்டும் ஒன்று சேரும் பொழுது, 'புத சுக்கிர யோகம்' உருவாகின்றது. சகோதர வர்க்கத்தினரால் நன்மை கிடைக்கும். பூமி வாங்கும் யோகம் உண்டு. அடகுவைத்த நகைகளை மீட்கும் வாய்ப்பும் அதற்கேற்ற வருமானமும் வந்து சேரும். சகப் பணியாளர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். மேலதிகாரிகளைக் கொண்டு சில பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வீர்கள்.

### மிதுன செவ்வாய் சஞ்சாரம்

ஏப்ரல் 13 ஆம் திகதி, மிதுன இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். சகாய ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான செவ்வாய், பஞ்சம ஸ்தானத்திற்கு வரும்பொழுது தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொடர் கதையான கடன்சுமை குறையும். அதிகார பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு பொது வாழ்வில் ஈடுபடுவீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உன்னதமான நேரம் இது. இம்மாதம் சனிக்கிழமை தோறும் விநாயகப் பெருமானையும் அனுமனையும் வழிபடுங்கள்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் இராசிநாதன் சனி, விரய ஸ்தானத்தில் தனாதிபதி குருவோடு இருப்பதால் விரயத்திற்கேற்ற பணம் வரும். ஏழரைச் சனி நடப்பதால் எதையும் யோசித்துச் செய்யுங்கள். கோபத்தைக் கட்டுப்படுத்துங்கள். குடும்ப பிரச்சினைக்கு உடனுக்குடன் தீர்வு காணுங்கள். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. பணிபுரியும்பெண்களுக்கு இடமாற்றங்கள் உறுதியாகலாம்.

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**

## தொழில்வளம் சிறப்பாக இருக்கும்



மீன இராசி வாசகர்களே!

சார்வரி வருடம் பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குருபகவான் லாப ஸ்தானத்தில் நீச்சம் பெற்றிருக்கிறார். அவர் ஆட்சி பலம' பெற்ற சனியோடு இணைந்து 'நீச்சபங்க இராஜயோக' அமைப்பில் உள்ளதால் தொழில் வளம் சிறப்பாக இருக்கும்.

### உச்ச சுக்கிரன் சஞ்சாரம்

மார்ச் 18 ஆம் திகதி, உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் சுக்கிரன், உச்சம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் உச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. சில இழப்புகளை சந்திக்க நேரிடும். எதிர்காலம் பற்றிய பயம் உருவாகும். பணப்பற்றாக்குறையின் காரணமாக சொத்துக்களை சிலர் விற்க நேரிடலாம். பிறரை நம்பிச் செய்த காரியம் நடைபெறாமல் போகலாம்.

### மீன புதன் சஞ்சாரம்

மார்ச் 25 ஆம் திகதி, உங்கள் இராசிக்குப் புதன் வருகின்றார். அது அவருக்கு நீச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் நீச்சம் பெறுவது யோகம் தான். குறிப்பாக தாய்வழி ஆதரவு உண்டு. குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். கல்யாணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகள் உங்களுக்கு வேண்டிய சலுகைகளை கொடுக்க முன்வருவர்.

### கும்ப குருவின் சஞ்சாரம்

ஏப்ரல் 5 ஆம் திகதி குரு பகவான், கும்ப இராசிக்கு அதிசாரமாகச் செல்கின்றார். அதனால் குருவின் பார்வை 4, 6, 8 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. எனவே இடம் வாங்கும் யோகம் வாய்க்கும். உற்றார் உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். தொழில், உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளுக்கு மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பழைய பங்குதாரர்களை விலக்கிவிட்டுப் புதிய பங்குதாரர்களைச் சேர்த்துக் கொள்ள முன் வருவீர்கள்.

### மேடத்தில் புதன், சுக்கிரன் சஞ்சாரம்

ஏப்ரல் 10 ஆம் திகதி, மேட இராசிக்குப் புதன் செல்கின்றார். அதேபோல் ஏப்ரல் 11 ஆம் திகதி சுக்கிரனும் அங்கே




வருகிறார். இரண்டும் ஒன்று சேரும் பொழுது, 'புத சுக்கிர யோகம்' உருவாகின்றது. இரண்டாமிடத்தில் சேர்வதால் குடும்பத்தில் மங்கல ஓசை கேட்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். குடும்ப உறுப்பினர்களின் குறைகளைத் தீர்க்க முன்வருவீர்கள். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்கும். உங்கள் முன்னேற்றத்திற்கு இடையூறாக இருந்தவர்கள் விலகுவர். ஒரு சிலருக்கு பணி ஓய்விற்குப் பிறகு வேலை கிடைக்கலாம்.

### மிதுன செவ்வாய் சஞ்சாரம்

ஏப்ரல் 13 ஆம் திகதி, மிதுன இராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் செவ்வாயால் வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும். பயணங்களால் பலன் உண்டு. பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். வெளிநாடு சம்பந்தப்பட்ட வகையில் செய்த முயற்சிகளில் அனுகூலமான செய்தி வந்து சேரும். வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்கும் முயற்சி கைகூடும். இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குரு கவசம் பாடி, குரு தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வருவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் பணப்பற்றாக்குறை அகலும். பாதியில் நின்ற பணி மீதியும் தொடரும். எடுத்த காரியங்களை இனிதே செய்து முடிப்பீர்கள். கணவன் - மனைவிக்குள் பாசமும் நேசமும் அதிகரிக்கும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சி பலன் தரும். பணிபுரியும் பெண்களுக்கு முன்னேற்றம் திருப்திகரமாக இருக்கும். மேலதிகாரிகளால் உங்களுக்கு சில சலுகைகள் கிடைக்கலாம்.

(முற்றும்)

## யாழில் ஹெரோ...

திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மார்டீன் வீதி சந்தியில் வைத்து சந்தேக நபர் நேற்று முற்பகல் 11.30 மணிக்கு கைது செய்யப்பட்டார் என்று மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் நாவாந்துறையைச் சேர்ந்த சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து 2 லட்சம் ரூபாய் பெறுமதியான 20 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் வழங்கிய தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என்று மதுவரித் திணைக்கள அதிகாரிகள் கூறினர். (ம-3,33)

## வவுனியாவில்...

தக்காரங்குளம் பகுதியில் உள்ள தோட்ட காணியிலிருந்து கைக்குண்டு ஒன்றினை ஓமந்தை பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

நேற்று மாலை வவுனியா கொந்தக்காரங்குளம் பகுதியில் உள்ள தனியார் தோட்ட காணியை அதன் உரிமையாளர் உழவு இயந்திரம் மூலம் பண்படுத்தியுள்ளார். பண்படுத்தப்பட்டபோது குறித்த காணியில் கைக்குண்டு இருப்பதை அவதானித்துள்ளார்.

பின்னர் குறித்த விடயம் ஓமந்தை பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டபின் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் கைக்குண்டு ஒன்றை மீட்டுள்ளனர். (ம-3,299)

## வடக்கில்...

3 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை நேற்று சனிக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருவரும் முல்லைத்தீவில் ஒருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று வடமாகாண சுகாதார சேவைகள்பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

சாவகச்சேரி வைத்தியசாலையில் கொரோனா அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்ட பெண் ஒருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர் ஏற்கெனவே அடையாளம் காணப்பட்ட தொற்றாளர் ஒருவருடன் தொடர்புடையவர்.

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பில் பெண் ஒருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர் ஆடைத்தொழிற்சாலையில் பணியாற் றும் தொற்றாளர் ஒருவருடன் தொடர்பு டையவர்." என்றும் வடமாகாண சுகாதார சேவைகள்பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ம-3,18,33)

## கன மழை...

சூறாவளியினால் 5 வீடுகள் சேதமடைந்துள்ளது.

கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஆனந்தபுரம் கிழக்கு பகுதியில் குறித்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தினால் இரண்டு தற்காலிக வீடுகள் முழுமையாகவும் மூன்று நிரந்தர வீடுகள் பகுதியளவிலும் சேதம் அடைந்துள்ளது. (ம-3)

## 13ஆவது...

அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இந்தியாவினால் இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்ட கச்சதீவை மீட்கப் போவதாக தமிழக அரசியல்வாதிகளால் கூறப்படும் விடயம் குறித்து, நேற்று கண்டியில் இடம் பெற்ற நிகழ்வில் அமைச்சர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

யாரிடத்திலிருந்தும் அழுத்தங்களுக்கு அடிபணியமாட்டோம். இறையாண்மை கொண்ட நாடாக நாங்கள் சுதந்திரமாகவே செயற்படுகின்றோம்.

13ஆவது திருத்தம் குறித்து இந்தியாவுடன் நட்புரீதியாக எமக்கு பேச்சு நடத்த முடியும். கச்சதீவு விவகாரம் இன்று நேற்று உருவானதல்ல.

பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பல அரசியல்வாதிகள் அரசியல் தேவைக்காக தேர்தல்கள் நெருங்குகையில் மக்களுக்கு அதனை தருவோம், இதனைத் தருவோம் என்கின்றார்கள் என்றார். (ம-3)

## சுயநிர்ணய...

உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத் தொடரில் விடயம் 08 இன் கீழான வியன்னா பிரகடனம் மற்றும் நடவடிக்கைக்கான திட்டமிடல் பற்றிய பொது விவாதத்தில் இணையவழியில் கலந்து கொண்டு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று உரையாற்றினார்.

அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசால் இழைக்கப்பட்ட கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் மத்தியில், தமிழ்த் தேசமானது தமது சுயநிர்ணய உரிமையை அனுபவிப்பதற்காக போராடி வருகிறது . இலங்கை அரசானது வன்முறையை கட்டவிழ்த்தபோது, அதிலிருந்து தம்மை பாதுகாக்கவே தமிழர்களும் ஆயுதவழி போராட்டத்தை கையிலெடுக்க நேர்ந்தது.

ஐக்கிய நாடுகள் சபையும் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையும் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கைகளை அங்கீகரிக்காமல் பேச்சளவில் மட்டும் கையாளும் வரை சுயநிர்ணய உரிமைக்காக போராடுகின்ற அனைத்து மக் களும், தொடர்ந் தும் பாதிக்கப்படு பவர்களாகவே இருப்பார்கள் என் பதை இங்கு வெளிப் படுத்திக் கொள்கி றேன்என்றார். (ம-3)

## ஐ.நா...

த்தை இந்திய அரசும் ஆதரிக்க வேண்டும் என தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசுக்கு எதிரான கண்டனத் தீர்மானத்தை இந்திய அரசு ஆதரிக்க வேண்டும் எனக் கோரி அவர் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் கூறப்பட்டுள்ளது. (ம-3)

## மேலும்...

கம் தெரிவித்தார்.

அதன்படி, நாட்டில் கொரோனாதொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 545 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## தமிழ...

ஐ.நா மனிதஉரிமைகள் சபைமுன்னாள் உயர் ஸ் தானிகரும் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற நீதியரசருமான திருமதி நவநீதம் பிள்ளை, பிரித்தானியாவின் சர்வதேச மனித உரிமைகள் வழக்குரைஞரும் பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் ரொனி பிளேயரின் பாரியாருமான செரி பிளயர் மற்றும் கனடாவின் சிறப்புமிக்கோர் பட்டியலில் இடம்பெற்றுள்ளவரும் 2010 ஆம் ஆண்டு மனித உரிமைகள் செயற்பாடுகளுக்காக நோபல் பரிசுக்கு முன்மொழியப்பட்டவருமான சர்வதேச மனித உரிமைகள் வழக்குரைஞர் டேவிட் மாடஸ் ஆகியோரும் இந்த மாநாட்டில் முதன்மை உரை ஆற்றியுள்ளனர். (ம-3)

## ஊடக...

நாட்டை கொண்டு செல்வதல்ல. அது என்னிடம் நடக்காது. அவ்வாறு நினைப்பவர்களுக்கு பாடம் புகட்டும் வழி எனக்கு நன்றாகவே தெரியும் என ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் கிராமத் துடன் கலந்துரையாடலின் மற்றுமொரு கட்டம் நேற்று நுவரெலியா - வலப்பனையில் இடம்பெற்றது.

இதன்போது, சுற்றாடல் அழிப்பு தொடர்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கருத்துத் தெரிவித்துள்ளபோதே இவ்வாறு தெரிவித்தார். (ம-3)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

சிங்களம் கற்போம்
எளிதான நுட்பங்கள் முறையில் உங்கள் இடத்திற்கே வந்து கற்றுத் தரப்படும். பாடசாலை மாணவர்கள் மற்றும் அரச, தனியார் நிறுவனத்தில் பணி புரியும் உத்தியோகத்தர்களுக்காக மற்றும் O/L பரீட்சைக்குத் தோற்ற உள்ளவர்களுக்காக. (6243)
077 695 4530

NLB அதிர்ஷ்டம்
80 தினங்களில் 90 லட்சம்
19.03.2021 மஹஜன சம்பத லொத்தரில் 20 லட்சம் முதல் பரிசு மற்றும் டிசம்பர் 31ஆம் திகதி மகஜன சம்பத லொத்தரில் 20 இலட்சம், ஜாதிக சம்பத லொத்தரில் 20 லட்சம், தன நிதானய 10 இலட்சம், சம்பத லக்கின வாரம் இரண்டு 5 லட்சங்கள்.
வாங்குவோம் வெல்வோம்
அத்தனை பரிசில்களும் ஒரே முகவர் மூலம் வெற்றி கொள்ளப்பட்டது.
மேலும் பல ஒரு இலட்சங்கள் (6256)
கனகலிங்கம் திலகவதி யாழ்.முகவர்கள் | இல.4 K.K.S வீதி, யாழ்ப்பாணம்.

மெகா பவர்
திகதி 20/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0795
வெற்றி எழுத்து R | சுப்பர் இலக்க 14 | வெற்றி இலக்கங்கள் 07 21 26 47

மஹஜன சம்பத
திகதி 2021/03/20
சீட்டிழுப்பு இலக்கம் 4432
ஆங்கில எழுத்து L | வெல்லப்பட்ட இலக்கங்கள் 6 4 7 1 5 1
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 20.03.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2727
ஆங்கில எழுத்து T | வெற்றி இலக்கங்கள் 10 13 17 45
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 20/03/2021 சீட்டிழுப்பு இலக்கம் 1106
வெற்றி இலக்கம் சிம்மம் | வெற்றி இலக்கங்கள் 5 5 2 3 4 9
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 20/03/2021 சீட்டிழுப்பு இலக்கம் - 469
P 21 24 39 76
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் 3 1 8 9
NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

சீட்டிழுப்பு வாரம் 062
சீட்டிழுப்பு திகதி 20.03.2021
வெற்றி இலக்கங்கள் 23 26 41
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,274,220.00
அபிவிருத்தி லொத்தர் சபை
நீலம், செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் முறையே புதன்கிழமை மற்றும் சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1228
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 20.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 119,722,980
வெற்றி இலக்கங்கள் 06 32 54 62
ஆங்கில எழுத்து G
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3558
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 20.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 32,498,760
வெற்றி இலக்கங்கள் 02 15 45 69
ஆங்கில எழுத்து L
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் 44,87,271/=
திகதி : 20.03.2021
வெற்றி வாரம் : 3109
வர்ணம் : இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 01 38 45 56
கடகம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,074,300

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1402
சீட்டிழுப்பு திகதி 20/03/2021
நிறம் கடும் நீலம்
தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் W 26 42 43 51
அடுத்த சுப்பர் ஜக்பொட் 75,412,110/=
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை

සංවර්ධන වාසනාව அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 420 | திகதி 20.03.2021 | வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து O | வெற்றி இலக்கங்கள் 02 21 50 | விதி எண் 6
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,292,456
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

## காணி விற்பனைக்கு

நுணாவில் கிழக்கு கல்டிமூட்டு ஒழுங்கையில் A9 வீதிக்கு மிக அருகில் 5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (6239)

**077 778 8687**
**077 299 1810**

## மணமகள் தேவை

1993, Hindu, Canada இல் வசிக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு (6158)

**077 506 8819**

## மணமகள் தேவை

1977 ஆம் ஆண்டு திருவோண நட்சத்திரம் 56 1/2 கிரகபாவம் உடைய அரசாங்க தொழில்புரியும் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு மணமகள் தேவை. (6258)

**077 719 3173**

## அண்ணா

EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/= (C-1768)

070 3305500
077 888 9388

976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்

சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

## சோ(F)பா கிளீனிங்

தங்கள் கறைபடிந்த சோ(F)பா, அலுவலக கதிரைகள், மெத்தைகள் மற்றும் நிலவிரிப்புகளை நவீன இயந்திரம் மூலம் சுத்தம் செய்து புதுப்பொலிவுடன் பெற அழையுங்கள். (6201)

**077 224 2787**

## வேலையாட்கள் தேவை

Waiter Boys - 01
மருந்தக உதவியாளர் - 01
வயது எல்லை : 18-22 (ஆண் / பெண்)
Viber / Whatsapp இற்கு CV அனுப்பவும். (C-1766)

**☎-077 464 8741**

## பணியாட்கள் தேவை

எமது நிறுவனத்தில் நிரந்தரமாக பணிபுரியக்கூடிய கணனி ரைப்பிங் செய்யத் தெரிந்த பணியாட்கள் தேவை. மேலதிக விபரங்களுக்கு நேரில் வருகை தரவும். (6258)

செல்வா கொமினிக்கேசன்
124, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
(பொஸ்கோ பாடசாலை சந்தி)

**☎-077 728 6050**

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜேர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-1767)

**0768226240** DHL

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் யாழ். நகரில் IELTS (Academic and General ) A1 UK Exams (வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை ) English Grammar and Spoken English தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும். Guaranteed to 7.5 in IELTS Exams.

Jaffna College Under Graduate Department
( Group and Personal Classes available ) (6172)

Please Contact :

**077 780 3970, 074 007 1970**

## இந்திய சாஸ்திரியார் வருகை

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர் சிங்கப்பூர்,மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் பெற்ற

**இரத்தினசாமி** அவர்கள்

ஜாதகம், கைரேகை, எண்கணிதம் திருமணத்தடை, கல்வித்தடை, வெளிநாடு செல்லத்தடை மற்றும் குழந்தைப் பாக்கியம், காதலில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, தொழில் முன்னேற்றமின்மை, புதிய தொழில் தொடங்க மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் தொடர்பு கொள்ளவும். (5724)

முன்பதிவுக்கு: **076 682 7368**
கச்சேரியடி, யாழ்ப்பாணம்

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

af **பிரெஞ்சு மொழி**

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம் www.ambafrance-lk.org



(6228)

**021 222 8093** புதிய விலாசம் No. 17, Kandy Road, Jaffna.

## தொழினுட்பப் பிரிவு

விஸ்டம்

**A/L 2023**
**2021 Day**

பொறியியற் தொழினுட்பவியல்

- K.ரவிக்குமார் (Dip in Tech, NCTT, PGDE)
- P.சண்முகதாசன் (Red Instructor Buildings - SLTES)
- R.சிவரூபன் NCECT, NCT (Electrical & Electronic)
- R.நிரூஜன் B.Sc
- M.சுதாகரன் NDT, B.Ed
- P.கிருபாகரன் NDT (Const Tech)
- P.கணேஸ் NDT Automobile, (Instructor Automobile)

தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்

- P.விமலநாதன் B.Sc
- R.நிரூஜன் B.Sc
- A.அரவிந்தன் B.Sc (Hons) Spel in Chem, PGDE
- S.மயூரதாசன் B.Sc MIT, SCJP

(C-1753)

உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்

- P.நிரோஜனன் B.Sc (Bio Technology)
- M.விஸ்ணுதேவன் B.Sc (Agri), PGDE
- P.S.ஷாணஸ் B.Sc (Agri)

தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல்

- S.மயூரதாசன் B.Sc MIT, SCJP

விவசாய விஞ்ஞானம்

- P.S.ஷாணஸ் B.Sc (Agri)

புவியியல்

- S.ஸ்ரீகிருஸ்ணா BA (Hons), PGDE (Maths)

கணிதம் (7)

- S.தர்சன் B.Sc (Hons), PGDE (Math)
- M.கோபிஸ்கண்ணா NDT (Maths)

ஊடகக் கற்கை

- S.கோணேசலிங்கம் Dip in Media

சித்திரம்

- S.கருணாகரன் NDT, B.Ed

077 248 7774
076 552 9093

## DMI COMPUTER EDUCATION

TVEC Reg.No.:P25/0056

**O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**22/3/2021-Mon at 9 am.**



IT & ENGLISH
DUAL DIPLOMA

Dip.in Information Teachnology
Dip.in Office Automation
Dip.in PC Application
Dip.in Microsoft Office
Dip.in Web Designing
Hardware,Mulitmedia,
Auto CAD,Java,C++,PHP
NVQ COURSES( ICT-Full Time,CAA Full/Part Time)

(C-1763)

- Microsoft online பரீட்சைகளுடாக Microsoft தலைமை அலுவலகத்திலிருந்து தலைமை செயலதிகாரியின் கையொப்பத்துடனான Microsoft specialist சான்றிதழ்கள்.
- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட NVQ சான்றிதழ்களை வழங்கிவரும் ஒரேஒரு தனியார் கணினி நிறுவனம்

ஆங்கிலம் பேச,எழுத,வாசிக்க யாழில் பெருமளவு மாணவர்கள் தெரிவு செய்யும்
**Diploma in English**
**Spoken English**

**DMI COMPUTER EDUCATION**

யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி (சயன்ஸ்ஹோல் அருகாமை) 021 222 4403

| M.M.V. வீதி, (மத்திய மகா வித்தியாலயம் அருகாமை காளி கோவில் முன்பாக) | கண்டி வீதி, (HNB வங்கி அருகாமை) | No.130,கே.கே.எஸ் வீதி, (NSB வங்கி அருகாமை) | சீரணிச்சந்தி | A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய கல்லூரி முன்பாக |
|---|---|---|---|---|
| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |

## வர்த்தகப் பிரிவுக்கான பிரத்தியேக வகுப்புக்கள்

366/8 1 ஆம் ஒழுங்கை, இருபாலை வீதி, கோண்டாவில். (ஐயப்பன் கோவில் அருகாமை)

**A/L 2023**

ஆரம்பம் :- 23.03.2021
செவ்வாய்க்கிழமை 3.00 Pm

| | |
|---|---|
| பொருளியல் | :- S. ஜெயக்குமார் |
| கணக்கீடு | :- A.T. சுரேன் |
| வணிகக்கல்வி | :- T.S. ரிஷி |

(6259)

**077 723 8597**

## IMMEDIATE VACANCIES

**Teacher for Spoken Sinhala**

- A suitable Qualification and experience in teaching Sinhala. Knowledge in Tamil would be an added advantage.

**Teacher for Sinhala Language for Grade 6 / 7 / 8 School Students**

- An experienced trained teacher or a graduate with Sinhala Should be able to teach Sinhala Language up to O/L Classes.

**Marketing Officer (Educational)**

- The role of the marketing officer is to assists in planning development and recruitment activities for the academy

APSS INTERNATIONAL
No, 189,K.K.S Road, Chunnakam, Jaffna.
E-mail :- apssengineering@yahoo.com
Contact No :- 021 2244 666, 0773867695

(C-1773)

## City & Guilds ENGINEERING PROGRAMME

Advanced Diploma (IVQ Level 5)
JUNE/ DEC 2021 Exam(Online classes)

யாருக்குஉகந்தது?

- NVQ 3 & 4 NCT AL Tech மாணவர்கள்
- தொழில்நுட்பதுறையில் தராதரம் அற்றோருக்குமிகவும் உகந்தது.

➢ Civil Engineering
➢ Telecommunication System
➢ Electrical and Electronic Engineering

விபரங்களுக்கு
APSS INTERNATIONAL
No, 189,K.K.S Road, Chunnakam, Jaffna.
Contact No :- 021 2244 666, 0773867695

(C-1773)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 301

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2052 | 21.03.2021 | தொலைபேசி : 021 222 3378



## உதிரத்தை உறையவைத்த கோரவிபத்து





உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

சங்கீதபூஷணம் கணபதிப்பிள்ளை அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம்.

சங்கீதபூஷணம் கணபதிப்பிள்ளை அவர்கள் எங்கட இசைத் துறையின் சொத்து. அவரின் இழப்பு இசைத் துறைக்குப் பேரிழப்பாகும். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்லி செலுத்தி அமர்ந்தனர்.

ஆலடியில் சில நிமிடங்கள் மௌனம் நிலவியது. மௌனத்தைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:** ஐ.நாவில இந்தியாவின்ர நிலைப்பாடு என்ன மாதிரி இருக்கப் போகுதாம்.

**கங்காணி:** நான் நினைக்கல்ல இந்தியா இலங்கையை ஆதரிக்குமெண்டு.

**மூப்பர்:** இலங்கையை ஆதரிக்காவிட்டாலும் நடுநிலையாக இருந்தால் அது இலங்கை அரசுக்குச் சாதகம்தானே!

**சிறாப்பர்:** உண்மைதான். இலங்கை அரசுக்குச் சாதகமாக இந்தியா நடுநிலை வகிக்கலாம்.

**பண்டிதர்:** அண்டை நாட்டோட பகைத்தால் அது அட்டமத்துச்சனி எண்டு இந்தியா நினைக்குது போல.

**வாத்தியார்:** இந்தியாவின்ர அட்டமத்துச் சனி இலங்கைக்குள்ள வந்து நிற்குது. அப்ப இனியாவது ஈழத் தமிழ் மக்களுக்கு இந்தியா உதவலாம்தானே!

**சாத்திரியார்:** ஏதோ பொறுத்திருந்து பார்ப்பம். இந்திய அரசாங்கத்தின்ர நிதி உதவியோட யாழ்ப் பாணத்தில அமைக்கப்பட்ட கலாசார மண்டபத்தைத் திறந்து வைக்க பிரதமர் மோடி வருவார் எண்டு சொல்லுகினம்.

அப்படி பிரதமர் மோடி வந்தால்; ஐயா! எங்கட பிரச்சினைக்கு ஒரு தீர்வைத் தந்திட்டுப் போங்க எண்டு நாங்கள் எல்லாரும் ஒண்டு சேர்ந்து கேட்க வேணும்.

**வாத்தியார்:** என்ன வாத்தியார் சொல்லுறியள். நாங்கள் எல்லாரும் ஒண்டு சேர்ந்து கேட்க வேணுமோ? அப்படி ஒரு ஒற்றுமை எங்களிட்ட வருமோ?

(வாத்தியார் இப்படிக் கூறியதும் ஆலடியில் நிசப்தம் நிலவியது. நிசப்தத்தைக் கலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்).

**கங்காணி:** வாத்தியார் சொல்லுறதில உண்மை இருக்கத்தான் செய்யுது.

இந்தாப் பாருங்க, உண்ணாவிரதமிருந்த அம்பிகையின்ர போராட்டத்தைக்கூட, எங்கட ஆட்கள் கொச்சைப்படுத்துகினம். ஏதோ அந்தப் பெண்மணி 16 நாட்கள் உண்ணாவிரதமிருந்து தமிழ் மக்களின்ர இன உணர்வை வெளிப்படுத்தியிருக்கிறார். அதை நாங்கள் மதிக்க வேணும். இதை விட்டிட்டு முகநூல்களில எங்கட ஆட்களே தூற்றுகினம் எண்டால் எங்கட இனத்திற்கு விமோசனம் கிடைக்க கடவுளும் விடமாட்டான் தானே!

**பண்டிதர்:** இப்ப கடவுளுக்கும் நாங்கள் விசுவாசமாக இல்லை. எல்லாத்திலும் பிஸ்னஸ் வந்திட்டுது.

**மூப்பர்:** பண்டிதர் ஐயா எதையும் தெளிவாச் சொல்லுங்களன்.

**பண்டிதர்:** முன்பெல்லாம் சிவ சொத்தை ஒருத்தரும் தீண்டமாட்டினம். ஆனால் இப்ப கடவுளின்ர சொத்தெண்டால் என்ன எண்டு கேட்கிற அளவில வந்திட்டுது.

**கங்காணி:** பண்டிதர் ஏதோ சொல்ல நினைக்கிறார். ஆனால் சொல்ல முடியாமல் விழுங்கிறார்.

**பண்டிதர்:** இஞ்சே கங்காணியார், தென்மராட்சி பிர்தேச செயலக பிரிவுக்குள்ள அடங்குகிற கரம்பகம் என்ற கிராம சேவையாளர் பிரிவில இருக்கிற கோயிலுக்குச் சொந்தமான வேப்பமரம் ஒண்டு தறிக்கப்பட்டிருக்குது. தறிக்கப்பட்ட மரம் தொடர்பில ஆலயத்தரப்பில சொல்லுகினம் அந்த மரம் கோவில் தேவைக்காகத் தறிக்கப்பட்டது எண்டும் அந்த வேப்ப மரத்தில கோயிலுக்குத் தேவையான நிலை, கதவு செய்யப்படுகுது எண்டும் சொல்லப்படுகுது.



## யாழ்.பல்கலைக்கழகத்தில கொரோனா தாண்டவம் ஆடுது

**சாத்திரியார்:** கோயிலுக்குச் சொந்தமான வேப்ப மரத்தில கோயிலுக்குத் தேவையான நிலை, கதவு செய்யிறது நல்லதுதானே.

**பண்டிதர்:** அதுதான் பாருங்க பிரச்சினை. கோயில் நிர்வாகம் அப்படிச் சொல்ல, கோவிலோட தொடர்புபட்டவர்கள்; தறிக்கப்பட்ட வேப்பமரம் விலைப்பட்டுப் போயிற்றுது. இது பற்றி ஒரு விசாரணை நடத்த வேணும் எண்டு சொல்லுகினம்.

**சிறாப்பர்:** அட, நாசமறுப்பு. சங்கதி அப்படியோ போகுது.

**வாத்தியார்:** என்னவாக இருந்தாலும் எதிலும் வெளிப்படைத் தன்மை இருக்க வேணும்.

இப்ப குறித்த கோயில் நிர்வாகம் நாலு பேரை அழைத்து இந்தாப் பாருங்க இதுதான் கோயிலுக்குரிய வேப்ப மரம். இந்த மரக்காலையில வைத்துத்தான் நிலை, கதவு செய்யிறம் எண்டதை நிரூபித்தால் எல்லாப் பிரச்சினையும் தீரும்.

**சிறாப்பர்:** வாத்தியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. எந்த விடயத்திலும் வெளிப்படைத்தன்மை இருந்தால் ஒருத்தரும் விமர்சனம் செய்ய ஏலாது.

அதிலும் பொது விடயங்களில வெளிப்படைத்தன்மை கட்டாயமானது.

**விதானையார்:** அதுசரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில கொரோனா தாண்டவமாடுது போல.

**மூப்பர்:** கொரோனா நேரத்தில டினர் பார்ட்டி வைச்சால் என்ன நடக்கும்.

**சாத்தியார்:** அது மட்டுமல்லப் பாருங்க, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில இருக்கிற பரமேஸ்வரப் பெருமான் பாலஸ்தாபனத்திலயல்லோ இருக்கிறார்.

மிக நீண்டகாலம் பாலஸ்தாபனத்தில இருந்தால் அது நோய், துன்பங்களைத் தானே தரும்.

**கங்காணி:** அதுசரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில இந்துப் பீடம் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் பரமேஸ்வரன் கோயிலில குடமுழுக்கு வைக்கிறதை ஒருத்தரும் வேகப்படுத்தாமல் இருக்கினம் எண்டால், அதற்கு என்ன காரணம் பாருங்கோ.

**பண்டிதர்:** எல்லாரும் தத்துவம் பேசுறதில கவனம் செலுத்துகினமே தவிர, பரமேஸ் வரப் பெருமானை உரிய இடத்தில இருத்தி, அவ ருக்குக் குடமுழுக்குச் செய்வம் எண்ட எண்ணம் ஒருத்தருக்கும் இல்லை.

இவ்வாறு பண்டிதர் கூற, அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி வேண்டும்

> “ இலங்கைத் திருநாட்டில் தமிழினம் பிறந்ததனால் அந்த இனம் பட்டபாடு வார்த்தைகளால் சொல்லி விட முடியாதது. ”

இந்த நாட்டில் பிறந்த தமிழினம் தனது உரிமையைக் கேட்டதால் பட்டபாடு மிகவும் கொடுமையானது.

எமது உரிமை மறுக்கப்படுகிறது, எமது நிலம் அபகரிக்கப்படுகிறது, எமது இனம் ஒடுக்கப்படுகிறது, எமது எல்லைகள் குறுகிக் கொண்டே போகின்றன. இவை அனைத்திற்கும் தீர்வு வேண்டி அறவழியில் போரிட்ட தமிழினம் அந்தப்போர் தோற்றுப்போகவே ஆயுதவழியில் போரிடத் தலைப்பட்டது.

ஆனாலும் ஆயுதப் போராட்டத்தின் பின்னர் பேரினவாத அரசுகள் அந்த ஆயுதப் போராட்டத்தை நசுக்கிவிட மேற்கொண்ட அனைத்து யுக்திகளிலும் மாட்டிக்கொண்டு மடிந்து போனது அப்பாவித் தமிழ் மக்களே.


தமிழர் உரிமைகளை வென்றெடுக்க தொடுக்கப்பட்ட உரிமைப் போர் பயங்கரவாதம் எனும் முத்திரை குத்தப்பட்டதன் பின் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் மிக மூர்க்கத்தனமாகத் தொடுக்கப்பட்டது என்றே கூறவேண்டும்.

2009 இறுதி யுத்தத்தில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழினம் அநியாயமாகக் கொல்லப்பட்டுள்ளது என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மை.

தமிழினத்தின் உரிமை மீட்புப் போராட்டம் முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட்டதுடன் தமிழினம் எவராலும் கவனிக்கப்படாத இனமாகக் கணிக்கப்பட்டது என்பது மனவருத்தத்திற்குரியது.

பேரினவாத அரசின் தேர்தல் வாக்குறுதிகள் பலமானதாக இருந்தாலும் அது தேர்தல் நிறைவு பெற்ற பின் தமிழினத்தைப் பல வீனப்படுத்துவதாகவே அமைந்தன.

தமிழர் தாயகப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றமாயினும் தொல்லியல் திணைக்களஆக்கிரமிப்பாயினும் தமிழர் நிலங்களைக் கபளீகரம் செய்வதாயினும் இவை அனைத்தும் மறைக்கப்பட்ட முகமூடிகளுக்குள் வெளிப்படையாக நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றன.



தமிழினத்திற்கு சிறந்த தலைமை ஒன்று இல்லாததன் விளைவே இதற்குக் காரணம் என்றாலும் இது பேரினவாதத்தின் மிகச் சிறந்த நிகழ்ச்சி நிரல் என்பதைத் தமிழினம் நன்றாகப் புரிந்து கொண்டது.

குருந்தூர் ஆதிசிவன் மலைப் பகுதியில் ஒரு தமிழரைக்கூடப் பிரதிநிதித்துவப்படுத்தப்படாத தொல்லியல் திணைக்கள அகழ்வாராய்ச்சியில் பெறப்பட்ட பல்லவர் கால சிவலிங்கத்தை பௌத்த விகாரையின் தூண் என அறிக்கை வெளியிட்டமை இதற்குத் தகுந்த உதாரணம்.

உலக வல்லரசு நாடுகளுக்கு இலங்கை மீதும் அதன் வளங்கள் மீதும் எப்போதும் ஒரு கண் இருந்து கொண்டுதான் இருக்கின்றது.

இந்து சமுத்திரத்தின் மிகச் சிறந்த கேந்திர நிலையத்தில் இலங்கையின் அமைவிடம் உள்ளதனால் இலங்கையில் காலூன்றினால் அது தெற்காசியாவில் தமக்கான பலத்தைக் கூட்டிக் கொள்ளும் என்பது அதன் மிக முக்கியமான நோக்கமாகும்.

அதற்கு வெளிப்படையாகவும் திரை மறைவிலும் பல வல்லரசு நாடுகள் முட்டி மோதிக் கொண்டிருப்பதை நாம் அவதானிக்க முடியும்.

ஆனாலும் இந்திய - இலங்கை உறவென்பது ஆரம்ப காலங்களில் நெருக்கமாக இருந்தாலும் கடந்த இரு தசாப்தங்களில் அந்த உறவில் பாரிய விரிசல் விழ்ந்துள்ளது என்றே கூற வேண்டும்.

பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க இந்தியாவின் உதவி மிகப் பெரியது என ஆட்சியாளர்கள் கூறிக்கொண்டாலும் இந்தியாவை ஓரங்கட்டி இலங்கை சீனாவுடன் ஒட்டிக் கொண்டுள்ளது என்பது மிகக் கசப்பான உண்மை.

என்னதான் பயங்கரவாதத்தை ஒழிக்க இலங்கை அரசுக்கு உதவி செய்திருந்தாலும் இலங்கையில், இந்தியாவால் கொண்டு வரப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என இந்தியா உறுதியாக இருப்பதும் இந்தியாவை விடுத்து இலங்கை சீனாவுடன் ஒட்டி உறவாடக் காரணமாக அமைந்துள் ளதை மறுக்க முடியாது.

13 ஆவது திருத்தச்சட்டத்திலுள்ள விடயங்கள் தமிழினத்திற்கு அதிகாரத்தை வழங்குவனவாக அமைந்துள்ளன.

ஆனால் தமிழினத்திற்கு அதிகாரப் பகிர்வை வழங்க இலங்கை ஆட்சியாளர்கள் தயாராக இல்லை. இந்த நிலையில் இந்தியாவின் பரம எதிரியான சீனாவுடன் இலங்கை ஒட்டி நிற்பது எதற்கானது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

அண்மையில் வடக்கின் முத்தீவுகளை சீனாவுக்கு வழங்க இலங்கை அரசு தயார் என்ற செய்தி பரபரப்பாகப் பேசப்பட்ட போது அதை இந்தியா மிகவும் நிதானமாகக் கையாள எத்தனித்துள்ளது.

ஆனாலும் இலங்கை ஆட்சியில் உள்ள அமைச்சர்கள் சீனாவுக்கு வடக்கின் முத்தீவுகளையும் வழங்குவதில் எந்த மாற்றமும் இல்லை என தொடர்ந்து பேசி வருகின்றனர்.

வடக்கின் முத்தீவுகளை சீனாவிற்கு வழங்கினால் அது இந்தியாவின் பாதுகாப்புக்குப் பாரிய அச்சுறுத்தலாக அமையும் எனக் கருதிய இந்தியா செய்வதறியாது திகைத்து நின்ற வேளையிலேயே இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தைக் காட்டி இலங்கையை மறைமுகமாக அச்சுறுத்தத் தொடங்கியுள்ளது.

கடந்த காலங்களில் ஐக்கிய நாடுகள் சபையால் கொண்டு வரப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானங்களுக்கு எதிராக வாக்களித்த இந்திய அரசு இம்முறை நடுநிலை வழங்கத் தீர்மானித்திருப்பதான தகவல்கள் இதைப் பறைசாற்றி நிற்கின்றன.

இதற்கிடையில் கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்த இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கிற்கு விஜயம் செய்து பலதரப்பட்டவர்களுடனும் சந்திப்பை மேற்கொண்டிருந்தமை ஈழத்தமிழர் விடயத்தில் இந்தியா இன்னமும் கரிசனையோடுதான் இருக்கின்றது என்பதனை இலங்கை ஆட்சியாளர்களுக்குச் சொல்லும் செய்தியாகவே அமைந்துள்ளது.

அத்துடன் அவரின் உரையில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினூடே அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமையில் குறைபாடு இருப்பதாகவும் அவை தீர்க்கப்பட வேண்டும் எனவும் கூறியிருக்கிறார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தினூடே கொண்டுவரப்பட்ட மாகாணசபை முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும் என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தமிழர் தாயகமான வடக்கில் நின்று கூறியமையை சர்வசாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது.

அதன்பின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மாகாண சபைத் தேர்தலை நடத்தத் தயாராகுங்கள் என அறிவித்தல் விட இல்லை இல்லை நடக்காது நடக்காது எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கூப்பாடு போட இந்தியாவைச் சமாளிக்கவே மாகாணசபைத் தேர்தல் அறிவிப்பு என மக்கள் விடுதலை முன்னணி அறிக்கைவிட தற்போது அமைதி நிலவிக் கொண்டிருக்கிறது.

சர்வதேச வல்லரசு நாடுகள் இலங்கையில் காலூன்ற தமிழர் பிரச்சினையை கையில் எடுத்து அதனூடே இலங்கை அரசை அடக்க நினைத்தாலும்,


இந்தியா சீனாவின் அச்சுறுத்தலை இல்லாதொழிக்க ஐ.நா.வைப் பகடைக்காயாகப் பாவித்தாலும் தமிழினத்தின் வலி நிறைந்த வாழ்விற்கு ஒரு முடிவு வேண்டும்.

பட்ட துன்பத்திற்கும் இழந்த இழப்பிற்கும் நீதி வேண்டும். இனி தமிழினத்தினால் எதுவும் செய்ய முடியாது என்பது உண்மையாயினும் இழைக்கப்பட்ட அனைத்திற்கும் நீதி வேண்டும். இதுவே தமிழினத்தின் மனக்கிடக்கை.

அபிமன்யு




## கரடியும் இரண்டு வழிப்போக்கனும்



அப்பொழுது கரடியும் அங்கு வந்து சேர்ந்தது. படுத்திருந்தவனை உண்பதற்காக அருகில் வந்த கரடி கீழே விழுந்து கிடந்தவன் காதருகே சென்று நுகர்ந்து பார்த்தது.

கரடி சோமுவை முகர்ந்து பார்த்ததை, மேலேயிருந்து பார்த்த ராமு, கரடி சோமுவிடம் ஏதோ சொல்கிறது என்று தவறுதலாக புரிந்து கொண்டான்.

பிறகு அவன் இறந்தவன் என்று முடிவு செய்து அங்கிருந்து நகர்ந்து போய் விட்டது.

கரடி செல்வதை மரத்தின் மேலிருந்து பார்த்த ராமு, கீழே இறங்கி வந்து சோமுவை எழுப்பினான்.

"கரடி சென்று விட்டது இனி எழும்பு நாம் தப்பி விட்டோம்" என்று ராமு கூறினான்.

சோமுவும் எழுந்து தன் யோசனை வெற்றியடைந்ததை எண்ணி நிம்மதியடைந்தான். கீழே படுத்திருந்தவன் எழுந்து அமர்ந்தான்.

ராமு சோமுவிடம், "கரடி உன் காதில் என்ன இரகசியம் சொன்னது?" என்ன என்று கேட்டான்.

அதற்கு சோமு, "ஆபத்தில் உதவாத நண்பனை என்றுமே நம்பக்கூடாது! என்று சொல்லி விட்டுப் போனது" என்றான். இப்பதிலால், ராமு தன் சுயநலப்புத்தியை எண்ணி நொந்து கொண்டான். சோமுவோ இனி மேல் எங்கள் நட்பு நீடிக்க வேண்டாம் என்று கூறிக் கொண்டு தனியே நடந்து சென்றான்.

**நீதி: ஆபத்தில் உதவாதது நட்பல்ல**

# மகாபாரதம்




தாயின் சொல்லையும் ஊழ்வினையின் பயனையும் எண்ணி அனைவரும் இதற்கு உடன்பட குழப்பம் தீர்ந்தது.

திரௌபதி விவகாரத்தில் பாண்டவர் குழப்பம் தீர்ந்தாலும் துருபதன் யாரோ ஒரு வாலிபன் பந்தயத்தில் வென்று திரௌபதியை அழைத்துச் சென்று விட்டானே என கலக்கம் அடைந்து திஷ்டத்துய்மனை அவர்கள் பின்னே சென்று அவர்கள் யார் என அறிந்து வர அனுப்பினான்.

சுயம்வரத்தில் வென்றவன் அர்ச்சுனன் என்பதை அறிந்து மகிழ்ந்தவன் அனைவரையும் அரண்மனைக்கு அழைத்தான். ஆனாலும் ஐவரும் திரௌபதியை மணப்பதில் அவனுக்கு உடன்பாடில்லை.

இச்சிக்கலை தீர்க்க வியாசர் தோன்றி "திரௌபதி ஐவரை மணத்தல் தெய்வக் கட்டளை. அவர்கள் ஐவரும் தெய்வாம்சம் கொண்டவர்கள்.

முற்பிறவியில் திரௌபதி நல்ல கணவன் வேண்டும் என தவம் இருந்து சிவனை ஐந்து முறை வேண்டினாள்.

அந்த வினைப்பயன் இப்பிறவியில் நிறைவேறுகிறது. இதனால் இவள் கற்புக்கு மாசு இல்லை என துருபதனிடம் கூற அவனும் சமாதானமடைந்தான்.

### இந்திரப்பிரஸ்தம்

இதனிடையே பாண்டவர் உயிருடன் இருப்பதை அஸ்தினாபுரத்தில் அனைவரும் அறிந்தனர். மேலும் அவர்கள் திரௌபதியை மணந்த செய்தியையும் கேட்டு பொறாமை அடைந்தான் துரியோதனன்.

திருதராட்டினனுக்கோ இது ஒரு பேரிடியாய் இருந்தது. பீஷ்மர், விதுரர் கருத்துக்கு ஏற்ப பாண்டவர்களுக்கு பாதி இராச்சியம் அளிக்க திருதராட்டினன் சம்மதித்தான்.

விதுரர் பாண்டவர்களை அழைத்துவர பாஞ்சாலம் சென்றார். அஸ்தினாபுரம் திரும்பிய பாண்டவர்கள் பீஷ்மரையும் திருதராட்டினனையும் வணங்கி ஆசி பெற்றனர். திருதராட்டினன் யுதிஷ்டிரனுக்கு பாதி ராஜ்யம் அளித்து மன்னனாக முடிசூட்டினான்.

(தொடரும்)



## இலங்கை கிரிக்கெட் அணி உலகக் கிண்ணம் வென்று 25 ஆண்டுகள் ஆகிவிட்டதே?

**ம.திருவரதராசா — வவுனியா**

**பிராணவாயுவையும் கனிகளையும் தருகின்றன மரங்கள். புல் தின்று பால் தரும் பசுக்கள். ஒப்பிடும்போது மனிதன் எவ்விதத்தில் மேலானவன்.**

இந்த உலகில் எதையும் உற்பத்தி செய்யாமல் அண்டி, தண்டி வாழ்வது மனிதன் மட்டுமே.

இதைத்தான் வைரமுத்து மீன் செத்தா கருவாடு நீ செத்தா வெறும் கூடு கண்ணதாசன் சொன்னதுங்க. பசு இருந்தாலும் பாலாகும் செத்தாலும் தோலாகும். நான் கண்டு சொன்னதுங்க என்று பாடியிருக்கிறார்.

இயற்கையினால் பின்னிப் பிணைந்த இந்த உலகின் சமநிலையைக் குழப்பி அதில் சுயலாபம் கண்டு தன்னையும் இந்த உலகையும் அழித்துக் கொண்டிருக்கிறான் மனிதன்.

**சுதன் — குப்பிழான்**

**நீதி வழங்குபவர்கள் வாய் திறக்காமல் இருப்பது சரியானதா வியாசரே?**

நீதி என்பது அரசனுக்கும் ஆண்டிக்கும் ஒன்றாய் இருக்க வேண்டும். ஆனால் எம் இதிகாச புராணங்கள் நீதி என்பது உயிரினங்களுக்கே ஒன்றாக இருக்க வேண்டும் என்கிறது.

இதையே மனுநீதிகண்ட சோழனின் மகன் பசுக் கன்றினை தேர் சில்லில் நசுக்கிக் கொன்றுவிட தாய்ப்பசு தன் பிள்ளைக்கு நீதி வேண்டி மனுநீதி சோழனிடம் நீதிகேட்க தன் மகனை தேர் சில்லில் இட்டு கொலை செய்தான் மனுநீதி சோழன்.

இதெல்லாம் எதற்காகக் கூறப்பட்டதென்றே தெரியாமல் இருப்பவர்களிடம் நீதியை எதிர்பார்க்க முடியுமா என்ன?

**பிரதர் — யாழ்ப்பாணம்**

**ஆர்யாவின் டெடி திரைப்படம் பார்த்தீர்களா படம் எப்படி?**

மிகவும் தத்ரூபமாக எடுக்கப்பட்டுள்ளது. அதிகம் சிறுவர்களை மிகக் கவரும்படி படம் உள்ளது. அனைத்து உடல் மொழியையும் முகபாவத்தையும் காட்டி எம்மில் ஒருவராய் இணைந்தே பயணிக்கிறது டெடி.

திரையரங்குக்கு வராமல் நேரடியாக ஓ.டி டியில் வெளியாகியுள்ள டெடி திரைப் படத்தை ஒரு முறை பார்த்து விடலாம். வித்தியாசமான அனுபவத்தைக் கொடுக்கும்.




**தாரா — வடமராட்சி**

**கடவுள் உங்கள் முன் வந்து நின்றால் நீங்கள் என்ன கேட்பீர்கள் வியாசரே?**

அப்பனே கடவுளே உனக்கு மனச்சாட்சியே இல்லையா? முள்ளிவாய்க்காலில் எம் இனத்தை கொன்று குவித்தவர்கள் அங்கு அப்படி ஒன்றும் நடக்கவில்லை என்று ஐ.நாவில் நின்று கூறுகிறார்கள். இதை எல்லாம் நீ பார்த்துக் கொண்டுதான் இருக்கிறாயா?

ஒரு கடவுளான உனக்கு பத்துக் கை உண்டு. ஒவ்வொரு கையிலும் ஒவ்வொரு விதம் விதமான ஆயுதம் எதற்கு?

எம் இனத்தை கருவறுத்தவர்களை வேடிக்கை பார்க்கவா உனக்கு பொங்கல் வைத்து அலகு குத்தி காவடி எடுக்கிறோம்?

பதில் சொல்லு ஐயனே என அவன் பாதத்தைப் பற்றிப் பிடித்திருப்பேன். விடமாட்டேன்.

**நிலாஜினி — சுழிபுரம்**

**முரட்டுப் பக்தியா? மென்மைப் பக்தியா சிறந்தது வியாசரே?**

கண்ணன் மீது ஆண்டாள் கொண்ட காதல் பக்தி மென்மை பக்தி, எனினும் சிவபெருமான் கண்ணில் இருந்து உதிரம் வர தன் கண்ணை தோண்டி எடுத்து வைத்த கண்ணப்பரும் சிவனை தரிசிக்க தலையால் நடந்து சென்ற காரைக்கால் அம்மையாரும் கொண்டது வன்மைப் பக்தி எனலாம்.

நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பது போல பக்தியும் இரண்டாகிறது. அது வன்மையாகவும் இருக்கலாம். மென்மையாகவும் இருக்கலாம். ஆனால் அது இறைவனை அடையும் வழி அவ்வளவே.



## ஆர்யாவின் டெடி திரைப்படம் பார்த்தீர்களா படம் எப்படி?

**ராஜ் — மானிப்பாய்**

**அருமையான ஜோக் ஒன்றைச் சொல்லுங்களேன் வியாசரே விழுந்து விழுந்து சிரிப்பதற்கு?**

வழிப்போக்கன் ஒருவன் கேட்டான் என்ன அங்கே இவ்வளவு சனக்கூட்டம் நிற்கிறது என. அதற்கு மற்றவர் கூறினார் அது .......... கட்சிக் கூட்டம் நடக்கிறது என. அடடா ............ கட்சிக் கூட்டத்திற்கு இவ்வளவு சனக் கூட்டமா? என வியந்தார்.

அதற்கு மற்றவர் வெறுப்புடன் கூறினார். அட நீ வேற ............ கட்சிக் கூட்டத்திற்கு ஒருவர் தானாம் சென்றார். அந்த ஒருவர் யார் என்று அறியவே இவ்வளவு சனக் கூட்டம் என.

(............ உங்களுக்கு விரும்பிய கட்சிப் பெயரைஇட்டுப் பாருங்களேன்.)

**கமல் — வல்வை**

**யாரையும் நம்ப முடியாதுள்ளதே வியாசரே என்ன செய்ய?**

அதுதானப்பா இன்றைய உலகம். யாரும் தமது சொந்த முகத்தைக் காட்டுவதில்லை. ஏதோ ஒரு தேவைக்காக, ஏதோவொரு காரணத்திற்காக முகமூடியை அணிந்து கொண்டே அலைகிறார்கள், பழகுகிறார்கள்.

தமது காரியம் முடியும் வரை அன்பாய், பண்பாய் நடப்பது. முடிந்ததும் போட்டுக் கொடுத்து விட்டு போய்க் கொண்டே இருப்பார்கள்.

இந்த உலகம் சாதாரணமானதல்ல. இது போலிகள் நிறைந்த உலகு. இதில் வாழ்ந்து நிமிர்வதென்பது மிகக் கஷ்டமானது. வீழ்ந்து விட்டால் தூக்க ஆள் இருக்காது. எம்மில் மிதித்து முன் செல்வதே இந்த போலி உலகம்.

**ஆருஷ் — நெல்லியடி**

**இலங்கை கிரிக்கெட் அணி உலகக் கிண்ணம் வென்று 25 ஆண்டுகள் ஆகிவிட்டதே?**

அர்ஜுண ரணதுங்க, சனத் ஜயசூர்ய, மஹாநாம, முத்தையா முரளிதரன், களுவிதாரண என ஒரு அதிரடிப் பட்டாளமே அன்றைய அணியில் இருந்தது எனலாம். அதிலும் சனத்-களுவிதாரண ஆரம்பத் துடுப்பாட்டம் சொல்லி வேலை இல்லை.

நோ போல் வீச அதை எதிரில் இருக்கும் துடுப்பாட்ட வீரர் உரத்துக் கூற அந்தப் பந்தை பயமின்றி சிக்சருக்கு விரட்டிய உத்தியை எல்லாம் பயன்படுத்தியது அன்றைய இலங்கை அணி.


முரளிதரன் முறையற்ற பந்து வீசுகிறார் என நடுவர் தொடர்ந்து குற்றம் சாட்ட அணித்தலைவர் அர்ஜுண அனைத்து வீரரையும் அழைத்துக் கொண்டு மைதானத்திற்கு வெளியே சென்றதை எல்லாம் நினைத்தால் ஆஹா அதுவல்லவா அணி என்றே தோன்றும்.



**அன்பு வாசகர்களே!**

அரசியல், ஆன்மீகம், நகைச்சுவை, பொழுதுபோக்கு என உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை **021 567 153** எனும் இலக்கத்திற்கு SMS செய்யுங்கள் அல்லது ஆசிரியர், வியாசர் பதில்கள், இல. 03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

## மனிதா ஏன் அழுகை?



மனிதா ஏன் அழுகை
மனதிற்கொள் நம்பிக்கை
மனமெங்கும் நல் உவகை
மனித வாழ்விற்கது கொள்கை

வீணான உன் பகை
விடுத்தாலே புன்னகை
விடாத நல் கொள்கை
வீரம் மிகு பெரு வாகை

எண்ணாதே சுடு தீங்கை
எடுக்காதே பிறர் பங்கை
எப்போதும் இறை தொழுகை
என்றுமே நல் வாழ்க்கை

காத்திடு உன் வாக்கை
கருணையை பெரு வாகை
மாற்றிடு உன் போக்கை
மண்ணுக்கே உன் யாக்கை

கலாமோகன் பிரகான்

## ஏதற்கு வந்தாய்?

வல்வைக்கமல், வல்வெட்டித்துறை

மரணித்த மனிதத்தை மாண்டுபோன மனித சமத்துவத்தை
மீண்டும் மண்ணுள் புதையாமல் மாற்றிட வந்தாயா?

அழியும் இயற்கையை அழகான உலகினை
அண்டம் அனைத்தையும் ஆவலுடன் காக்க வந்தாயா?

விஞ்ஞானம் விந்தை உலகம் விண்வெளி ஆராய்ச்சி என
விரைந்திடும் மனிதனை வீட்டுக்குள் கட்டிப்போட வந்தாயா?


நேற்றோ நீ அந்நியமாய் இன்று அருகில் அந்நியோன்யமாய்
உன்னை உதடுகள் உச்சரிக்கட்டும் என வந்தாயா?

மரணத்தைப் பரிசாக்கி மானுடனை கிலிகொள்ள
மார்கழியில் பிறப்பெடுத்து மறைபொருளாய் வந்தாயா?

இத்தனை கோபத்தோடு இரக்கம் சிறிதுமற்று
இன்பங்களைத் தொலைத்துவிட– சமூக இடைவெளியோடு வந்தாயா?

உன்னால்– உன் வருகையால் உணர்ந்துவிட்டோம் ஒற்றுமையை
உயர்வாய் இயற்கையைப் போற்றிடவே துணிந்துவிட்டோம்

போய்விடு! கொரோனாவே போய்விடு!
நாம் திருந்திவிட்டோம் நீ போய்விடு!



## "ஆ" என்றால் அம்மா



உனக்காக கவிதை எழுத எண்ணினேன்
தீர்ந்தது பேனா மையும் புத்தகங்களும் மட்டுமே
நான்கு எழுத்தில் உலகம் உன உச்சரித்தேன்
மூன்று எழுத்தில் அன்னை என அழைத்தேன்
இரண்டு எழுத்தில் தாயே என எழுதினேன்
ஓர் எழுத்தில் எழுத எண்ணினேன்
வரவில்லை எனக்கு வார்த்தைகள்
கீழே " ஆ" என அழுதேன்
ஓடி வந்தாள் என் அம்மா
அப்போதுதான் உனக்கு
அப்படியும் ஒரு பெயர் உள்ளது எனத் தெரிந்தது
நான் பிறக்கும் போது உன்
தொப்புள்கொடியை வெட்டியது நம்மை பிரிக்க அல்ல
என்னைப் பெற்ற உன்னை
பாராட்டி வெட்டும் ரிப்பன் அம்மா

எஸ்.சர்வினி
யா/இந்து மகளிர் கல்லூரி

## மௌனத்தின் தேடல்- 520



## உடல் ஆரோக்கியம்

ஒருவருக்கொருவர் உலக்கைகளால்
உரலில் மாறிமாறி அரிசியிடிக்கும் தாய்மாரே
இந்த இயற்கை முறையின் மூலம்
நம் உடலுக்குக் கிட்டும் ஆரோக்கியம்
இயந்திரத்தால் நாம் அரிசி திரிப்பதில்
சிறிதும் இல்லையடா

சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை

## மௌனத்தின் தேடல்- 521



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## உடலுக்கு இதமாய் இருந்தது

உரல் உலக்கைப் பயன்பாடு
உடலுக்கு இதமாய் இருந்தது
உறவுகள் ஒன்றாய்ச் சேர்ந்தனர்
கூடி ஆடி மகிழ்ந்தனர்
மிக்ஷி கிறைண்டர் பாவனையால்
உடல் உழைப்புக் குறைந்திடவே
நோய்கள் பலவும் அணுகின
துன்பம் எமக்கு நேர்ந்தது

த.சிவா,
நாவலர் வீதி

## பழையன கழிதல்

தடக்கி விழுவது தாத்தா காலில்
தலைசாய்வது பாட்டி மடியில்
ஓடி ஒழிய அன்னை முந்தானை
ஓங்கி வளர தந்தை தோள்கள்
ஊட்டிவிட அத்தைமார்கள்
ஊடல் பொழுதிற்கு மாமன்மார்கள்
ஆடி மகிழ அக்கா அடிவாங்க அண்ணா
உலக்கை வேள்வி அரிசி மாவிற்கு
அம்மியின் வேட்டை
தேங்காய் சட்னிக்கு என
ஆனந்தமாய் கழித்த பொழுதுகள்
ஆணவம் பெற்று
தனிக்குடித்தனம் ஆகின

ஆ.நிருஷினி,
யா/சுன்டுக்குழி ம.க

## மறைந்த மனித இயந்திரம்

ஓ... பெண்ணே– நீ
இரும்பாக இருந்ததொரு காலம்...
உரலில் உலக்கையை இயக்கிய போது
உடலுக்கு உரம் தந்தது
சுகப்பிரசவத்திற்கும்–அது வழி சமைத்தது...
இன்று... உன் பிரசவத்திற்கு இயந்திரங்களே
வழிசமைக்கிறது... அது!
எள்ளி நகையாடும் நிலைக்கு
உன்னைத் தள்ளியும் விட்டது
மன உறுதி மட்டும் போதாது
உனக்கு, உடல் உறுதியும் வேண்டும்...!

சன்.தியாளேஸ்,
நுணாவில் மத்தி

## இயற்கை எழில் பேணி...

உரல் உலக்கை ஆட்டுக்கல் அம்மி குளவி
ஆர் கண்ணில் பட்டதுவோ அவை
காணாமல் போய் பெண்மை உடல் பெருத்து
உடற்பாரம் தாங்காது உபாதைப்படும்
நிலை இனி எப்போ
இயற்கை எழில் பேணி எழுவோம்

கார்வண்ணன், காவலூர்

## உயர்ந்த வழி

வலக்கை பற்றி உலக்கை பிடித்து
உணவுப் பொருளிடித்து
உடற்பயிற்சியோடு
களைப்பின்றி வேலை முடிய
மாற்றுலக்கை போட்ட
காலம் மாறிப்போச்சு

சி.திவ்வியா
யா/பன்னாகம்
மெய்கண்டான் ம.வி.

# ஒரு குடும்பத்தில் பறிபோன இரு உயிர்கள்

## விதியை மாற்றிய வீதி விபத்து




**பா**தையோரம் வாழைமரங்களும் தோரணங்களும் காற்றில் அசைந்தாடி அங்கு நடந்த துயரத்தை வெளிப்படுத்திய வண்ணம் இருந்தன. அந்த மரண வீடுகளை நெருங்கும் சமயம் அழுகுரல்களின் ஒலி என் காதில் விழுந்தது. என் கால்கள் ஒருகணம் நகர மறுத்தது. வீதி விபத்தின் கொடுமையால் அந்த வீடுகளில் இரண்டு உயிர் கள் பரிதாபமாகச் சாய்ந்தது. பிறப்பும் இறப்பும் வாழ்வின் நியதி என்றாலும் எல்லோர் மனதிலும் அந்த உயிரற்ற உடல்கள் கண்ணீரை வரவழைத்தது.

விபத்தால் விதவைகளாகிய இரு சகோதரிகள் கண்ணீர்விட்டுக்கதறும் காட்சி கல்மனதையும் கசிந்துருக வைத்தது. வவுனியாவில் மரண வீட்டில் கலந்து திரும்பும் வழியில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பனை மரத்தில் மோதிப் பலியானார்கள். அதிவேகம் ஆபத்தை விளைவித்தது. அவர்களுக்கு மரணத்தை மாலையாக்கியது. வளர்ந்து வரும் அவர்களின் பிள்ளைகளின் கல்வி யும் எதிர்கால வாழ்வும் இந்த மண்ணில் கேள்விக்குறிதானா? அதிவேகம் இரு சகோதரிகளின் வாழ்வில் பேரிடியாக விழுந்தது.

### இரண்டு உயிர்களுக்கும் என்ன நடந்தது...?

கடந்த 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு சுப்பிரமணியம் தர்மராஜ் தன்னுடைய துணைவியாரான அன்னை மேரியை பனங்கட்டுக்கொட்டு, 65 காணித் திட்டம் மேற்கு, மன்னார் என்ற முகவரியில் அமைந்துள்ள இல்லத்திலிருந்து அப்பாச்சி மோட்டார் சைக்கிளில் ஏற்றிச்சென்றுள்ளார். இருவரும் வவுனியா செட்டிகுளம் சங்கன் குளத்திலுள்ள உறவினரின் மரண வீட்டிற்குச் சென்றுள்ளார்கள். அத்தினம் மரண வீட்டில் தங்கிவிட்டு மறுநாள் முற்பகல் 11.30 மணியளவில் அங்கிருந்து சுப்பிரமணியம் தர்மராஜ், தேவராஜ் சிவகுமார் (இரு சகோதரிகளை மணம் முடித்தவர்கள்) தமது மனைவி, பிள்ளைகளை புகையிரதத்தில் ஏற்றிவிட்டு தாம் குறித்த மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார்கள். மன்னார் மதவாச்சி பிரதான வீதி, சிறுநாவற்குளம் வீதியூடாக மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த போது வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியோரத்தில் நின்ற பனை மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது. இதன் போது சம்பவ இடத்திலேயே சு.தர்மராஜ் உயிரிழந்துள்ளார்.

பின்னால் இருந்த தே.சிவகுமார் படுகாயமடைந்த நிலையில் மன்னார் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு இரண்டு மணி நேரத்தில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். குறித்த இருவரும் மன்னாரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகளைத் திருமணம் செய்தவர்களாவர்.

எல்லோராலும் உதயா என்று அழைக்கப்படும் சுப்பிரமணியம் தர்மராஜ் 1985.02.11 ஆம் திகதி பிறந்தார். த.றம்மியா (தரம் - 11), க.குமாரி (தரம் - 03), த.பிரவீன்சாந் (தரம் - 06) ஆகிய மூன்று பிள்ளைகளின் தந்தையாவார். கடற்றொழில் செய்து பல சிரமங்களுக்கு மத்தியிலும் தனது குடும்பத்திற்கு முழுப் பலமாக இருந்தவர்.

தேவராஜ் சிவகுமாரை எல்லோரும் சிவா என்றே அழைப்பார்கள். 1981.08.28 ஆம் திகதி பிறந்தார். மேசன் தொழில் செய்து வந்தார். இவருக்கு சி.ரிதுஷா (தரம் - 10), சி.விதுர்ஷா (தரம் - 04), கவிதரன் (9 மாதக் குழந்தை) ஆகிய மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

### தர்மராஜ் மேரியின் மனக்குமுறல்

சனிக்கிழமை காலை என்னுடைய பிள்ளைகள், தங்கச்சின்ர பிள்ளைகள், புருசன், உறவினர்கள் எல்லோரும் ரெயினில் செத்தவீட்டுக்குப் போனவினம். நானும் கணவரும் மோட்டார் சைக்கிளில் போனோம். மறுநாள்தான் வொடி எடுத்தார்கள். கணவர் சொன்னார் நானும் தங்கச்சின்ர புருசனும் மோட்டார் சைக்கிளில் வாறோம், நீங்கள் ரெயினில வாங்கோ, நாங்கள் உங்களுக்கு முதல் போய் சாப்பாடு செய்கிறம் என்றார். நானும் ஓம் சொல்லிட்டன். எங்களை ரெயில் நிலையம் வரை வழியனுப்பி 11.30 மட்டும் இருந்தார்கள். எங்களுக்கு 12 மணிக்கு ரெயின். ஆனாலும் அந்த அன்று ஒரு மணிக்குத்தான் வந்தது.

நாங்கள் ரெயினால வந்து இறங்க 2 மணி இருக்கும். அப்பதான் எங்களுக்குத் தகவல் வருது இப்படியென்று. இவருக்கு கழுத்தில வெடிப்பு, இதயத்தில பலமாக அடிபட்ட காயம் என்று வைத்தியர் கூறினார். என்னையும் எனது பிள்ளைகளையும் 71 வயதுடைய அவரது தாயாரையும் சகோதரர்களையும் விட்டிட்டு இப்படி வெகுவிரைவாகச் சென்றுவிட்டார். எனது பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு எப்படி அமையப் போகிறது. தந்தையை இழந்த பிள்ளைகளுக்கு நான் எப்படி ஆறுதல் கொடுப்பது. எனது கணவரை அநாவசியமாக இழந்தேனே என்று உருகி உருகிக் குமுறினார். யாருமே தேற்ற முடியாத அவலத்திற்குள் மேரி தள்ளப்பட்டு விட்டாள்.

சம்பவ இடத்தில் வீடியோ எடுத்த இளைஞன். இரண்டு உயிர்களும் விபத்துக்குள்ளாகி ஓர் உயிர் உடனேயே பிரிந்து விட்டது. தே.சிவகுமார் (சிவா) உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்தார். யாராவது தன்னைக் காப்பாற்றுவார்களா? என்று மன்றாடியிருக்கிறார். இவ்வேளையில் அவ்விடத்தில் நின்ற ஓர் இளைஞன் தனது திறன் கைபேசியினால் விபத்துக்குள்ளான இருவரையும் வீடியோ பதிவு செய்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருக்கிறார்.

மனித நேயம், மனிதாபிமான முறைகளில் ஒருவருக்கு உதவுவது மனிதனின் உச்சளவிலான பண்பினை வெளிப்படுத்தி நிற்கும். ஒருவரின் துயரம், வேதனையில் பங்கெடுக்கின்ற மனநிலை இல்லையாயினும் அந்தத்துயரத்தையும் வேதனையையும் கொச்சப்படுத்துகின்றதாக அல்லது மேலும் வேதனைப்பட வைக்கின்றதாக எமது செயல் அமையலாகாதுதானே! சமூக வலைத்தளங்களில் எவற்றை பதிவிட வேண்டும், எவற்றைப் பதிவிடக்கூடாது என்று சிந்தித்துப் பல இளைஞர்கள் செயற்பட வேண்டும்.

தான் போடு கின்ற விடயப்பரப்பை பலர் ஆதரிப்பார்கள், பலர் கருத்துக்களைப் பகிர்வார்கள் என்பதற்காக உளசார் பாதிப்புக்களை ஏற்படுத் தக்கூடிய விடயங்களைப் பதிவு செய்வதில் கவனம் செலுத்துவோம்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகளின் கணவன்மார் இருவர் விபத்தில் பலி என்ற செய்திக்குள் மானிடம் எவற்றைக் கற்றுக்கொள்ளப்போகின்றது. வீதிச் சட்டங்களைக் கடைப்பிடிக்கவும் அதன் படி ஒழுகவும் வேண்டும். வேகக் கட்டுப்பாட்டைக் குறைத்து தனக்கும் மற்றவருக்கும் பாதிப்பில்லாத வகையில் வேகம் அமைந்திருக்க வேண்டும்.

தலைக்கவசம் அணிந்திருத்தலோடு அதன் இணைப்புப் போடப்பட்டிருக்க வேண்டும். குறிப்பிட்ட பயணத்தைத் தொடர்வதற்கு ஏற்றதான பழுதில்லாத வாகனமாக இருத்தல் வேண்டும். வாகனத்தைப் போட்டி போட்டுச் செலுத்துவதைத் தவிர்க்க வேண்டும். இவற்றைக் கடைப்பிடிக்கும் பட்சத்தில் இன்னுயிர்கள் பறிபோவதைத் தவிர்க்கலாம்.

இரண்டு தந்தையர்களின் மரணத்தினால் ஆறு பிள்ளைகளின் கல்வி நிலையும் எதிர்காலமும் வீழ்ச்சிக்குள்ளாகியுள்ளது. இந்தப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு யார் கரம் நீட்டப் போகின்றார்கள்?

இரண்டு சகோதரிகளின் வீட்டிலும் மரணச் சடங்கு. பெற்ற தாயால், பெற்ற தந்தையால், உடன்பிறந்த சகோதரர்களால் எந்த மரணச்சடங்கில் பங்கெடுப்பது. இந்த நிலைமை இனி ஒருவருக்கும் நிகழாது இருக்க விழிப்பாக இருப்போம்.

சட்டத்திற்குச் சவால் விடும் சாதனையா? சீரற்ற வாகனப் பாவனையா? மது அருந்தி மரணத்தைக் கைபிடிக்கும் கலையா? மானிடம் மரணத்தை நோக்கி மண்ணில் போனால் என்ன மிஞ்சப் போகிறது? புரியவில்லை வேதனையும் வெறுமையும்தான் சொந்தமாகும் என்ற கவலையுடன் அந்த மரண வீட்டிலிருந்து புறப்பட்டு வீடு சென்றேன் கைக்கடிகாரம் இரவு எட்டு மணி காட்டியது.

ஜெயம் ஜெகன்

# டாரெட் போகலாம் வருகிறீர்களா?

## மாயமில்லை மந்திரமில்லை

மனித வரலாற்றில் இது வரை, இப்படியானதொரு மர்மச் சம்பவம் நடந்ததே இல்லை. உலகத்தில் நடைபெற்ற மர்மச் சம்பவங்களைச் சொல்லும்போது, அந்தச் சம்பவத்தைத் தவிர்த்துவிட்டு, யாரும் கடந்து செல்ல முடியாது. அதனாலேயே, மிகவும் முக்கிய மான 'டாரெட்' மனிதனின் கதை அந்தச் சம்பவம். உண்மையாக நடந்ததா? இல்லையா? என்பதற்கான எந்த ஆதாரமும் கிடையாது. நடந்ததாகப் பலர் பல இடங்களில் பதிவு செய்திருக்கிறார்கள். அது நிஜமாகவே நடந்திருக்கும் பட்சத்தில், அங்கு ஒளிந்திருப்பதன் விளக்கங்களை நாம் பார்க்கலாம்.

1954 ஆம் ஆண்டின் கோடைக் காலத்தில், உல்லாசப் பிரயாணிகளால் ஜப்பான் நிரம்பிக்கொண்டிருந்தது. இரண்டாம் உலகப்போர் முடிந்த நிலையில், தன்னை மீளக் கட்டமைக்க ஆரம்பித்த ஜப்பானுக்கு வியாபார ரீதியாகவும் பலர் வந்து கொண்டிருந்தனர். டோக்கியோ விலிருக்கும் 'ஹனேடா' விமான நிலையம் சுறுசுறுப்பாகவே இயங்கிக் கொண்டிருந்தது.

**அப்போது ஒரு ஆச்சர்யம் நடந்தது. அதுவரை ஆங்கிலத்தில் உரையாடியவன், ஜப்பானிய மொழியில் பேச ஆரம்பித்தான். திகைத்துப்போனார் அதிகாரி. ஐரோப்பியன் ஒருவன் அந்த அளவுக்குத் தெளிவான உச்சரிப்புடன் ஜப்பான் மொழி பேசியதை அவர் இதுவரை கண்டதில்லை. அவ்வளவு சரளம்.**



மேற்கு ஐரோப்பாவிலிருந்து வந்த விமானம் ஒன்று அப்போதுதான் தரையிறங்கியிருந்தது.

விமானத்தின் பயணிகள் கடவுச் சீட்டைப் பரிசோதனையிடும் வரிசையில் நின்றுகொண்டிருந்தனர். நீண்டநேரப் பயணத்தின் அயர்ச்சியால், பயணிகளிடம் பதற்றம் காணப்பட்டது. ஆனால், எந்தவிதமான அவசரமோ பதற்றமோ இல்லாமல், கடைசியாக அவன் நின்றுகொண்டிருந்தான். இன்றைய காலம் போல, இறுக்கமான பரிசோதனைகள் அப்போது இல்லை. வெகு சீக்கிரத்தில் பரிசோதனைகள் முடிக்கப்பட்டு, ஒவ்வொருவராக அனுப்பப்பட்டார்கள். அவனுக்கான சமயமும் வந்தது. ஜப்பானியர்களுக்கே உரித்தான பணிவுடனும் உபசரிப்புடனும் வணக்கத்தைத் தெரிவித்து, கடவுச் சீட்டை வாங்கிக்கொண்டார் சுங்க அதிகாரி. கடவுச் சீட்டைப்பார்த்தார்.

அவனையும் நிமிர்ந்து பார்த்தார். ஐரோப்பியர்களுக்கே உரிய எடுப்பான தோற்றத்துடன் கோட், டை அணிந்து பயணக் களைப்பு எதுவுமில்லாமல் அவன் காணப்பட்டான். அதிகாரியைப் பார்த்து சிநேகத்துடன் சிரித்தும் கொண்டான். ஆனால், சுங்க அதிகாரியின் முகத்திலிருந்த சிரிப்பு மெல்ல வடியத் தொடங்கியது. முகம் இறுக்கமா னது.

அவனது கடவுச்சீட்டை உள்ளேயும் வெளியேயுமாகப் பலமுறை பார்த்துவிட்டு, "எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று கேட்டார். அடுத்த நொடியிலேயே "டாரெட்..!" (Taured) என்ற பதில் அவனிடமிருந்து கிடைத் தது. தொடர்ந்து, "கடவுச்சீட்டில் அது இருக்கிறதே!" என்று சிரித்தபடி சொன்னான். அதிகாரியிடமிருந்து வந்த அடுத்த கேள்வியை அவன் எதிர்பார்க்கவேயில்லை. "டாரெட் எங்கிருக்கிறது?" என்றார் அதிகாரி. "என்ன?" என்ற ஒற்றைச் சொல்லைச் சற்று அழுத்தமாகவும் கோபத்துடனும் சொன்னான். 'என்ன முட்டாள் இவன்? விமான நிலையத்தில் பணிபுரியும் ஒருவனுக்கு, டாரெட் எங்கிருக்கிறது என்பதுகூடவா தெரியாமல்போகும்?' என்று நினைத்துக் கொண்டான்.

"ஏன், ஏதாவது பிரச்சினையா?" என்று கேட்டான். அவனது கோபத்தையும் முகத்திலிருக்கும் தெளிவையும் கண்டு அதிகாரி குழம்பிப் போனார். "சற்றுப் பொறுங்கள்..." என்று சொல்லி, யாருக்கோ தொலை பேசியில் பேசினார். அடுத்த கணம் அவர்களை நோக்கி இரண்டு காவ லதிகாரிகள் வந்தனர். இருவரும் சுங்க அதிகாரியிடம் சென்று, மெல்லிய குரலில் பேசினார்கள். அவனது கடவுச்சீட்டைக் காட்டிச் சுங்க அதிகாரி ஏதோ சொன்னார். பின்னர், அவனிடம் வந்த காவலதிகாரிகள், "எங்களுடன் வர முடியுமா?" என்று, அவனது பதிலை எதிர்பார்க்காமல் தோளில் கைவைத்து சிநேக பாவனையுடன் அழைத்துச் சென்றார்கள். அழை த்துச் சென்றதில் சிநேகம் என்பது பாவனையாகத்தான் இருந்ததே யொழிய, கைகளின் அழுத்தம் கடுமையைத் தெரிவித்தது. நடக்கக்கூடாத ஏதோவொரு விபரீதம் நடந்திருப்பதாக அவன் புரிந்துகொண்டான். கையில் வைத்திருந்த பிரீஃப் கேஸுடன் அவர்களுடன் சென்றான்.

காவலதிகாரிகள் தங்களின் உயரதிகாரியின் அறைக்குள் அவனை அழைத்துச் சென்றார்கள். அதற்குள் நடந்த அனைத்தையும் உயரதிகாரி அறிந்திருக்க வேண்டும். அறைக் குள் நுழையும்போதே, அவனது பெயரைச் சொல்லி, மிகவும் மரியாதையுடன் அழைத்து கைகுலுக்கி நாற்காலியில் அமரச் சொன்னார். மரியாதைக்குரிய ஒருவன் அவன் என அவர் புரிந்திருந்தார். அதனால், சிநேகத்துடனேயே கேள்விகளைக் கேட்டார். "எங்கிருந்து வருகிறீர் கள்?" "டாரெட்." அதே கேள்வி, அதே பதில். "டாரெட் எங்கிருக்கிறது?" இப்போது அவன் மிகவும் குழம்பிப்போனான். 'இவருக்குமா டாரெட்டைத் தெரியாது? இவரைப் பார்த்தால் பல ஆண்டுகள் பணி புரியும் அனுபவஸ்தராகத் தெரிகிறதே! டாரெட் எங்கிருக்கிறதென்று இவருக்கும் எப்படித் தெரியாமல் போகும்?' சிந்தித்ததால், பதில் சொல்லச் சற்றுத் தாமதமானது.

அதற்குள், அதே கேள்வியை மீண்டும் கேட்டார். "சொல்லுங்கள் மிஸ்டர்... டாரெட் எங்கிருக்கிறது?" "நிஜமாகவே டாரெட் எங்கிருக்கிறதென்று உங்களுக்குத் தெரியாதா?" "இல்லை. அதனால்தான் உங்களை விசாரிக்கிறோம். உங்கள் கடவுச்சீட்டுபோல இதுவரை நாங்கள் எதையும் கண்டதில்லை. அதில் குறிப்பிட்டிருக்கும் நாட்டையும் எங்களுக்குத் தெரியாது.

அதோ பாருங்கள்... (எதிர்ச் சுவரிலிருந்த உலக வரைபடத் தைக் காட்டி) அந்த வரைபடத்தில் இருக்கும் எல்லா நாடுகளுக்கும் நான் பயணம் செய்திருக்கிறேன். ஆனால், டாரெட் நாட்டை நான் இதுவரை கேள்விப்பட்டதில்லை" முகத்தை அதே கனிவுடன் வைத் துக்கொண்டுதான் பேசினார். அப்போதுதான் தனக்குப் பின்னால் சுவரிலிருந்த உலகப் படத்தைப் பார்த்தான்.

அவனது முகம் பிரகாசமானது. அதை அதிகாரியும் கவனித்துக் கொண்டார். உலக மப்பை நோக்கி அவன் சென்றான். அங்கே தன்னுடைய நாடிருக்கும் இடத்தை விரலால் சுட்டிக் காட்டினான். அவனும் அந்த நேரத்தில் அதிலிருப்பதையும் படித்தான். அவன் காட்டிய இடம், ஸ்பெயினுக்கும் பிரான்ஸுக்கும் இடையே 'அண்டோரா' (Andorra) எனும் பெயருடன் காணப்பட்டது.

மயக்கம் வராத குறையாகச் சோர்வுடன் நாற்காலியில் அமர்ந்து கொண்டான். 'இது என்ன, டாரெட்டை, 'அண்டோரா' என்று குறித்து வைத்திருக்கிறார்கள்? ஓ... ஓ... அதுதான் இவர்களுக்கு டாரெட் என்று சொன்னது புரியவில்லையா?' என்று நினைத்தான். தனது பிரீஃப்கேஸிலிருந்த, அடையாள அட்டை, சாரதி அனுமதி, வங்கிச் செக்குகள், ஜப்பானுக்குக் கொண்டுவந்த ஆவணங்கள் அனைத்தையும் வெளியே எடுத்து, அதிகாரியிடம் கொடுத்துப் பரிசோதிக்கும்படி சொன்னான்.

ஆரம்பத்திலிருந்தே அவன் பொய் சொல்பவனாக அந்த உயரதிகாரிக்குத் தோன்றவில்லை. அவனொரு மதிக்கப்படக்கூடிய பிரஜை என்பதைப் புரிந்திருந்தார்.

அவன் கொடுத்த ஆவணங்களை ஒவ்வொன்றாகப் பார்த்தார். அனைத்தும் பக்காவாக இருந்தன. அவன் துளியும் பொய் சொல்லவில்லை. வியாபாரத்தில் ஈடுபடும் மிகப்பெரிய தொழிலதிபர் அவன் என்பதை உறுதிசெய்துகொண்டார். இப்போது அவருக்கே சந்தேகம் ஏற்பட்டது. 'நிஜமாகவே டாரெட் இருக்கிறதோ... நாம் அதை அண்டோரா என்று தப்பாகச் சொல்கிறோமோ?' என்ற தலைகீழ்ச் சந்தேகம் உருவானது. அதையும் சரிபார்த்து விடலாம் எனத் தீர்மானித்தார். ஸ்பெயின் விமான நிலையத்துக்கு நேரடியாகத் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். அங்கிருந்த அவருக்கு இணையான உயரதிகாரியிடம் டாரெட் பற்றி விசாரித்தார். 'அப்படி எந்தவோர் இடமும் ஐரோப்பாவில் இல்லை' என்று பதில் வந்தது. "சாரி" என்று சொன்னபடி அவனைப் பரிதாபமாகப் பார்த்தார். 'இவன் யார்?', 'இவன் எங்கிருந்து வருகிறான்?', 'இந்த அளவுக்கு ஒருவனால் பொய் சொல்ல முடியுமா?',

(அடுத்த வாரம் தொடரும்...)

# சும்மா சொல்லக்கூடாது, பாவம்!




‘குழந்தை விடிய விடியப் படிக்கிறான்... சும்மா சொல்லக் கூடாது, பாவம்!” என்கிறாள் தாய்.
“நல்ல பசி போலிருக்கிறது. சும்மா சொல்லக்கூடாது பாவம், குழந்தை எட்டு இட்லி சாப்பிட்டான்!” என்கிறாள் பாட்டி.
குழந்தை எத்தனை இட்லிகளை விழுங்கினான் என்ற விபரத்தை இப்படி நைஸாக மற்றவர்களுக்குச் சொல்லிவிடும் பாட்டி, கூடவே அவன் பசியாக இருந்ததால்தான் அப்படிச் சாப்பிட் டான் என்பதையும் குறிப்பிடுகிறாள்.
“சும்மா சொல்லக்கூடாது பாவம், வர்ற மாசம் அவருக்கு ஆறு கச்சேரி! அது ஆனதும், கிளீவ்லாண்டில் மார்க்கண்டேய மஹோற்சவம். சும்மா சொல்லக்கூடாது, பாவம்... என்னையும் கூட்டிண்டு போறேன்னு சொல்லியிருக்கார்” என்று சங்கீத வித் வானின் பாரியாள் சொல்லும்போது, கேட்பவர் மனசில் பொறா மையே ஏற்படாது என்பது அவளின் நம்பிக்கை!
அயல்நாட்டில் தன் பிள்ளை சம்பாதித்துக் கொழிப்பதை பிறத் தியாரிடம் சொல்லவேண்டும். அதேநேரம், அவர்களின் வயிறு எரியாமல் நாசுக்காகவும் சொல்லவேண்டும். எப்படி? “எம் புள்ள ஆம்ஸ்டர்டாமில்தான் ஏழெட்டு வருஷமா இருக்கான். சும்மா சொல்லக்கூடாது பாவம், மாசம் ஐம்பதாயிரம் டாலர் சம்பளம் வாங்கறான். அங்கேயே ஆபீசில் ஒரு வெள்ளைக்காரியை... சும்மா சொல்லக்கூடாது பாவம், ரொம்ப நல்ல பொண்ணாம். அவனுக்கு செக்ரெட்டரியாம். போன வாரம் அவளைக் கல்யா ணம் பண்ணிண்டுட்டதாக போனில் தகவல் சொன்னான். சும்மா சொல்லக்கூடாது பாவம், அவளும் முப்பதாயிரம் டாலர் சம் பளம் வாங்கறாளாம்..!”
அந்தப் பெண்மணியிடம் ஒருமுறை, “எதுக்காக மாமி இப்படி நீங்க வாய்க்கு வாய் ‘சும்மா சொல்லக்கூடாது பாவம்’னு நீட்டி முழக்கிட்டிருக்கீங்க?” என்று பளிச்சென்று கேட்டுவிட்டாள் ஒரு துடுக்குப் பெண்.
அதற்கு அந்த அம்மாள், ‘நம்ம விஷயத்தில் பிறத்தியாருக்குப் பொறாமை ஏற்பட்டு, அந்தப் பொறாமை அவர்களுக்கே தீமையாக முடிந்துவிடக்கூடாதே என்கிற நல்ல எண்ணத்தினால் தான்!’ என்றாள்.
இதென்ன புதுக்கதை? பொறாமையால் பொறாமைப்படுகிறவர் களுக்கே தீங்கு நேருமா என்ன?
நேரும். பொறாமைக்காரனுக்குக் கேடு விளைவிக்க பேப்பரில் விளம்பரம் கொடுத்து ஆளைத் தேடவேண்டிய அவசியமில்லை அவனுக்குக் கேடு விளைவிக்க அவனே போதும்!
அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடீன்பது’ - என்று அழகாகச் சொன்னார் திருவள் ளுவர். பொறாமைப்படாதிருப்பது கஷ்டமான காரியம்தான் என்றாலும், பொறாமைப்படாதிருக்க ஒரு சுருக்கு வழி உண்டு. தேவையானதெல்லாம் ஒரு புதுக் கண்ணோட்டம்தான். தாயுமானவரின் இரண்டு வரிகளை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்...
‘எங்கெங்கு பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய் அங்கங்கு இருப்பது நீயன்றோ பராபரமே’ -
இங்கே இருக்கும் உயிர்தான் அங்கேயும் இருக்கிறது. அதற்கு ஒரு நல்லது கிடைத்தால், இதற்கும் கிடைத்தது போலத்தானே! பின்னே, பொறாமை எதற்கு?

# பெரியோரை வணங்குங்கள்

சிவனருளால் சிரஞ்சீவி வரம் பெற்ற மார்க்கண்டேயரின் சரித்திரத்தில் பலரும் அறியாத ஒரு இரகசியம் உண்டு என்பார்கள் ஆன்றோர்கள். மிருகண்ட மகரிஷி தன் மகனுக்கு உபநயனம் செய்துவைத்தார். பெரியவர்கள் யாரைக் கண்டாலும் காலில் விழுந்து ஆசி வாங்க வேண்டும் என்பதை மார்க்கண்டேயனுக்குச் சொல்லிக்கொடுத்தார். ஒருமுறை அவர்களின் ஆச்சிரமத்துக்கு சப்த ரிஷிகள் வந்தனர். மார்க்கண்டேயன் அவர்களைப் பணிந்து வணங்கினான். சப்த ரிஷிகளும், “தீர்க்காயுஸ்மான் பவ” என்று வாழ்த்தினார்கள். அதன்பிறகே அவர்களுக்கு மார்க்கண்டேயனின் ஆயுள் குறித்த செய்தி தெரிந்தது. ரிஷிகள் திகைத்தனர். ஒருவேளை, தங்களின் வாக்கு பொய்த்து விடுமோ என்று எண்ணியவர்கள், இதற்கு விடை தேடி அவனை அழைத்துக்கொண்டு பிரம்மலோகம் சென்றார்கள்.
அங்கு மார்க்கண்டேயன் பிரம்மனை வணங்க, அவரும் மரபுப்படி “தீர்க்காயுஸ்மான் பவ” என்றே வாழ்த்தினார். சப்த ரிஷிகளும் பிரம்மாவும் வாழ்த்திவிட்டபின் மார்க்கண் டேயனின் உயிரைக் காலன் பறிக்க முடியுமா? பெரியவர்களின் வாக்குப் பொய்த்துப் போக அந்த பரமேஸ்வரன் விடுவானா? ஆகவே, காலனைக் காலால் உதைத்து, மார்க்கண்டேயரைக் காத்தருளினார் இறைவன் என்கிறது புராணம்.
ஆகவே, இளையோர்கள் எப்போது வயதில் பெரியவர்களைப் பார்த்தாலும் அவர்களை வணங்குங்கள். அவர்களின் வாழ்த்து உங்களை வாழவைக்கும்.


# விதுர நீதியும் வேடனின் கதையும்!



மகாபாரதத்தின் ஒரு பகுதியாய் அமைவது விதுர நீதி. மனம் அமைதியின்றி தவித்த திருதராஷ் டிரனுக்கு விதுரர் சொன்ன நீதிமொழிகள், இந்த உலகின் ஒட்டுமொத்த மக் களுக்குமான பாடமாக அமைகிறது. துரியோ தனனுக்கு அறிவுரை தரும் விதமாக ஒரு கதையை விபரித்தார்.
“வேடன் ஒருவன் பறவைகளைப் பிடிப்பதற்காகத் தரையில் வலை விரித்திருந்தான். நீண்ட நேரத்துக்குப் பிறகு, இரண்டு பறவைகள் அந்த வலையில் அகப்பட்டுக் கொண்டன. முதலில் திகைத்த அந்தப் பறவைகள், பின்பு ஒன்றிணைந்து, வலையைப் பெயர்த்துக் கொண்டு வானில் பறந்தன. அதை எதிர்பார்க்காத வேடன், பறவைகளைப் பின்தொடர் ந்து ஓடினான்.
அதைப் பார்த்த முனிவர் ஒருவர், ‘வேடனே! உனது செய்கை எனக்கு ஆச்சரியமளிக் கிறது. பறவைகள் ஆகாயத்தில் பறக்கின்றன. நீயோ அவற்றைப் பிடிக்கத் தரையில் ஓடுகிறாய். இப்படியே சென்றால் உன்னால் அவற்றைப் பிடிக்க முடியுமா?’ எனக் கேட் டார்.
முனிவரே! இந்த இரண்டு பறவைகளும் எனது ஒரே வலையைத் தூக்கிக் கொண்டு செல்கின்றன. எங்கு பேதம் கொண்டு இவை சண்டை போடுகின்றனவோ, அங்கு என் கைகளில் இவை அகப்படும். அதற்காகத் தான் பின்தொடர்கிறேன்!’ என்றான் வேடன். அவன் நினைத்தபடியே அவை தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டு ஓரிடத்தில் கீழே விழுந்தன. வேடன் சுலபத்தில் அவற்றைப் பிடித்துக்கொண்டான்.”
இந்தக் கதையை துரியோதனனிடம் சொன்ன விதுரர், “துரியோதனா! நீயும் பாண்டவர் களும் சகோதரர்கள். நீங்கள் ஒற்றுமையாக இருக்கும் வரையில், நலம் விளையும். விரோதத்தால் சண்டை போட்டால், பறவைகளின் கதிதான் உங்களுக்கும் ஏற்படும். அழிந்துபோவீர்கள்!” என்றார்.
விதுரரின் நீதிகளில் சிலவற்றை அறிவோமா...
செல்வத்தை விரும்புபவன் ஆறு தோஷங்களை விலக்கவேண்டும். அவை: அதிக தூக் கம், சோம்பல், பயம், கோபம், முயற்சியின்மை, எந்தக் காரியத்தையும் தாமதமாகவே செய்தல்.
ருசியான பதார்த்தத்தைப் புசிப்பது, விடயங்களை ஆலோசிப்பது, பெரும் பயணம்... இந் த விடயங்களை தனியொருவராகச் செய்யக் கூடாது.
சத்தியமானது சமுத்திரத்திற்கு ஓடம் போல சுவர்க்கத்திற்குப் படியாக இருக்கிறது. பொறுமையானது பெரிய பலம். சக்தியற்றவர்களுக்கு பொறுமையானது குணமாகின் றது. சக்தி படைத்தவர்களுக்கோ அது அலங்காரம்.
தர்மம் ஒன்றே சிறந்ததான நன்மை பொறுமை ஒன்றே உத்தமமான சாந்தி. வித்தை ஒன்றே மேலான திருப்தி. அஹிம்சை ஒன்றே சுகத்தைக் கொடுக்கிறது.

# எரிமலை எப்படிப் பொறுக்கும்

## இத்தாலியைப் பயமுறுத்தும் மவுன்ட் எட்னா



சென்ற வருடம் இந்த நேரம் கொரோனா உச்சக் கட்டத்தை அடைந்து கொண்டிருந்தது. சீனாவில் ஆரம்பித்தாலும் ருத்ர தாண்டவம் ஆடியது என்னவோ முதலில் இத்தாலியில்தான். அந்த பயங்கரம் நிகழ்ந்து ஒரு வருடம் கூடப் பூர்த்தியாகாத நிலையில் மீண்டும் ஓர் இயற்கை அனர்த்தம் இத்தாலியர்களின் அன்றாட வாழ்க்கையை அப்படியே திருப்பிப் போட்டுள்ளது.

கடந்த வாரம் இத்தாலியின் சிசிலியன் கிராமங்களை புகையால் இருளாக்கியது மவுன்ட் எட்னா எரிமலையின் சீற்றம். கடந்த இரு வாரங்களில் மட்டும் மொத்தம் ஏழு தடவை வெடித்து, அதன் சரிவுகளில் இறங்கி, நெருப்பாறாய் பாய்ந்தது எட்னா. வான் நோக்கி எழுந்த சுவாலை அருகிலுள்ள எட்டு கிராமங்களை சாம்பலால் குளிப்பாட்டியது.

எரிமலையிலிருந்து வெடித்துச் சிதறிய கற்கள் வானத்திலிருந்து கொட்டும் மழைபோல வீடுகளின் மேல் விழுந்து சிதறின. சிசிலியின் நகரங்களின் ஒவ்வொரு தெருவும் கறுப்பு நிற மையால் தீட்டப்பட்டது போல சாம்பலால் மூடியது. பாரிய சத்தத்தோடு கொழுந்து விட்டெரிந்த எரிமலையின் சூடு, குளிர் கால இத்தாலியின் சிசிலி நகரை வெப்பத்தின் அணலுக்குள் தள்ளியது. ஆனால் அதிர்ஷ்டவசமாக யாருக்கும் உயிர்ச்சேதம் இதுவரை இல்லை. மூட்டை மூட்டைகளாய் கட்டப்பட்ட சாம்பல் நிறைந்த பைகள் சிசிலி வீதிகளின் ஓரங்களில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

இத்தாலிய தீவான சிசிலியில் உள்ள மவுன்ட் எட்னா, உலகின் மிகவும் சுறுசுறுப்பான **Active** எரிமலைகளில் ஒன்றாகும். கடந்த பெப்ரவரி 16 அன்று ஆரம்பித்த வெடிப்பு, பெப்ரவரி 18 அன்று மீண்டும் வெடித்தது. அதன் பின் பெப்ரவரி 20 முதல் 23 வரையான திகதிகளில் மீண்டும் உக்கிரமடைந்தது.

இத்தாலியின் இரவு வானத்தில் 0.7 கிலோ மீற்றருக்கு தீப்பிழம்பாய் உயர்ந்த தீச்சுவாலை கிட்டத்தட்ட 1.5 கி.மீ வரை உச்சம் தொட்டது. ஐரோப்பாவின் மிகவும் சுறுசுறுப்பான எரிமலை, செம் மஞ்சள், சிவப்பு எனும் தழலின் உக்கிர வர்ணங் களால் வானத்தை வண் ணமயமாக்கி, இயற்கையில் தீயின் வீரியத்தை மீண்டும் ஒருமுறை நிரூபித்துச் சென்றுள்ளது. பெப்ரவரி 16 முதல் ஆரம்பித்த இந்த எரிமலை சீற்றத்தின் மிகப்பெரிய வெடிப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2 மணியளவில் நிகழ்ந்ததாக இத்தாலியின் தேசிய புவி இயற் பியல் மற்றும் எரிமலை நிறுவன மான என்.ஜி.வி (**National geophysics and volcanology institute - INGV**) கூறுகிறது.

### ஐரோப்பாவின் எரிமலை தேசம்

இத்தாலியைப் பற்றி நாம் நினைக் கும் போது, முதலில் நினைவுக்கு வருவது அதன் பிரமிக்க வைக்கும் பண்டைய வரலாறு, அதிசயமான இயற்கை அழகு, சுவையான பீட்சா, சூடான பாஸ்தா, பழைமை வாய்ந்த ருசியான வைன்! இந்த லிஸ்ட்டில் முக்கியமாக இணையும் இன்னொரு ஹைலைட்தான், உலகின் மிக ஆபத்தான அக்டிவ் எரிமலைகள்! இதற்கு முக்கிய காரணம் இந்த நாடு பூகோள அமைப்பில் **Eurasian** தட்டுக்கும், ஆபிரிக்க தட்டுக்கும் இடையிலான எல்லையின் தெற்கே ஒரு குறுகிய தூரத்தில் இருப்பதாகும்.

இத்தாலியில் முக்கியமான நான்கு எரிமலைகள் இருந்த போதிலும் 2000 வருடங்கள் வரை பழைமையான வரலாற்றைக் கொண்டதும் 10, 900 அடி உயரமானதுமான மவுண்ட் எட்னா தான் இவை எல்லாவற்றுக்கும் முப்பாட்டன். மவுண்ட் எட்னாவின் கடைசி பெரிய வெடிப்பு 1928ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. அப்போது இத்தா லியின் மஸ்காலி நகரம் தீப்பிழம்பால் முற்றிலுமாக அழிக்கப்பட்டது.

### இந்த எரிமலைகள் உலகிற்கு அவசியமானவையா?

எரிமலைகள்தான் இந்தப் பூமியின் புவியியல் கட்டடக் கலைஞர்கள். அவை இந்த நிலத்தின் 80 சதவீதத்திற்கும் அதிகமான மேற்பரப்பை உருவாக்கி அதில் உயிர்கள் வாழ செழிப்பான அடித்தளத்தை அமைத்துத் தருகின்றன. அவற்றின் வெடிக்கும் சக்தியினால் மலைகள் மற்றும் பள்ளத் தாக்குகள் உருவாக்குகின்றன.

வறண்ட நிலப்பரப்புகளின் ஊடே பாயும் லாவா ஆறுகள் காலப்போக்கில் **'volcanic rocks'** ஆக உடைந்து அவற்றின் தாதுக்களை விடுவித்து, நாகரிகங்கள் செழிக்க தேவையான வளமான மண் வளத்தை வழங்குகின்றன.

உலகின் பனிக் கண்டமான அன்டார்டிகா உட்பட எல்லா கண்டங்களிலும் எரிமலைகள் உள்ளன. அதில் சுமார் 1,500 எரிமலைகள் இன்றும் அக்டிவ்வாக இருப்பதாக கருதப்படுகின்றது.

### எரிமலை வெடிப்பை முன் கூட்டியே கணிக்க முடியுமா?

எரிமலைகள் வெடிப்பதற்கு முன்பாக சில எச்சரிக்கைகளை முன்கூட்டியே அளிக்கின்றன. சிறிய பூகம்பங்கள், எரிமலையின் பக்கங்களில் வீக்கம், அதன் துவாரங்களிலிருந்து வாயுக்களின் வெளியேற்றம் அதிகரித்தல் ஆகியவை இவற்றில் சிலவாகும். ஆனால் இந்த அறிகுறிகள் தென்படுவது எதுவுமே வெடிப்பு உடனடியாக நிகழப் போகிறது என்று அர்த்தமல்ல. ஆயினும் அந்த எரிமலையின் நிலையை மதிப்பீடு செய்ய விஞ்ஞானிகளுக்கு இவை உதவக்கூடும். வரலாற்றை எடுத்துப்பார்க்கும் போது, முந்தைய காலகட்டங்களைப் போல தற்காலத்தில் எரிமலை சீற்றங்கள் அடிக்கடி நிகழ்வதில்லை. எவ்வாறாயினும், எந்த எரிமலை எப்போது எப்படி வெடிக்கும் என்பது இயற்கைக்கு மட்டுமே தெரிந்த ஒரு பரம இரகசியம்!

# ஓவர் நைட்டில் உலக பேமஸ்



'ஓவர் நைட்ல ஒபாமா லெவல் பேமஸ் ஆகப்போறேன்' என்று சொல்லி கலகலப்பூட்டுவார் நடிகர் வடிவேல்.

இங்கே ஒரு வீடியோவிலேயே உலகப் புகழ்பெற்று சாதனை படைத்திருக்கிறார் அமெரிக்காவைச் சேர்ந்த ஜஸ்டின் எசாரிக். யூடியூப் என்பது அவ்வளவாக பிரபலமாகாத காலகட்டத்தில், அதுவும் விளையாட்டாக ஒரு வீடியோவை அப்லோடு செய்ததற்கே பல மில்லியன் வியூஸ் குவிந்து விட்டன.

2007ஆம் ஆண்டு ஜஸ்டின் வாங்கிய ஐபோனில் **AT&T moblity** என்ற சேவையை அக்டிவேட் செய்திருக்கிறார். அப்பிள் நிறுவனத்தின் செல்போன், லப்டொப் போன்றவற்றில் டேட்டா டிரான்ஸ்பர், வெப் பிரௌசிங், டெக்ஸ்ட் மெசேஜ் என அனைத்துப் பயன்பாடுகளின் அடிப்படையில் மாதம்தோறும் பில் அனுப்பப்படும். முதல் மாத பில், ஜஸ்டினுக்கு அனுப்பப்பட்டது.

கவரைப் பிரித்துப் பார்த்தவருக்கு அதிர்ச்சி. ஒன்றல்ல இரண்டல்ல 300 பக்கங்கள் இருந்திருக்கின்றன. இந்த பில்லை வீடியோ எடுத்து '300 பக்க ஐபோன் பில்' என்ற தலைப்பில் யூடியூப் உள்ளிட்ட பிற வீடியோ ஷேரிங் தளங்களிலும் அப்லோடு செய்துவிட்டார். மொத்த வீடியோவும் வெறும் 1.06 நிமிடங்கள் மட்டுமே.

வீடியோ பப்ளிஷ் ஆன சில மணி நேரத்திலேயே வைரலாகத் தொடங்கி விட்டது. அதைப் பின்பற்றி பலரும் அப்பிள் நிறுவனத்தின் பில்லிங்கில் இருக்கும் பிரச்சினைகளைப் பற்றி பேசத் தொடங்கினார்கள்.

சில தினங்களில் 20 இலட்சம் வியூஸ் பெற்றதோடு சர்வதேச செய்திகளிலும் இடம் பிடித்தது. ஓரிரு மாதங்களில் 80 இலட்சம் பேர் இந்த வீடியோவைப் பார்த்திருந்தனர். இந்த ஒற்றை வீடியோவுக்கு "ரெவ்வர்" என்ற வீடியோ தளத்திலிருந்து மட்டும் ரூ.6 இலட்சம் ஜஸ்டினுக்குக் கிடைத்தது. யூடியூப் மூலம் கிடைத்த வருமானம் பல இலட்சங்கள்.

இந்த வரவேற்புக்குப் பிறகு **iJustine** சனலில் தொடர்ந்து வீடியோக்கள் பதிவிடத் தொடங்கினார். புதிதாக லோஞ்ச் செய்யப்படும் மொபைல்போன், டிவி, லப்டொப், பி.எம்.டபிள்யூ காரிலுள்ள வெர்ச்சுவல் அசிஸ்டன்ட் என அனைத்து விடயங்களையும் அலசி ஆராய்ந்துவிடுவார் வீடியோவில்.

"யூடியூபுடன் கேமிங் சனல், ஒரு பயண வீடியோக்களான சனல், ஐபோன் வீடியோ சனல் என ஐந்து சனல்களை நடத்துகிறேன். ஆரம்பத்தில் ஒரு வாரத்துக்கு 40 - 50 வீடியோக்களை வெளியிட்டேன். வீடியோக்கள் அனைத்தையும் யாருடைய உதவியும் இல்லாமல் நானே எடுத்து, எடிட் செய்து வெளியிடுவேன் என்றார்.

ஒற்றை சனலுக்கு மட்டும் உலகம் முழுவதும் 68.4 இலட்சம் சப்ஸ்கிரைபர்கள் என்பதை நீங்கள் நம்பித்தான் ஆக வேண்டும். ஏனென்றால் அதுதான் உண்மை.

# கடல் புறா

## அமைதியும், அபாயமும்




"எல்லோரும் உறங்கியிருக்க வேண்டும்" என்று சுட்டிக்காட்டினாள் அவள். "நீங்கள் மட்டும் ஏன் உறங்கவில்லை" என்ற கேள்வி அவள் பேச்சில் மறைந்து கிடந்தது.

அந்த மறைபொருளைப் புரிந்து கொள்ளாதவன் போல் பதில் கூறிய இளையபல்லவன் " ஆம் எல்லோரும் உறங்கி விட்டார்கள். இருவரைத் தவிர!" என்றான்.

"யார் அந்த இருவர்?" என்று வினவினாள் காஞ்சனா தேவி.

"நம்மைத் தப்புவிக்கும் பொறுப்பு வாய்ந்த இருவர்." யாரைச் சொல்கிறீர்கள்?" "அநபாயரையும் அமீரையும் தான் சொல்கிறேன்" "இருவரும் என்ன செய்கிறார்கள்." வெளியே சென்றுவிட்டார்கள்.

"இந்த இரவிலா!" "ஆம்." "எந்த இடத்துக்கு?" "என்னிடம் சொல்லவில்லை." "நீங்கள் கேட்கக்கூடாதா?" "கேட்கச் சந்தர்ப்பமில்லை." "ஏன் சந்தர்ப்பமில்லை?" "எல்லோரும் படுக்கச் சென்றோமல்லவா?" "ஆம்."

"அவர்களும் படுக்கச் செல்வதாகப் பாசாங்கு செய்தார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் அமீரும் அநபாயரும் என்னுடைய அறைக்கு எதிர் அறையிலிருந்து வெளியே வந்தார்கள். ஏதோ இரகசியமாகப் பேசிக் கொண்டார்கள். பிறகு அடிமேலடி வைத்துச் சத்தம் போடாமல் வாயிலை நோக்கி நடந்தார்கள். சில விநாடிகளில் வாயிற் கதவு திறந்து மூடும் சத்தம் கேட்டது" என்று விளக்கினான் இளையபல்லவன்.

இந்த மர்மத்தின் காரணம் விளங்காததால் காஞ்சனா தேவி மீண்டும் மௌனம் சாதித்தாள். பிறகு வாய்விட்டுத் தன் சந்தேகத்தைக் கேட்கவும் செய்தாள், "இளையபல்லவரே! நாம் அனைவரும் ஒரே நிலையில்தானே இருக்கிறோம்?" என்று.

"ஆம்" என்று ஒப்புக் கொண்டான் இளைய பல்லவன். "அநபாயருக்குக் கலிங்கத்தில் உள்ள ஆபத்து நமக்கும் உண்டு".

"உண்டு." "அப்படியிருக்க நம்மிடம் சொல்லிச் சென்றால் என்ன? எதற்காக இத்தனை மர்மமாகச் செல்ல வேண்டும்?"

"அதுதான் எனக்கும் புரியவில்லை. ஆனால் ஒன்று நிச்சயம்."

"எது?" "தகுந்த காரணமில்லாமல் அநபாயர் எந்தக் காரியத்தையும் செய்ய மாட்டார்."

"அது சரி. ஆனால் பாலூரில் அவருக்கு ஆபத்து காத்திருக்கிறதே?" "ஆம் தலைபோகும் ஆபத்து."

"அப்படியிருக்க உங்களைத் துணைகொண்டு செல்லலாமே."

"துணையைத்தான் அழைத்துச் சென்றிருக்கிறாரே."

"யார், அமீரா?"

"ஆம்."

"உங்களைவிட அமீர் பெரும் துணையா?"

"அப்படித்தான் அநபாயர் நினைக்க வேண்டும்" இதைச் சொன்ன இளையபல்லவன் குரலில் துயரம் ததும்பி நிற்பதைக் கவனித்தாள் கடாரத்தின் இளவரசி. அதன் காரணமும் அவளுக்குத் தெள்ளென விளங்கவே செய்தது.

பல போர்களிலே தோளுடன் தோளுராய்ந்து நின்ற அருமை நண்பனைவிட அரபுநாட்டு அமீரை ஏன் பெரிதாக நினைக்கிறார் அநபாயர் என்பதை நினைக்க நினைக்க அவளுக்கும் வேதனையாகவே இருந்தது. அந்த வேதனையும், வேதனையால் இளையபல்லவனிடம் ஏற்பட்ட கருணையும் அவள் கையிலொன்றை மீண்டும் நீட்டி, சற்று எட்டி உட்கார்ந்திருந்த அந்தப் பல்லவ இளவரசனின் கையைச் சிறைப்படுத்தச் செய்தன.

அப்படித்தன்னை நாடி வந்த பூங்கரத்தை வேதனையின் விளைவாகச் சற்று அழுத்தவே பிடித்தான் இளைய பல்லவன். அது வரை விலகியே உட்கார்ந்தாள். அவளுடைய அஞ்சன விழிகள் துயரம் தோய்ந்த அவன் முகத்தை ஏறெடுத்து நோக்கின. "உங்கள் உள்ளத்தின் வேதனை எனக்குப் புரிகிறது" என்று மெள்ள வார்த்தைகளை உதிர்க்கவும் செய்தாள் அவள்.

சோழர் படைத் தலைவனும் மகா வீரனுமான கருணாகர பல்லவனின் மனம் அந்தச் சமயத்தில் பெரிதும் வேதனையில் சிக்கிக் குழம்பிக் கிடந்ததால் அவன் பதிலேதும் சொல்லவில்லை. பெருமூச்சொன் று தான் பதிலாக வெளிவந்தது.

"வீணாக வருந்தாதீர்கள்" என்று சமாதானப்படுத்த முயன்றாள் காஞ்சனாதேவி.

துயரத்துடன் ஒலித்தன இளைய பல்லவன் சொற்கள்.

"வீண் வருத்தமல்ல தேவி" என்றான் அவன்.

"அநபாயர் அமீரைத் துணை கொண்டு செல்லக் காரணமிருக்கும்" என்றாள் காஞ்சனாதேவி.

"இத்தனை நாள் அவர் என் துணையைத் தவிர வேறு துணையை நாடியதில்லை" என்று சுட்டிக் காட்டினான் இளையபல்லவன்.

"சோழநாட்டில் அது சரி, இப்பொழுதுள்ள காலதேச வர்த்தமானங்கள் வேறல்லவா?"

வேறுதான். போகிற இடத்தை, அலுவலை என்னிடம் சொன்னால் என்ன?"

"நீங்கள் உறங்கிவிட்டதாக நினைத்திருக்கலாம்."

"எழுப்ப உரிமையில்லையா இளவரசருக்கு?"

"உண்டு, உண்டு" என்று கூறிய காஞ்சனாதேவி மேற்கொண்டு என்ன சொல்வதென்று அறியாமல் சில விநாடிகள் தத்தளித்தாள். பிறகு கேட்டாள், "ஆமாம் நீங்கள் எதற்கு வந்தீர்கள் இங்கு?" என்று

"அமைதியை நாடி வந்தேன்" என்றான் இளையபல்லவன்.

அவன் சொன்னது நன்றாகப் புரிந்தது அவளுக்கு. அவன் கைகளை இறுகப் பிடித்துக்கொண்டாள் அவள். அதில் ஓரளவு அமைதி ஏற்பட்டது இளையபல்லவனுக்கு.

ஆனால் அமைதியை நாடிய அவன் அதே சமயத்தில் அந்த நகரத்தின் வேறொரு கோடியில் பெரும் அபாயத்தை நாடி அநபாயன் சென்றுகொண்டிருந்ததை மட்டும் அறியவில்லை.

### எங்கே என் தந்தை?

ஆரம்பத்தில் சாளரத்தின் அடிக்கட்டையை மட்டும் தொட்டு நின்ற வெண்மதிக் கிரணங்கள் இரவு ஏறிவிட்டதால் உள்ளே என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க இஷ்டப்பட்டனபோல் அறை நடுவிலிருந்து பஞ்சணை மீதும் இலேசாகப் பாய்ந்துவிட்ட அந்த மனோகர வேளையில், கடாரத்துக் கட்டழகியின் பட்டுக் கைகள் தன் கைகளை ஆவலுடன் பற்றிய காரணத்தால் முதலிலிருந்த சஞ்சலம் சற்றே நீங்கி மனம் ஓரளவு அமைதியையும் பெற்று விட்டதன் விளைவாக மெள்ள நீண்டதொரு பெருமூச்சு விட்ட இளையபல்லவன் அந்த அமைதி எத்தனை நிலையற்றது என்பதைச் சில விநாடிகளுக்குள் புரிந்து கொண்டான்.

அறையின் சூழ்நிலையும் வெளியிலிருந்து காற்றில் மிதந்து வந்த இரவு பூத்த மலர்களின் நறு மணமும் அருகிலிருந்த பருவப் பெண்ணின் அருமை எழில்கள் அள்ளி வீசிய காந்தக் கதிர்களும், மெத்தென்ற பஞ்சசயனமும், அதை விட மெத்தென மேலே உராய்ந்த பக்குவ உடலும் ஆகிய அனைத்துமே, எத்தகைய சஞ்சலத்தையும் அறுத்து அமைதிக்கும் இன்ப உலகத்துக்கும் இழுத்துச் செல்லும் பெரும் சக்திகளென்றாலும், அத்தனை சக்திகளும் தன் மனத்துக்குப் போதிய சாந்தியை அளிக்கும் திறனைப் பெற முடியாததை நினைத்துப் பரிதாபப் பெருமூச்சு விட்ட இளையபல்லவன், காமத்தின் சக்தியை விட நட்பின் சக்தி எத்தனை வலிது என்பதை நினைத்து வியக்கவும் செய்தான்.

(தொடரும்...)

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : உலகம் சுற்றும் வாலிபன்
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர் : எஸ்.பி.பாலசுப்பிரமணியம்




அவள் ஒரு நவரச நாடகம்
ஆனந்த கவிதையின் ஆலயம்
அவள் ஒரு நவரச நாடகம்
ஆனந்த கவிதையின் ஆலயம்
தழுவிடும் இனங்களில் மான் இனம்
தமிழும் அவளும் ஓரினம்

அவள் ஒரு நவரச நாடகம்
ஆனந்த கவிதையின் ஆலயம்

மரகத மலர் விடும் பூங்கொடி
மழலை கூறும் பைங்கிளி
மரகத மலர் விடும் பூங்கொடி
மழலை கூறும் பைங்கிளி

நிலவில் ஒளிவிடும் மாணிக்கம்
நிலவில் ஒளிவிடும் மாணிக்கம்
என் நெஞ்சில் தந்தேன் ஓரிடம்
ஆஹா ஹா ஆஹா ஹா
ஆஹா ஹா ஆஹா ஹா

குறுநகை கோலத்தில் தாமரை
கோடைகாலத்து வான்மழை
குறுநகை கோலத்தில் தாமரை
கோடைகாலத்து வான்மழை

கார்த்திகை திங்களின் தீபங்கள்
கார்த்திகை திங்களின் தீபங்கள்
கண்ணில் தோன்றும் கோலங்கள்

அவள் ஒரு நவரச நாடகம்
ஆனந்த கவிதையின் ஆலயம்

அறுசுவை நிரம்பிய பாற்குடம்
ஆடும் நடையே நாட்டியம்
அறுசுவை நிரம்பிய பாற்குடம்
ஆடும் நடையே நாட்டியம்

ஊடல் அவளது வாடிக்கை
ஊடல் அவளது வாடிக்கை
என்னை தந்தேன் காணிக்கை
ஆஹா ஹா ஆஹா ஹா
ஆஹா ஹா ஆஹா ஹா

அவள் ஒரு நவரச நாடகம்
ஆனந்த கவிதையின் ஆலயம்
தழுவிடும் இனங்களில் மான் இனம்
தமிழும் அவளும் ஓரினம்
அவள் ஒரு நவரச நாடகம்...

# பொட்டு வைத்த ஒரு வட்ட நிலா

செவ்வாய்க்கிரகத்துக்கு அண்மையில் பெர்சிவீரன்ஸ் ரோவர் விண்கலம் வெற்றிகரமாகத் தரையிறங்கியதை உலகமே கொண்டாடியது. அதிலும் நாசா கட்டுப்பாட்டு அறையிலிருந்து அனைத்தையும் வழிநடத்திய விஞ்ஞானி டாக்டர் ஸ்வாதி மோகன் என்ற இந்திய வம்சாவளிப்பெண் என்பதையும் குறிப்பாக அவர் நெற்றியில் வைத்திருந்த பொட்டையும் குறிப்பிட்டு, "பொட்டு வைத்த ஒரு வட்ட நிலா" என்றும் சமூக வலைத்தளங்களில் இந்தியர்கள் கொண்டாடி விட்டனர்.

**ஏன் இந்தியர்களுக்கு பொட்டு வைப்பதன் மேல் இவ்வளவு காதல்?**

மங்கலச் சின்னங்களில் ஒன்றான பொட்டு வைத்தல் அல்லது திலகமிடுதல், ஏறத்தாழ 5,000 ஆண்டுகளுக்கு முன்பே



தொடங்கியிருக்கிறது என்றாலும் எப்போது எவ்வாறு தொடங்கியது. இதன் பயன்பாடு என்பதற்கு சுவைமிக்க புராணங்களும் சிந்திக்கச் செய்யும் வரலாறும் உள்ளன.

அப்போது பெண்களில் பார்வதி தேவிக்கும் நெற்றியில் ஒரு கண் இருந்ததாகவும் தன்னைப் போலவே மூன்று கண்களையுடைய சிவபெருமானை திருமணம் செய்ய விரும்பிய பார்வதி அதற்காகத் தன் கண்ணையே அர்ப்பணம் செய்திட, பார்வதி இழந்த மூன்றாவது கண்ணின் ஞாபகமாகத் திருமணத்தின்போது சிவபெருமான் அவருக்கு திலகமிட்டதுதான் குங்குமத்தின் ஆரம்ப கதை என்றும் கூறுகின்றன சைவப் புராணங்கள்.

அதேசமயம், சீதையை மணமுடித்தபோது தனது விரல் இரத்தத்தை நெற்றிப்பொட்டாக இட்ட இராமபிரானின் மீது தனது அன்பைக் காட்ட, சீதை தனது நெற்றியில் எப்போதும் செந்தூரம் இடுவதைக்கண்ட அனுமன், தானும் இராமனை எப்போதும் மறந்துவிடக் கூடாதென்று தனது உடல் முழுவதும் செந்தூரத்தைப் பூசிக் கொண்டதைக் கூறுகின்றன வைணவப் புராணங்கள்.

ஒருபுறம் குங்குமம் இப்படிக் காதலையும் பக்தியையும் சொல்கிறது என்றால் மறுபுறம் மகாபாரதத்தில் சூதாட்டத்தில் தோற்ற பாண்டவர்களின் மனைவி திரௌபதி கோபத்துடன், வேதனையுடன் "இனி என் அவமானம் தீரும் வரை அணிய மாட்டேன்" என்று தனது நெற்றிப் பொட்டை அழித்தது, இது பெண்களின் கௌரவம் என்றும் அதைக் காப்பது ஆண்களின் பொறுப்பு என்றும் அன்று இருந்ததை அறிந்து கொள்ளவும் முடிகிறது.

வடமொழியில் பிந்தி என்றால் சிறு துளி/துகள் என்று பொருளாம். ரிக் வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'பிந்தஸ்' எனும் சிறுதுகள், இந்தப் பிரபஞ்சம் உருவானதையும் அதன் புனிதத் தன்மையையும் நமக்கு உணர்த்துகிறது.

புனிதத்தை மட்டுமல்ல... இந்தக் குங்குமப் பொட்டு மகாலட்சுமியின் அம்சத்தைக் குறிக்கிறதென்றும் அது பெண்களின் வசீகரத்தை அதிகரிப்பதுடன் வளத்தையும் அதிகரிக்கும் என்றும் நம்பப்படுவதால்தான், மணப்பெண்ணின் நெற்றி வகிட்டில் முதன்முதலில் குங்குமம் இடுவதை, "சிந்தூர் தானா" என்று கொண்டாடும் வட இந்தியர்கள், கணவனுடன் புதுவாழ்வைத் தொடங்கும் மணப்பெண்ணுக்கு இந்தச் செந்தூரம் பொலிவு, ஆற்றல் மற்றும் அதிர்ஷ்டத்தை அளிக்கவல்லது என்று நம்புகின்றனர்.

**பெண்கள் மட்டுமல்ல...**

ஆண்களும் சுப நிகழ்ச்சிகளின் போதும் வெற்றிவாகை சூடிய பின்பும் சிவப்புநிற திலகத்தை அணிவது நாடெங்கிலும் நமது வழக்கிலுள்ளது. இலங்கை மட்டுமன்றி, இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், மலேசியா, வியட்நாம் எனத் தென்கிழக்கு ஆசியாவில் வசிக்கும் இந்துக்களும் ஜைன மற்றும் பௌத்த மதத்தினரும் புருவங்களுக்கு இடையே சிவப்பு நிற நெற்றிப்பொட்டை இட்டுக் கொள்வதையும் காண முடிகிறது.

சிந்துசமவெளி நாகரிக காலத்திலேயே இந்த வழக்கம் இருந்ததன் அடையாளமாக அங்கே கண்டறியப்பட்ட களிமண் பெண் உருவங்களின் நெற்றியிலும் முன்வகிட்டிலும் பொட்டு காணப்பட்டது என்று தொல்பொருள் ஆய்வாளர்கள் கூறும்போதே, நம்பிக்கை ரீதியாக குங்குமம் வசியத்துக்கு எதிரானது என்று ஆரம்பித்து பல்வேறு விளக்கங்களை அளிக்கின்றனர் ஆன்மிக நம்பிக்கையாளர்கள்.

யோக முறைகளின்படி, நெற்றியில் குங்குமம் வைக்குமிடம் சிந்திக்கும் திறன் மற்றும் நினைவாற்றலுக்குரிய "ஆக்ஞா சக்கரம்" என்ற ஞானக்கண் என்று வழங்கப்படுகிறது என்றும் இரு புருவங்களுக்கு மத்தியில் இருக்கும் இந்த இடத்தில் சந்தனம் அல்லது குங்குமத்தை இடும்போது முகம் வெளிப்புறமாக பிரகாசமடைவதுடன், ஞானம், அமைதி, தெளிவு ஆகியன தூண்டப்பட்டு தியான நிலையை உள்ளே அடைய உதவுகிறது என்றும் நம்பப்படுகிறது.

உண்மையில் திருமணமான நிலையையும் சுமங்கலி அந்தஸ்தையும் சொல்லும் இந்தக் குங்குமத்துக்கு அறிவியல் நன்மைகள் உள்ளனவா? என்றால் மஞ்சள், சந்தனம், நல்லெண்ணெய் போன்ற இயற்கை பொருட்களை உள்ளடக்கிய குங்குமம் சிறந்ததொரு கிருமிநாசினியாக விளங்குவதுடன் சருமத்துக்கு குளிர்ச்சியையும் பாதுகாப்பையும் தந்து மன நிறைவையும் மகிழ்ச்சியையும் அதிகரிக்கிறது என்றும் கூறுகிறது அறிவியல். கூடவே எதிர்மறை எண்ணங்களை அகற்றி, மன வலிமையை குங்குமம் அதிகரிக்கச்செய்கிறது என்றும் கூறுகிறது.

அதிலும், இன்று கடைகளில் வண்ணமயமாக விற்கப்படும் பெரும்பாலான செயற்கைப் பொடிகளில் உள்ள துத்தநாகம், ஈயம், மெர்க்குரி சல்ஃபைட் அல்லது ரோடமைன் போன்ற இரசாயனங்கள் உண்மையில் சரும அழற்சி, அரிப்பு, பொடுகு, முடியுதிர்தல் போன்ற பக்க விளைவுகளை ஏற்படுத்துவதுடன், இவற்றின் நீண்டகால பயன்பாடு நுரையீரல், சிறுநீரக, நரம்பியல் என இன்னும் அதிக பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடுமென்பதால் பயன்படுத்தும் முன், குங்குமத்தில் உள்ள உட்பொருள்களை சரிபார்க்கவும் அறிவியல் வலியுறுத்துகிறது.

எது எப்படியென்றாலும் தெய்வீகத் தன்மை மற்றும் மருத்துவ நன்மைகள் நிறைந்த இந்தக் குங்குமத்தை வைத்துக்கொள்வது அவரவர் நம்பிக்கையைப் பொறுத்ததுதான்... அது நாசா விஞ்ஞானி டாக்டர் ஸ்வாதிமோகனே ஆனாலும்..!

# தேன் விமர்சனம்

சினிமாவில் கதைக்களம் என்பது ஒரு படத்திற்கு அச்சாணி போல. சொல்ல வரும் கதையை சமயங் களில் அந்த கதைக்களம் சரியாக அமைந்தால் அதுவே படத்திற்கான பாதி வெற்றியைக் கொடுத்துவிடும்.

தமிழ் சினிமாவில் மலைக்கிராம மக்களின் வாழ்வியல், அவர்களது பிரச்சினைகளை, துயரங்களை அவ்வப்போது சில படங்களில் சொல்லி விட்டுச் சென்றிருக்கிறார்கள் சில இயக்குனர்கள்.

கும்கி, மேற்குத் தொடர்ச்சி மலை போன்ற சில படங்கள் அழுத்தமான தடத்தையும் பதித்துவிட்டுச் சென்றிருக்கின்றன. அந்த வரிசையில் இந்த தேன் படமும் ஒரு மலைக் கிராம படமாக வந்திருக்கிறது.

மேற்குத் தொடர்ச்சி மலையின் சிறு கிராமம் ஒன்றில் தேன் எடுப்பதைத் தொழிலாக வைத்திருப்பவர் தருண் குமார். பக்கத்து கிராமத்தில் உள்ள நாயகி அபர்ணதியின் அப்பா உடல் நலனுக்காக தேன் எடுத்து வந்து தருகிறார். அந்தப் பழக்கத்தில் அபர்ணதியும், தருணும் காதலர் களாகிறார்கள். ஊர் வழக்கப்படி வாழை மட்டையை சரி பாதியாகக் கிழித்தால் இருவரும் திருமணம் செய்து கொள்ளலாம். ஆனால், மட்டை அப்படிக் கிழியவில்லை. அதனால், ஊர்க்காரர்கள் திரு மணத்திற்கு சம்மதம் சொல்ல வில்லை. இருந்தாலும் அதையும் மீறி தருணும், அபர்ணதியும் திரு மணம் செய்து கொள்கிறார்கள். அவர்களுக்கு மகளும் பிறக்கிறாள். பின்னர் கடும் வயிற்றுவலியால் அவதிப்படுகிறார் அபர்ணதி. மனை விக்கு சிகிச்சை அளிக்க மலைக் கிராமத்தை விட்டு கீழே ஊருக்கு வருகிறார் தருண். ஆனால், அதி கார வர்க்கம் அவரை அலைக் கழிக்கிறது. மனைவிக்கு சிகிச்சை அளித்தாரா, அபர்ணதி நலமடைந்தாரா இல்லையா என்பது தான் படத்தின் மீதிக் கதை. பேரழகுடன் இருக்கும் மலைக் கிராமத்தில் அந்த மண்ணின் மைந்தர்களாய் வாழும் மக்கள் சில பல பிரச்சினைகளைத் தாங்கிக் கொண்டுதான் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கான உண்மையான நலத்திட்டங்களைக் கொடுக்காமல் தனியார் நிறுவனங்களுக் காக செயல்படும் அதிகார ஆட்களை படத்தின் ஆரம்பத்தில் தட்டிக் கேட்கிறது படம். அதன் பின் காதல் கதையாகக் கொஞ்சம் நகர்ந்து மீண்டும் ஒரு அப்பாவி மனிதன் அவனுக்காக நலத்திட்டங்களைப் பெற எப்படி அலைகிறான் என



மீண்டும் இந்த சமூகத்தில் சாமானியனுக்கு உள்ள வலிகளைச் சொல்கிறது படம். இயக்குனர் கணேஷ் விநாயகன் ஒரு அப்பாவி மனி தனின் வாழ்க்கையில் உள்ள சில பல பிரச்சினைகளை யதார்த்தமான பதிவாக இந்தப் படத்தில் கொடுத்திருக்கிறார். சில படங்களில் வில்லனாக நடித்த தருண்குமார் இப்படத்தில் கதாநாயகனாக உயர்வு பெற்றுள்ளார். அப்பாவி மலைக் கிராமத்து மனித ராக இயல்பாகப் பொருந்திப் போகிறார். இடை வேளைக்குப் பின்தான் அவருக்கு நடிக்க நல்ல வாய்ப்பு. மனைவியை எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டும் என்று அவர் அனைத்து கஷ்டங்களையும் தாங்கிக் கொண்டு அலையும் போது நம் அனுதாபத்தை அள்ளிக் கொள்கிறார்.

காதலியாக இருக்கும் போதும் சரி, மனைவியாக மாறும் போதும் சரி, அம்மாவான பின்பும் சரி அபர்ணதி அந்தந்த காலகட்டத்திற்கத் தேவையான பொருத்தமான நடிப்பை வழங்கியிருக்கிறார். இந்தக் காலத்து இளம் நாயகியர் இப்படியான கதாபாத்திரங்களில் நடிப்பது ஆச்சரியம்தான். கதையும், கதையில் தன் கதாபாத்திரத்திற்கு இருக்கும் முக்கியத்துவத்தையும் உணர்ந்து நடித்திருக்கிறார்.

மற்ற கதாபாத்திரங்களில் சூப்பர் குட் லட்சுமண் முக்கியத்துவம் பெறுகிறார். எங்கிருந்தோ வந்த தருண் குமாருக்குத் தேவையான ஆவணங்களைப் பெற்றுத்தர உதவியாக இருந்து மனதில் இடம் பிடிக்கிறார். மக்களுக்கு சேவை செய்வதாகச் சொல்லி அவர்களை ஏமாற்றி பணம் சம்பாதிக்கும் இடைத்தரகராக அருள் தாஸ், நாயகி அபர்ணதி யின் அப்பாவாக தேவராஜ் அவரவர் கதாபாத்திரத்தில் இயல்பாய் நடித்திருக்கிறார்கள். வாய் பேச முடியாத தருண், அபர்ணதியின் குழந்தையும் சில காட்சிகளில் அழ வைத்துவிடுகிறார். மலைக்கிராமங்களின் அழகை தன் காமிராவுக்குள் அப்படியே பதித்திருக்கிறார் சுகுமார். குரங்கணி தீ விபத்து நடந்த பகுதிகளில்தான் இப்படத்தின் படப்பிடிப்பு நடந்தது என்கிறார்கள். பேரழகிலும் இயற்கையின் ஆபத்து எப்படியெல்லாம் வருகிறது என்பதை நினைக்கும் போது பதை பதைப்பு வருகிறது. சனத் பரத் வாஜின் பின்னணி இசை உணர்வு பூர்வமான காட்சி களில் கூடுதல் பலத்தைக் கொடுக்கிறது. மலையை விட்டு கதை கீழே வந்ததும் கொஞ்சம் தடுமாற ஆரம்பிக்கிறது. அடையாள அட்டைகளை வாங்க கதாநாயகன் அலைவதையும், ஒவ்வொரு அட்டையை வாங்க எவ்வளவு சிரமப்படுகிறார் என் பதைக் காட்டுவதிலும் கொஞ்சம் டாகுமென்டரி உணர்வு வந்து விடுகிறது. ஆனாலும், முடிவில் நாட்டில் நடந்த சில உண்மைச் சம்பவங்களை வைத்து கிளை மாக்ஸ் காட்சியை அமைத்திருப்பது கண்ணீர் வரவழைத்துவிடும்.




## ரியோவின் ஏப்ரல் மாத பிளான்

பிக்பாஸ் நிகழ்ச்சி மூலம் பலருடைய கவனத்தை ஈர்த்த நடிகர் ரியோவின் ஏப்ரல் மாத பிளான் பற்றி தற்போது வெளியாகியுள்ளது. பிக்பாஸ் நிகழ்ச்சி மூலம் மிகவும் பிரபலமானவர் நடிகர் ரியோ. இவர் நடிப்பில் தற்போது பிளான் பண்ணி பண்ணனும் என்ற திரைப்படம் உருவாகியுள்ளது. இப்படத்தை பாணா காத்தாடி புகழ் பத்ரி வெங்கடேஷ் இயக்கி உள்ளார். இதில் ரியோவிற்கு ஜோடியாக ரம்யா நம்பீசன் நடித்துள்ளார். மேலும் பால சரவணன், தங்கதுரை ஆகியோர் காமெடி வேடங்களில் நடித்துள்ளனர். யுவன் சங்கர் ராஜா இசையமைத்திருக்கும் இப்படம் நகைச்சுவை பொழுதுபோக்கு கதையம்சத்தில் உருவாக்கப்பட்டுளளது. இதன் டீசர், பாடல்கள் ஏற்கனவே வரவேற்பு பெற்ற நிலையில், இப்படத்தை ஏப்ரல் மாதம் வெளியிட இருப்பதாக படக்குழுவினர் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர்.

## அந்நியன் படத்தை ரீமெக் செய்யும் சாங்கர்




இந்தியத் திரையுலகில் முன்னணி இயக்குனராக வலம் வரும் ஷங்கர், அடுத்ததாக நடிகர் ராம்சரணை வைத்து படம் இயக்க தயாராகி வருகிறார். ஷங்கர் இயக்கத்தில் வெளியான அனைத்துப் படங்களுக் குமே ரசிகர்களிடம் நல்ல வரவேற்பு கிடைத்திருக்கிறது. மேலும் பாக்ஸ் ஆபிஸிலும் இடம் பிடித்



துள்ளது. இதனால், இந்தியத் திரையுலகில் முன்னணி இயக்குனராக வலம் வருகிறார் ஷங்கர்.

கமலின் இந்தியன் 2 படத்தை இயக்கி வந்த ஷங்கர், கொரோனா அச்சுறுத்தல் மற்றும் கமலின் தேர்தல் பணிகாரணமாக அப்படத்தை கிடப்பில் போட்டுள்ளார். இதையடுத்து பிரபல தெலுங்கு நடிகர் ராம்சரணை வைத்து படம் இயக்க தயாராகி வருகிறார். இதனிடையே நடிகர் ரன்வீர் சிங்கும் இயக்குனர் ஷங்கரிடம் கதை கேட்டதாக கூறப்பட்டது. இந்நிலையில்,அதுகுறித்த புதிய தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி, இயக்குனர் ஷங்கர், ரன்வீர் சிங்கை வைத்து 'அந்நியன்' படத்தை இந்தியில் ரீமேக் செய்ய உள்ளதாக கூறப்படுகிறது. ஷங்கர் இயக்கத்தில் விக்ரம் நடித்திருந்த 'அந்நியன்' திரைப்படம் கடந்த 2005ஆம் ஆண்டு வெளியாகி பிளாக்பஸ்டர் ஹிட்டானது குறிப்பிடத்தக்கது.

# சிக்ஸாசுரன் எனும் சம்பவக்காரன்!

## யூசுஃப் பதான்

“ அனைத்துவிதமான கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறப்போவதாக பிரபல கிரிக்கெட் வீரர் யூசுஃப் பதான் அறிவித்துள்ளார். யூசுஃப் பதான் நீண்ட காலம் இந்திய அணிக்காக ஆடியிருக்காவிட்டாலும் ஆடிய கொஞ்ச காலத்தில் ராக்கி போயாக சில முரட்டுத்தனமான சம்பவங்களை நிகழ்த்தியிருக்கிறார். யூசுஃபின் அதிரடி ஆட்டத்திற்காகவே தனி ரசிகர் பட்டாளமும் உண்டு. ”

யூசுஃப் பதானின் இளைய சகோதரரான இர்ஃபான் பதான் இந்திய அணிக்கு அறிமுகமாகி சில ஆண்டுகள் கழித்துதான் யூசுஃப் இந்திய அணிக்கு அறிமுகமாகிறார். இந்திய அணி 2007 ஒடிஐ உலகக்கோப்பையில் மோசமாக தோற்றபிறகு, கப்டன் பதவி இளம் வீரரான டோனிக்கு கொடுக்கப்படுகிறது. அந்த ஆண்டே தென்னாபிரிக்காவில் நடைபெற்ற முதல் இருபது-20 உலகக்கோப்பை தொடருக்கு டோனி தலைமையில் இளம் வீரர்களை உள்ளடக்கிய அணி தேர்வு செய்யப்பட்டு அனுப்பப்பட்டது. அந்த அணியில்தான் உள்ளூர் போட்டிகளில் சிறப்பாக ஓல்ரவுண்டராக ஜொலித்து வந்த யூசுஃப் பதானுக்கும் இடம் கிடைத்தது.

அணியில் இருந்தாலும் எந்தப் போட்டியிலும் யூசுஃபுக்கு ப்ளேயிங் லெவனில் இடம் கிடைத்திருக்காது. பாகிஸ்தானுக்கு எதிரான இறுதிப் போட்டிக்கு முன்பாக ஓப்பனரான சேவாக் காயமடைந்து விட அவருக்குப் பதில் அந்த இடத்தில் சேவாக்கை போலவே அதிரடியாக ஆடக்கூடிய ஒரு வீரர் தேவைப்பட்டார். அப்போது தான் டோனி யூசுஃப் பதானின் பெயரை டிக் அடித்தார்.


உலகக்கோப்பை தொடரின் இறுதிப்போட்டியில் அதுவும் பாகிஸ்தானுக்கு எதிராக அதிக அழுத்தமிக்க ஆட்டத்தில் ஓப்பனராக இந்திய அணிக்கு அறிமுகமானார் யூசுஃப் பதான். அந்தப் போட்டியில் பெரிய இன்னிங்ஸ் எதுவும் ஆடவில்லை. 8 பந்துகளில் 15 ரன்கள் மட்டுமே எடுத்திருப்பார்.

ஆன்ால், இன்னிங்ஸின் முதல் ஓவரிலேயே முகம்மது ஆசிஃப் வீசிய ஒரு பந்தை அவரின் தலைக்கு மேலேயே சிக்ஸராக்கியிருப்பார். எதற்கும் அஞ்சாமல் துணிச்சலாக நினைத்த நேரத்தில் இப்படி சிக்ஸர் அடிக்கும் திறன் தான் யூசுஃபின் அடையாளமாக மாறிப்போனது.

இந்த உலகக்கோப்பைக்கு பிறகு ஒருநாள் அணியில் அறிமுகமானார். ஆனால், அங்கே பெரிய இன்னிங்ஸ்களை அவரால் ஆடமுடியவில்லை. அவரின் சீரற்ற பெர்ஃபார்மென்ஸ்ும் பின்னடைவாக இருந்தது. இலங்கைக்கு எதிராக ஒரு இருபது-20 போட்டியில் பதான் சகோதரர்கள் இருவரும் இணைந்து ஒரு மேட்ச் வின்னிங் இன்னிங்ஸ் ஆடியிருப்பார்கள்.

இதே மாதிரியான ஒரு சில இன்னிங்ஸ்கள் அவரை இந்திய அணியில் தொடர்ந்து உள்ளே வெளியே வாக இருக்க செய்தது. யூசுஃப் பதானை பற்றி பேசும் போது ஐ.பி.எல்-ஐ தவிர்த்து விட முடியாது. தொடர்ந்து இந்திய தேர்வுக்குழுவின் ரேடாரில் யூசுஃப் பதான் இருந்ததற்கு அவரின் ஐ.பி.எல். பெர்ஃபார் மென்ஸ்கள் மிக முக்கிய காரணமாக அமைந்தன.

2008 ஐ.பி.எல்.இன் முதல் சீசனில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி கோப்பையை வென்றபோது அந்த அணியின் கீ ப்ளேயராக இருந்தார். 4 அரை சதங்களுடன் அந்த சீசனில் 435 ரன்களையும் 8 விக்கெட்டுகளையும் வீழ்த்தி அசத்தியிருந்தார். க்ரீஸ்க்குள் நின்றபடி நின்ற இடத்தில் இருந்தே இவர் அடிக்கும் இமாலய சிக்ஸர்களுக்கே தனி ரசிகர் கூட்டம் உருவானது.




இப்போது கெயிலை பற்றி பேசுவதை போல அப்போது முதல் மூன்று சீசன்களில் யூசுஃப் பதானை பற்றி பேசுவார்கள். எல்லா அணியும் அவரைக் கண்டு கொஞ்சம் மிரண்டே போயிருக்கும்.

பத்திரிகையாளர் சந்திப்பில் டோனியிடமே “யூசுஃபை சமாளிப்பதற்கு என்ன வியூகம் வைத்துள்ளீர்கள்?” எனக் கேள்வியெல்லாம் கேட்கப்பட்டிருக்கிறது. செய்தித்தாள்களில் இவரை சிக்ஸாசுரன் என வர்ணித்து செய்திகளெல்லாம் வெளிவரும். இப்படி உச்சக் கட்டத்தில் இருக்கும்போதுதான் 2010 ஆம் ஆண்டு மும்பை இந்தியன்ஸ்க்கு எதிராக 37 பந்துகளில் சதமடித்து மிரட்டியிருப்பார்.

இதன்மூலம் இந்திய அணிக்கு மீண்டும் அழைக்கப்பட்டிருப்பார். நியூஸிலாந்துக்கு எதிரான தொடரில் ஒரு ஓடிஐ போட்டியில் டாப் ஆர்டர் மொத்தமாக சொதப்பிய நிலையில் 6 ஆவது விக்கெட்டுக்கு சவுரப் திவா ரியுடன் கூட்டணி போட்டு சதமடித்து **300+** ஸ்கோரை வெற்றிகரமாக சேஸ் செய்ய வைத்திருப்பார். இந்த பெர்ஃபார்மென்ஸ்கள் எல்லாம் யூசுஃப் பதான் 2011 உலகக்கோப்பை தொடருக்கு தேர்வு செய்யப்பட காரணமாக அமைந்தது.

ஒரு பிக் ஹிட்டராக... ஓல்ரவுண்டராக டோனியே இவர் மீது பெரிய மதிப்பு வைத்திருந்தார். சில சமயங்களில் தன்னுடைய பட்டிங் ஆர்டரில் யூசுஃப் பதானை கூட இறங்க வைத்து ஃபினிஷ் செய்ய வைத்துள்ளார். 2011 உலகக்கோப்பையில் பங்களாதேஸ்க்கு எதிரான ஆட்டம் இதற்கு ஒரு சிறந்த உதாரணம்.

2007, 2011 இரண்டு உலகக்கோப்பைகளை வென்ற இந்திய அணியில் இடம்பெற்றிருந்தாலும் தென்னாபிரிக்காவுக்கு எதிராக தென்னாபிரிக்காவிலேயே ஓடிஐ போட்டியில் யூசுஃப் அடித்த சதம்தான் இன்று வரை அவரின் பெஸ்ட் எனக் கூறலாம். 268 டார்கெட்டை சேஸ் செய்த இந்திய அணி 60 ரன்னுக்குள் 5 விக்கெட்டுகளை இழந்து பரிதாபமாக தோற்கும் நிலையில் இருந்த போது டெய்ல் எண்டர்களோடு கூட்டணி போட்டு தென்னாபிரிக்காவின் பௌலிங் அட்டாக்கை துவம்சம் செய்து சதம் அடித்து மிரட்டியிருப்பார். சாகீர் கானுடன் ஒரு 100 ரன் பார்ட்னர்ஷிப் வேறு! வெற்றியை நெருங்கிய நிலையில் அவுட் ஆக இந்திய அணி தோற்றிருக்கும்.

50 ஓடிஐக்களில் ஆடியிருக்கும் யூசுஃப் பதான் ஆஃப் ஸ்பின்னராக 33 விக்கெட்டுகளையும் வீழ்த்தியிருக்கிறார். எக்கொனமி 5.50 மட்டுமே. இப்படி ஒரு திறமையான ஆட்டத்தையே மாற்றக்கூடிய ஓல்ரவுண்டராக இருந்த போதிலும் அவருக்குத் தொடர்ந்து இந்திய அணியில் இடம் கிடைக்கவில்லை.

காரணம், அவரின் சீரற்றத் தன்மை. அடித்தால் வெறித்தனமான சதம்... இல்லையேல் டக் அவுட் என இருந்த அவரின் சீரற்ற பெர்ஃபார்மென்ஸ்கள்தான் அவருக்கான இடத்தை கேள்விக்குள்ளாக்கியது. 2011 உலகக்கோப்பைக்கு பிறகு டோனி அடுத்தகட்ட அணியை கட்டமைப்பதில் கவனம் செலுத்தத் தொடங்கி விட்டதால் யூசுஃப் இற்கு 2012 இற்குப் பிறகு இந்திய அணியில் இடம் கிடைக்கவே இல்லை.

கொல்கத்தா அணி 2012, 2014 இல் கோப்பையை வென்ற போது அந்த அணியிலும் முக்கிய வீரராக இருந்தார். ஆனால், அதன் பிறகு ஐ.பி.எல்.இலும் பழைய சிக்ஸாசுரனான யூசுஃப்பை பார்க்கவே முடியவில்லை. தொடர்ந்து சொதப்பிக் கொண்டே இருந்தார்.

சன்ரைசர்ஸ் அணியில் மிடில் ஆர்டர் பிரச்சினை இருந்தபோதும் யூசுஃப்பை அணியில் வைத்திருக்காமல் அந்த அணி வெளியேற்றியது. அதன் பிறகு, அவரை ஏலத்தில் யாரும் எடுக்கவில்லை.

இந்நிலையில்தான், தற்போது ஓய்வு முடிவை அறிவித்திருக்கிறார் யூசுஃப் பதான். இரண்டு உலகக் கோப்பைகளை வென்ற தருணங்கள், சச்சினை தோளில் சுமந்த நிகழ்வு என பல நெகிழ்ச்சியான சம்பவங்களை நினைவு கூர்ந்துள்ளார் யூசுஃப்பதான்.

எத்தனையோ வீரர்கள் நீண்ட நெடிய காலம் ஆடி சாதனைகள் படைத்திருக்கிற போதிலும், யூசுஃப் பதான் கொஞ்ச காலமே ஆடியிருந்தாலும் மனதில் நிற்கும் படியான சில தரமான சம்பவங்களை செய்துவிட்டுதான் சென்றிருக்கிறார் என்பதால் கிரிக்கெட் ரசிகர்கள் அவரை என்றுமே மறக்க மாட்டார்கள்!

# காதலின் சின்னம் மௌசோலியம் (துருக்கி) ஹாலிகார்னஸஸ்

(14.03.2021 திகதிய தொடர்ச்சி)

அனைவரது பங்களிப்போடு மலை உச்சியில் கடலைப் பார்த்தபடி பிரம்மாண்டமாக கலை நேர்த்தியுடன் உருவானது.

சிற்பிகளும் கூலியாட்களும் கட்டடக் கலை நிபுணர்களும் மலை உச்சியிலேயே தங்கியிருந்து ஆர்ட்டமீசியாவின் ஆசைப்படி கல்லறையை மெருகேற்றி பேரழகாய் உருவாக்கினர். கல்லறையின் தளம் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டு அதன்மீது சிங்க உருவம் செதுக்கப்பட்ட கற்களால் ஆன படிகளை உள்ளிருந்து ஏறும்படி அமைத்தனர்.

வெளிப்புறச் சுவரில் கிரேக்கக் கடவுளர்களின் சிலைகள் வைக்கப்பட்டிருந்தன. நான்கு மூலைகளிலும் குதிரை மீதமர்ந்து காவல் காப்பது போல் போர் வீரர்களின் சிலைகள் நிர்மாணிக்கப்பட்டன.

மேற்புறத்தில் 36 தூண்களை நிறுவி இடையிடையே ரோஜாப் பூவின் வடிவம் செதுக்கப்பட்டிருந்தது. உள்ளிருந்த கல்லறை வைக்கப்பட்டிருந்த அஸ்தி கலயத்தைச் சுமந்திருக்கும் பேழையை தேரில் இழுத்து வருவது போல வடிவமைக்கப்பட்டது.

கணவன் இறந்து இரண்டரை வருடங்கள் மட்டுமே ஆர்ட்டமீஸியா உயிருடனிருந்தாள் என்றாலும் கல்லறை கட்டுவதில் ஈடுபட்டிருந்த சிற்பிகளும் நிபுணர்களும் தொடர்ந்து 10 ஆண்டுகள் அங்கேயே தங்கியிருந்து ஆர்ட்டமீஸியாவின் கனவுக் கல்லறையை கட்டி முடித்தனர்.

**மௌசோலியம் இடிந்து அழிந்து போனாலும் அதன் வடிவமைப்பிலேயே உருவாக்கப்பட்ட நவீன யுகத்தின் பல கட்டடங்கள் உலகெங்கும் உள்ளன.**

**குறிப்பாக நியூ ஜெர்சியில் உள்ள தேசிய ஆய்வுக் கட்டடம், நியூயோர்க்கில் உள்ள மகா கல்லறை, லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள கலையரங்கம், மெல்போர் னில் உள்ள புனித ஜார்ஜ் தேவாலயம், லண்டனில் உள்ள கலையரங்கம், செயிண்ட் லூயிஸில் உள்ள நீதிமன்றம், பிட்ஸ்பர்க்கில் உள்ள இராணுவ வீரர்களுக்கான நினைவு மண்டபம் ஆகியன மௌசோலியம் போலவே அதன் தாக்கத்தில் கட்டப்பட்டவை.**

**மௌசோலஸ்சின் உடன்பிறந்த சகோதரிதான் ஆர்ட்டமீசியா, அந்தக் காலத்தில் அங்கே சொந்த சகோதரியை மணந்து கொள்வது வழக்கம்.**



அகழ்வாராய்ச்சியில் மீட்கப்பட்ட கட்டட சிதறல்கள்

கல்லறை எப்போது அழிந்தது என்பது குறித்து சரியான தகவல் இல்லை. 1402 இல் ஏற்பட்ட நிலநடுக்கத்துக்குப் பின் அங்கு சென்ற ஜெருசேலத்தின் புனித ஜானின் பாதுகாவலர்கள் அந்தக் கல்லறை அடிந்து சிதிலமடைந்து கிடந்ததாகத் தங்கள் குறிப்புகளில் பதிவு செய்துள்ளனர்.

ஒருவேளை 1402 இற்கு முன் ஏற்பட்ட சிறுசிறு நிலநடுக்கத்தின் போதும் அக்கல்லறை கொஞ்சம் கொஞ்சமாக அழிந்திருக்கக் கூடும்.

பேராசிரியர் டோனால்ட் மற்றும் அவரது மாணவர்கள் அடங்கிய குழு அந்தக் கல்லறையின் எஞ்சிய பாகங்கள் மற்றும் கற்களை ஆய்வு செய்து மௌசோலியத்தின் வடிவம் குறித்து அனுமானமான வரைபடத்தை உருவாக்கியிருந்தார்கள். அவர்களின் ஆய்வின் மூலம் தான் மௌசோலியம் அந்தக் குறிப்பிட்ட இடத்தில்தான் இருந்ததென்று நிரூபிக்கப்பட்டது. (தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2259

### தர்மினி

மற்றவங்களைப் பற்றி நாம கேள்விப்படும் எல்லா விடயத்தையும் உண்மை மாதிரி பரப்பாதீர்



ஏன்னா ஒரு நேரம் அது உங்களுக்கும் நடக்கலாம்...

### ருக்குமணி

பொண்ணுக்கு மாப்பிள்ளை தேடிட்டு இருக்கன்...



Arts பஃச்சவனா பாருங்க, அவனுங்கதான் பொண்ணு சொல்றதை எல்லாம் மனப்பாடம் பண்ணி மறக்காம செய்வானுங்க...

### தருண்


டப்பா நிறைய ஒரு கிலோ ஐஸ்கிரீம் சாப்பிட்டாலும் வயிறு மட்டும்தான் நிறையுது...



மூடில இருக்கிற ஐஸ்கிரீமை சாப்பிட்டாத்தான் மனசு நிறையுது...

### கமலேஸ்

ஒரு சிலரின் அவமதிப்பும் உதாசீனமும் நம் இயல்பையே மாற்றிவிடுகிறது...!



### பாக்கியவதி

உலகத்திலயே Best Feeling எது தெரியுமா...



முதல் தடவையா வேலைக்குப் போய், அதுல கிடைக்கும் காசை எடுத்து வந்து, அம்மா கையில கொடுக்கிறது தான்.

### சரண்யா



நடிப்பவர்கள் கோபப்படுவதில்லை. கோபப்படுபவர்களுக்கு நடிக்கத் தெரிவதில்லை.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 246

## நாம் விழுந்து போகும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும்...


நாம் எவருக்கும் தாழ்ந்தவர்கள் அல்ல. அதே சமயம் நாம் மற்றவர்களிலும் பார்க்க உயர்ந்தவர்களும் அல்ல. அத்துடன் எம்மைப் போன்றும் வேறுயாரும் இல்லை. எனவேநாம் ஒவ்வொருவரும் தனித்துவமான தன்னிகரில்லாத தனிமனிதர்கள். வாழ்வின் வெற்றிக்கு மனமகிழ்வு. அமைதி. மன நிறைவு என்பனவே அடிப்படையாக அமைவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

எனவே இந்த அடிப்படைகளை இலக்கு வைத்து நாம் நகரவேண்டிய தேவை உள்ளது. எமது முயற்சிகள் வெற்றி பெறலாம். பெற்றால் மகிழ்ச்சி. அவைவெற்றி பெறாவிட்டால் அவற்றிலிருந்து கற்றுக்கொள்ளலாம். தோல்வி போன்ற அந்த தோற்றப்பாடுகள் தான் உண்மையில் நாம் கற்றுக்கொள்வதற்கு கிடைத்த சந்தர்ப்பங்கள். வாழ்வில் ஏற்படும் பின்னடைவுகள். தடங்கல்கள் மனிதனைபக்குவப்படுத்தும். நெறிப்படுத்தும் பலவற்றை கற்றுக் கொடுக்கும்.

நாம் எமது உண்மையான சிந்தனைகளுக்கும் நாம் செய்யும் தொழிலுக்கும் தலைவணங்குவோமாயின் பிறரிடம் மண்டியிட வேண்டிய தேவை இருக்காது. ஆனால் எம் மனச்சாட்சிக்கு எதிராக சூழ்நிலைகளுக்கும் அழுத்தங்களுக்கும் மண்டியிடுவோமாக இருந்தால் ஒவ்வொருவரிடமும் மண்டியிட்டு வாழ வேண்டிய பரிதாப நிலை ஏற்படலாம்.

எமது மனச்சாட்சியை புறக்கணித்து நாம் செய்யும் செயல்கள் வெற்றிக்கு வழி வகுக்காது. நாம் எமது மனச்சாட்சி சொல்வதைக் கேட்டு வாழ்க்கையை நெறிப்படுத்தி ஆகவேண்டும். காலநடைமுறைகள் எம்மை ஏளனம் செய்யக்கூடும், புறக்கணிக்கக்கூடும், நோகடிக்கக்கூடும், மோதக்கூடும், இதனூடேநாம் தடம் மாறாது பயணித்து ஆக வேண்டும்.

எமக்குள்ளேயும் எம்மவருக்குள்ளேயும் யாராலும் கண்டு கொள்ள முடியாத பல திறமைகள் புதையுண்டு கிடக்கின்றன. அதனை அடையாளப்படுத்த முயற்சி எடுப்போம். அதை அத்திபாரமாகக் கொண்டு முயற்சியை தொடருவோம். எமது இலக்கை



நோக்கியநகர்வுகள் தான் முக்கியமானவை. அதனை அடைய நாம் அதிக காலம் எடுப்பது தோல்வி என்று அர்த்தப்படாது. வாழ்வில் ஒவ்வொருதடங்கலும் ஏற்படும் பொழுது எம் நிலையை மீளாய்வு செய்து நாம் விட்டதவறுகளை அறிந்து திருத்தி எமது வாழ்க்கைப் பயணத்தை தொடர்வது ஆரோக்கிய நகர்வாக அமையும்.

நாம் செய்யும் அல்லது செய்த தவறுகளை நாமே அடையாளப் படுத்திக் கொள்வது உண்மையிலே கடினமானது. ஆனால் அதுதான் எமது வெற்றிப் பாதையின் பிரதான படிக்கல்லாகவும் அமைகின்றது. பிறர் விடும் தவறுகளை இலகுவில் அடையாளப் படுத்திக் கொள்ளும் திறமை எம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. ஆனால் நாம் விடும் தவறுகளை நாமே அடையாளப்படுத்தி திருந்திக் கொள்ள முயலும் மனநிலை எம்மிடம் இல்லை.அதனை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டி இருக்கிறது. இந்த முயற்சி எம்மை வாழ்வின் வெற்றிக்கு இட்டுச் செல்லும் படிக்கற்களாக அமையும்.

நாம்பலவற்றை கற்றுக்கொண்டே இருக்கின்றோம். கருவறையில் கருக்கொண்ட காலத்திலிருந்து நாம் கற்றுக்கொண்டே இருக்கின்றோம். வாழ்வில் பலவற்றை யாராலும் கற்பிக்க முடியாது. நாமாகத் தான் கற்றுக்கொள்ள வேண்டி இருக்கிறது. வாழ்வின் பாதையை எவ்வாறு செப்பனிடுவது என்பதையும் நாமாகத்தான் கற்றுக் கொள்ளவேண்டும்.

நாம் விழுந்து போகும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் சுமந்து நிற்கும் தன்னம்பிக்கை உணர்வு தான் எம்மை தாங்கி நிறுத்துகிறது. தன்னம்பிக்கை உணர்வும் அனுபவ முதிர்ச்சியும் எம் மனதை அமைதிப்படுத்தும் சோர்வை நீக்கும். எம் செயற்திறனையும் வல்லமையையும் பெருக்கும். இந்த அனுபவ முதிர்ச்சி வயதினால் அல்லது வயது போவதனால் ஏற்படுவது அல்ல. அவை எமது வாழ்வில் தோல்விகள் போலவும் கஸ்டங்கள் போலவும் தோற்றப்படும் நிகழ்வுகளினாலேயே ஏற்படுகிறது. எமது அனுபவ முதிர்ச்சியை வளர்த்துக் கொள்வதற்கு உதவும் இந்த சம்பவங்களை எமது வாழ்வின் தோல்விகளாக கருதி விட முடியாது.

என்றும் அன்றாட வாழ்வில் பொதிந்திருக்கும் நல்ல விடயங்களை அடையாளப் படுத்துவதில் கவனம் செலுத்துவோம். அவற்றை பாராட்டும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்வோம். இதன் பொழுது மகிழ்வும் நட்பும் தானாகப் பெருக்கெடுக்கும்.

அது பிறரை நல்லவற்றை செய்வதற்கு ஊக்கப்படுத்தும். எதிலும் குற்றம் குறை காணும் எண்ணம் எம்முள்ளே குடிகொண்டிருக்குமாயின் நாம் அமைதியாக வாழ முடியாது. மனதில் மகிழ்வு இருக்காது. அடிக்கடி கோபப்பட வேண்டிய சூழ் நிலைகள் ஏற்படும்.

வாழ்வின் மகிழ்வு. மன நிறைவு, ஆன்ம திருப்தி என்பன எதிலிருந்து எமக்கு கிடைக்கப் பெறுகின்றன? இவை பணத்திலோ. வசதிகளினாலோ் அல்லது பட்டங்களினாலோ. அந்தஸ்த்தினாலோ அல்லது பிறர் தருவதினாலோ கிடைக்கப் பெறுவது அல்ல. அவை எமது உள்ளுணர்விலிருந்து ஊற்றெடுத்து வரும் தன்னம்பிக்கை உணர்வில் தங்கியிருக்கிறது.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்